விலை ரூபா: 15.00

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி

பக்கங்கள்: இருபது — Valampurii

சங்கு 12 வள்ளுவர் ஆண்டு 2042 வைகாசி 27 வெள்ளிக்கிழமை (10.06.2011) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 173

MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
ராம்கோ
RAMCO
SLS 107 தரம் கொண்டதும்
100 வீத சாதாரண போட்லான்
சீமெந்து (O.P.C.) ராம்கோ சீமெந்து

## 'கச்சதீவை மீட்பது' தீர்மானம் நிறைவேற்றம்

(சென்னை)

தமிழக முதலமைச்சர் செல்வி ஜெயலலிதா ஜெயராமினால் நேற்று தமிழக சட்டசபையில் முன்வைக்கப்பட்ட கச்சத்தீவை மீட்பது குறித்த தீர்மானம் சட்டசபையில் ஒருமனதாக நிறைவேற்றப்பட்டுள்ளது.

இந்திய நாடாளுமன்றின் ஒப்புதல் இல்லாமல் இந்தியா, இலங்கை இடையே கடந்த 1974ஆம் ஆண்டு ஏற்பட்ட ஒப்பந்தம் அடிப்படையில் கச்சத்தீவு இலங்கைக்கு அளிக்கப்பட்டது.

இந்த ஒப்பந்தம் செல்லாது என அ.தி.மு.க. சார்பில் 2008இல் வழக்கு தொடரப்பட்டது. (20ஆம் பக்கம் பார்க்க)

# சூடுபிடிக்கும் ஈழத்தமிழர் விவகாரம்; தமிழக முதல்வரை சந்தித்தார் மேனன்!



(சென்னை)

உத்தியோகபூர்வ விஜயமொன்றை மேற்கொண்டு இன்று இலங்கைவரவுள்ள இந்திய தேசிய பாதுகாப்பு ஆலோசகர் சிவ்சங்கர் மேனனுக்கும் தமிழக முதலமைச்சர் செல்வி ஜெயலலிதாவுக்கும் இடையில் நேற்று மாலை அவசர சந்திப்பொன்று இடம்பெற்றுள்ளது.

இந்த சந்திப்பின் போது இலங்கைத் தமிழர் மறுவாழ்வு குறித்து அவர்கள் இருவருக்குமிடையில் கலந்துரையாடப்பட்டதாக தமிழக செய்திகள் தெரிவிக்கின்றன.

இலங்கையில் (20ஆம் பக்கம் பார்க்க)



# தமிழ்நாடு பற்றிக் கவலையில்லை; இந்திய அரசுடன் மட்டுமே தொடர்பு



## அமைச்சர் ஹெகலிய திட்டவட்டம்

(கொழும்பு)

இந்திய அரசாங்கத்துடன்தான் இலங்கை அரசுக்கு தொடர்புகள் இருக்கிறதே தவிர மாநில அரசுகள் பற்றி எமக்குக் கவலையில்லை என்று அமைச்சரவைப் பேச்சாளர் ஹெகலிய ரம்புக்வெல தெரிவித்துள்ளார். நேற்று அமைச்சரவை முடிபுகளை வெளியிடும் செய்தியாளர் சந்திப்பில் தமிழ்நாடு சட்டசபையில் நிறைவேற்றப்பட்டுள்ள இலங்கைக்கு எதிரான தீர்மானம் குறித்து கருத்து வெளியிட்டபோதே அமைச்சர் இதனைக் கூறினார். (20ஆம் பக்கம் பார்க்க)

# தமிழக சட்டசபை தீர்மானத்துக்கு இலங்கை அரசாங்கமே பொறுப்பு

## தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தெரிவிப்பு

(கொழும்பு)

இலங்கை மீது பொருளாதார தடை விதிக்க மத்திய அரசு நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என தமிழக சட்ட சபையில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்திற்கு அரசாங்கமே பொறுப்பேற்க வேண்டும் என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தெரிவித்துள்ளது.

தமிழக சட்ட சபையில் நேற்று முன்தினம் நிறைவேற்றப்பட்ட தீர்மானம் தொடர்பில் கருத்து தெரிவிக்கும் போதே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பேச்சாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான சுரேஷ் பிரேமச்சந்திரன் இவ்வாறு கூறியுள்ளார். ஐக்கிய நாடுகள் சபையின் செயலாளர் நாயகம் பான் கீ மூனின் நிபுணர்கள் (20ஆம் பக்கம் பார்க்க)

## ஜூலை 12 இல் தபால் மூல வாக்களிப்பு

(கொழும்பு)

64 உள்ளூராட்சி சபைகளுக்கான தபால் மூல வாக்களிப்பு ஜூலை 12ஆம் திகதி நடைபெறும் என தேர்தல்கள் செயலகம் நேற்று வியாழக்கிழமை அறிவித்துள்ளது.

உள்ளூராட்சி சபைகளுக்கான தேர்தல் ஜூலைமாதம் 23ஆம் திகதி நடைபெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ச-5)

# இலங்கை வங்கிக் கிளையில் கொள்ளையர்கள் அட்டகாசம்

## நேற்று முன்தினம் வேலணையில் சம்பவம்


(வேலணை)

இலங்கை வங்கியின் வேலணைக்கிளையில் நேற்று முன்தினமிரவு பல இலட்சம் ரூபாய் பணமும் நகைகளும் கொள்ளையிடுவதற்கான பாரிய முயற்சி பயனற்று கைவிடப்பட்டுள்ளது.

இச்சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது, இலங்கை வங்கியின் தீவகத்திற்கான கிளை வேலணை வங்களாவடியில் இயங்கி வருகிறது.

இக்கிளையை நேற்றுமுன்தினம் மாலை 5.50 மணியளவில் முகாமையாளர் மூடிவிட்டு வந்துள்ளார்.

இந்நிலையில் நேற்றுக்காலை 7.00 மணியளவில் கிளையின் வெளி வளாகத்தைச் சுத்திகரிப்பதற்காகச் சென்ற சுத்திகரிப்பாளர் முன்கதவு (20ஆம் பக்கம் பார்க்க)



இராணுவத்தில் 25 வருடங்கள் சேவையை பூர்த்திசெய்த சிரேஷ்ட அதிகாரிகளில்ஒருவரான வடமாகாண ஆளுநர் ஜீ.ஏ.சந்திரசிறிக்கு 'விசேட சேவை வீபூசண விருது' ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவால் வழங்கி கௌரவிக்கப்பட்டது. ஆளுநர் ஜனாதிபதியிடமிருந்து விருதைப் பெற்றுக்கொள்வதைப் படத்தில் காணலாம்.

(படம்: என்.குமார்)

**Study & Work in UK and Canada**
Intake Get Register Now
Collecting the application until March 31st 2011
start the academic on August 2011
இறுதிச் சந்தர்ப்பம் IELTS தேவையில்லை
Administration & Documentation
என்பன வெற்றிகரமான முறையில் எங்களால் செய்து தரப்படும்.
ஐரோப்பிய நாடுகளுக்கான விஸா பெறுவதற்கான Sponsorship
பிரச்சினையா? உடனடியாக ஏற்பாடு செய்து தரப்படும்.
சகல தொடர்புகளுக்கும்: 0729994777
London City College
No.01, Deanston House, Deanston Place, Colombo-03
(C-2291)

## தற்காலிக இணைப்பிலுள்ள ஆசிரியர்களுக்கு வேதனம்

வவுனியா வடக்கு கல்வி வலயத்தில் நிரந்தரமாக கடமையாற்றி தற்காலிகமாக யாழ். மாவட்டக் கல்வி வலயங்களில் கடமையாற்றும் ஆசிரியர்களின் ஆனி மாத வேதனப்பட்டியல் யாழ். கல்வி வலய நிதிக் கிளைக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளது. குறிப்பிட்ட ஆசிரியர்கள் யாழ். கல்வி வலயத்தில் எதிர்வரும் 17ஆம் திகதிக்கு முன்னர் வேதனப்பட்டியலில் ஒப்பமிடுமாறு யாழ். வலயக் கல்விப் பணிப்பாளர் கேட்டுள்ளார். (ச)

**வர்த்தகப் பெருமக்களே...**
பெறுமதிமிக்க உங்கள் வியாபார நிறுவனங்களை இலகுவாகப் பதிவு செய்து, அதற்குரிய கௌரவத்தையும் உத்தரவாதத்தையும் பெற்றுக் கொள்ளுங்கள்.
தொடர்புகளுக்கு:-0729994777
(C-2290

# குருதி சிந்த காரணமான 13 ஆவது திருத்தம்!

**டெய்லி மிரர் பத்திரிகையில் கோமனி ஜயசிறி என்பவர் எழுதிய இக் கட்டுரையில் தெரிவிக்கப்பட்டுள்ளவற்றில் முக்கியமான சில பகுதிகள் இங்கு தரப்பட்டுகின்றது.**

13ஆவது எண் பொதுவாக துரதிர்ஷ்டமான எண்ணாக பார்க்கப்படும். அதுபோலவே, அரசியலமைப்புக்கான 13ஆம் சட்டத்திருத்தம் பலன் எதனையும் ஏற்படுத்தவில்லை. இந்திய- இலங்கை அரசுகளுக்கிடையே ஏற்படுத்தப்பட்ட இவ் ஒப்பந்தத்தை தன்னை அரங்கிலிருந்து இழுத்து அகற்றுவதற்கான ஒரு கயிறாகவே இலங்கை அரசு கருதியது.

இந்திய மேலாதிக்கத்தின் தவறான வழிகாட்டலாகப் பார்க்கப்பட்டுவந்த 13 ஆம் சட்டத் திருத்தத்திற்கான ஒப்பந்தம் கைச்சாத்தானபொழுது, அன்றை பாதுகாப்பு அமைச்சர் லலித் அதுலத்முதலி அந்நிகழ்வை புறக்கணித்தார். அத்துடன் மகிந்த ராஜபக்ஷ அதனை எதிர்த்துப் போராட வீதியில் இறங்கினார்.

இலங்கையின் ஜனாதிபதி 13 ஆம் சட்டத்திருத்த ஒப்பந்த நிகழ்விலிருந்தும் அதனைத் தொடர்ந்து நடந்த இந்திய அமைதிப்படையின் வருகையிலிருந்தும் பாடம் கற்றுக்கொண்டார் என்றே தெரிகிறது. இந்திய அமைதிப்படையின் வருகை, வங்கதேச பிரிவினைக்குப் பிறகு இந்திய அரசு மேற்கொண்ட வெளிநாட்டுத் தலையீடாக இருந்தது.

மகிந்த ராஜபக்ஷ, 13ஆம் சட்டத்திருத்த ஒப்பந்தம் கைச்சாத்தானதைத் தொடர்ந்து நடந்த தென் இலங்கைக் கலவரத்தையும் அதனால் சிங்களவர்கள் சிந்திய இரத்தத்தையும் வெகு எளிதாக மறந்துவிடமாட்டார்.

1987ஆம் ஆண்டு வடமராட்சியில் விடுதலைப்புலிகளின் தலைவர் பிரபாகரன் தனிமைப்படுத்தப்பட்டபோதும் கைது செய்யப்படவில்லை. அன்றைய காலத்தில் இளம் அதிகாரியாக இருந்த கோத்தபாய ராஜபக்ஷ, இந்திய அமைதிப்படையின் ஆதிக்கத்தை அமைதியாகவே வேடிக்கை பார்த்து நின்றார். அந்த அமைதி 22 ஆண்டுகள் நீடித்தது எனலாம். புலிகளுக்கு எதிரான போர்



முடியும்வரையிலாவது இந்தியாவை எதிர்ப்பில்லா நண்பனாக வைத்திருக்கவேண்டிய தேவையினை அவர் உணர்ந்திருந்தார்.

இலங்கை இராணுவம் அன்று இந்தியப் படையின் கோர முகத்திற்கு அடிபணிந்து மண்டியிட்டு வட- கிழக்கில் இருந்து வெளியேறியது. இந்தியப் படையினர் பலரும் இந்த 13ஆம் சட்டத்திருத்தம் நிறைவேற வேண்டும் என உயிரையே விட்டனர். ஆனால் இந்தியர்களுக்கு அவ்வுயிர்கள் மலிவானதாகவேயிருந்திருக்கிறது என்பதையே காலம் காட்டுகிறது.

புலிகள் தமது துப்பாக்கிகளை இந்திய அமைதிப் படைக்கு எதிராக திருப்பினர். இந்திய- இலங்கை ஒப்பந்தத்தின் சூத்திரதாரிகளான ராஜீவ் காந்தியையும், காமினி திஸநாயக்கவும் படுகொலை செய்யப்பட்டனர். மேலும் 13ஆவது சட்டத்தை நாடாளுமன்றத்தில் கொண்டுவந்த லலித் அத்துலத்முதலியும் புலிகளால் படுகொலை செய்யப்பட்டார்.

விடுதலைப்புலிகள் இயக்கத்தைச்சேர்ந்த பிரபாகரனும், பொட்டு அம்மானும் ராஜீவ் காந்தி படுகொலையில் குற்றம் சாட்டப்பட்டனர். 13 ஆவது திருத்தமும் இந்திய- இலங்கை ஒப்பந்தமும் இடம்பெறாது போயிருந்தால் ராஜீவ் காந்தி உயிரோடு இருந்திருக்கலாம்.

வன்னிப் போரின்பொழுது தமிழக உறவுகள் நடத்திய போராட்டம் தமிழக வாக்காளர்களை கவரவில்லை. மத்திய அரசையும் அசைக்கவில்லை. இந்திய உடையில் இருந்த வெள்ளைப் பெண்ணின் அரசியல் தாக்கம் மாறக்க முடியாத காரணம்.

13ஆவது திருத்தம் இதுவரை இல்லாத அளவு குருதியை இந்த மண்ணில் சிந்தக் காரணமாகிவிட்டது மட்டுமன்றி அரசியல் நல்லிணக்கத்திற்குப் பதிலாக பிரச்சினையை மேலும் தூண்டிவிடுவதாகவே அமைந்துவிட்டது.

இந்திய உளவுத்துறை மற்றும் இலங்கையில் இருக்கும் இந்திய உயர்ஸ்தானிகராலயத்தின் ஆலோசனையின் பேரிலேயே இலங்கைக்கான இந்திய அரசியல் கணக்கு டெல்லி வெளியுறவு அலுவலகத்தில் தீட்டப்பட்டு வருகிறது.

இந்திய, இலங்கையினர் பலரின் இரத்தங்கள் சிந்தப்பட்ட பிறகும் இந்தியா தனது சுய கௌரவத்திற்காக இலங்கைக்கான அரசியல் விளையாட்டை விளையாடி வருகிறது.

இவ்வாறு கட்டுரையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## கும்பாபிஷேகம்

(காரைநகர்)

காரைநகர் கள்ளித்தெரு அண்டவேல் பிள்ளையார் தேவஸ்தான புனராவர்த்தன சம்புரோகண ஏக குண்டல மகா யாக பிரதிஷ்டா கும்பாபிஷேகம் எதிர்வரும் 20ஆம் திகதி திங்கட்கிழமை பகல் 10.00 மணி முதல் 11.00 மணிவரையான சுப புண்ணிய வேளையில் நடைபெறும்.

அதற்கு முதல் நாள் 19ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை பகல் 10.00 மணி முதல் மாலை 3.00 மணி வரை அடியார்கள் எண்ணெய் காப்புச் சாத்துதல் இடம்பெறும். (ச-8)

## வற்றாப்பளைக்கு விசேட பஸ் சேவை

(யாழ்ப்பாணம்)

வற்றாப்பளை கண்ணகை அம்மன் ஆலய வருடாந்த பொங்கல் உற்சவத்திற்கான விசேட பேருந்து சேவைகள் நடத்தப்படும் என வட பிராந்திய போக்குவரத்து சபையின் பிராந்திய முகாமையாளர் கே.கேதீசன் அறிவித்துள்ளார்.

இ.போ.ச.வட பிராந்திய சாலைகளால் வற்றாப்பளை கண்ணகை அம்மன் ஆலய வருடாந்த பொங்கல் உற்சவத்தில் பக்தர்கள் கலந்து கொள்வதற்கு வசதியாக நாளை மறுதினம் 12ஆம் திகதி முதல் 14 ஆம் திகதி வரை யாழ்ப்பாணம், காரைநகர், பருத்தித்துறை போன்ற இடங்களில் இருந்து பரந்தன், புதுக்குடியிருப்பு ஊடாக வற்றாப்பளை கண்ணகை அம்மன் ஆலயம் வரை விசேட பேருந்து சேவை மேற்கொள்ளப்படும்.

கிளிநொச்சி, வவுனியா சாலைகளால் மாங்குளம், நெடுங்கேணி, ஊடாகவும் மன்னார் சாலையால் திருக்கேதீஸ்வரம், முழங்காவில், பூநகரி, பரந்தன், புதுக்குடியிருப்பு ஊடாக ஆலயம் வரை பேருந்து சேவை பயணிகளின் வருகைக்கு ஏற்ப மேற்கொள்ளப்படும் என அவர் மேலும் கூறினார். (ச)

## விளாங்குளம் அம்மன் ஆலய திருவிழா இன்று


(மல்லாவி)

வன்னி விளாங்குளம் அம்மன் ஆலய திருவிழா இன்று காலை அலங்காரக் கொடிகம்ப ஏற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளது.

இக் கோவில் வன்னி மக்களின் பத்தினித் தெய்வ வழிபாட்டின் முக்கியமான ஆலயங்களில் ஒன்றாகும்.

அடியார்களின் நேர்த்திக்கடன்களான பறவைக்காவடி, தூக்குக்காவடி, கற்பூரச்சட்டி எடுத்தல், பாற்குடம் எடுத்தல், தீமிதித்தல் என்பவற்றுடன் இரவு அம்மன் ஆலய அலங்கார வீதியில் உலாவும், அதிகாலை பொங்கல் விழாவுடனும் நிறைவுபெறவுள்ளது.

காலை மாலை தொடர்ச்சியாக அன்னதானமும் நடைபெறவுள்ளது. இவ்வாலய திருவிழாவுக்கு நாட்டின் பல பாகங்களிலிருந்தும் பல ஆயிரக்கணக்கானவர்கள் வருகைதரவுள்ளனர். இவர்களுக்கான போக்குவரத்து வசதிகள், பாதுகாப்பு ஏற்பாடுகள் சிறந்தமுறையில் செய்யப்பட்டுள்ளதாக ஆலய பரிபாலன சபையினர் தெரிவித்துள்ளனர். இவ்வாலயம் மாங்குளத்திலிருந்து 4 கிலோமீற்றர் தூரத்தில் உள்ளமை குறிப்பிடத்தக்கது. (எ-15)



இலங்கை வங்கியின் வேலணைக் கிளையில் நேற்று முன்தினம் இடம்பெற்ற திருட்டு முயற்சியிலிருந்து தப்பிய இரும்புப் பெட்டகங்களைப் படத்தில் காணலாம்

அதிபர், ஆசிரியர்கட்கு!
தரம் 1 முதல் 5 வரையான
அத்தியாவசியக் கற்றல் தேர்ச்சிகள்
புத்தகம் உடன் பெற்றுக் கொள்ளவும்.
துயா அச்சகம்
138, நாவலர் றோட், மனோகராச் சந்தி, யாழ்ப்பாணம்.
T.P.: 0213737850
575, K.K.S. றோட், நாச்சிமார் கோவிலடி, யாழ்ப்பாணம்.
(5149)

**காணி விற்பனைக்கு**
இராமநாதன் வீதி, திருநெல்வேலியில் (பல்கலைக்கழகத்திற்கு முன்பாக) அமைந்துள்ள சிறிய வீட்டுடன் சுவடிய சுற்று மதில் கொண்ட 3 1/2 பரப்புக் காணி விற்பனைக்குண்டு.
தொடர்பு:- 0212220129
(5146)

**விற்பனைக்கு**
நல்ல நிலையிலுள்ள Cannon போட்டோக்கொப்பி இயந்திரம் விற்பனைக்குண்டு.
தொடர்புகளுக்கு:- 0212255176
(5145)

**தவறிவிட்டது**

மாதகல் வடக்கு, மாதகலைச் சேர்ந்த விநாயகமூர்த்தி கேதீஸ்வரன் என்பவரின் தேசிய அடையாள அட்டை (881682397 V), கூட்டுறவுச் சங்க அடையாள அட்டை மற்றும் றேடியோ மெக்கானிக் அடையாள அட்டை என்பன கடந்த வாரம் மாதகலுக்கும் பண்டத்தரிப்புக்கும் இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் மேற்படி விலாசத்தில் கொடுத்து உதவவும். (சி-3432)

**காணி விற்பனைக்கு**
பொலிகண்டியில் 3 பரப்புக் காணியும் (குருநாதர் கோயிலுக்கு அருகாமையில்), 2 பரப்புக் காணி பழைய சீனிக் கொம்பனிக்கு பின்புறமாகவும் உடன் விற்பனைக்குண்டு.
தொடர்புகளுக்கு:- 0778452097
(சி-3436)

## இன்று ஒரு தகவல்

# சந்தோஷப் பறவை

ஓர் அலுவலகத்தில் இரண்டு பேர் பேசிக் கொண்டிருந்தார்கள். "என்ன இது? நேற்று வரையில் இவர் நம்மிடம் சகஜமாகப் பேசிப் பழகிக் கொண்டிருந்தார். இன்றைக்கு நம்மைப் பார்த்ததும் பார்க்காதது போல் போகிறாரே...!" என்றார் ஒருவர்.

"ஒன்றுமில்லை... அவருக்கு இப்போது பதவி உயர்வு வந்துள்ளது. அதனால் நம்மிடம் நின்று பேசினால் அது அவருக்குக் கௌரவக் குறைச்சல் என்று நினைக்கிறார். அதுதான் அவர் இப்படிப் போகிறார்!'' என்றார் இன்னொருவர்.

சராசரி மனிதன் இது பான்ற சபலங்களுக்கு ஆளாவது சகஜம். ஆனால் சிலர் இப்படிப்பட்ட பாதிப்புக்கு உள்ளாவதில்லை. ஆனால் அது ரொம்ப அபூர்வம்.

இஸ்ரேல் தேசத்துக் கதை ஒன்று உண்டு.

ஒருகாலத்தில் அந்த நாட்டில் அரசனைத் தேர்ந்தெடுப்பது தெய்வத்தின் சாயலாக இருந்ததாம்.

ஒரு விசித்திரமான பறவை இருந்ததாம். அதற்கு 'சந்தோசப்பறவை' என்று பெயராம்.

ஏற்கனவே இருக்கும் அரசன் இறந்து போனால், உடனே அந்தப் பறவை வானவெளியிலிருந்து பறந்து வருமாம். அப்படி அது பறந்து வந்து யார் தலையில் முதலில் உட்காருகிறதோ, அவன்தான் அந்த நாட்டுக்கு ராஜாவாம்!

இது அங்கே வழக்கம்.

ஒரு சமயம் அந்த நாட்டின் ராஜா இறந்து போனார். எல்லோரும் ஆகாயத்தைப் பார்த்தார்கள். சந்தோஷப் பறவை பறந்து வந்தது. 'யார் தலையில் அது உட்காரப் போகிறதோ!' என்று அனைவரும் ஆவலோடு பார்த்துக் கொண்டிருந்தனர்.

அந்தப் பறவை நேராகப் பறந்து வந்து, அங்கே நின்று கொண்டிருந்த ஓர் அடிமையின் தலையில் போய் உட்கார்ந்தது.

அந்த அடிமை எந்தக் கோலத்தில் இருந்தான் தெரியுமா?

தோளில் மத்தளம்... இடுப்பில் ஆட்டுத்தோல் உடை. தலையில் இறகுகள் வைத்த தொப்பி!

வீடுகளில் ஏதாவது விசேஷம் என்றால் ஆடிப் பாடுபவன் அவன்.

யாராக இருந்தால் என்ன? சந்தோசஷப் பறவை உட்கார்ந்தால், உட்கார்ந்ததுதானே! அந்த அடிமையை உடனே அந்த நாட்டு மக்கள் அரசனாக ஏற்றுக் கொண்டார்கள்.

அரண்மனைக்கு அழைத்துச் சென்று அரியணையில் உட்காரவைத்தார்கள். அந்த அடிமை ராஜா என்ன செய்தான் தெரியுமா?

அரண்மனைக்குப் பக்கத்திலேயே ஒரு சிறிய குடிசை கட்டச் சொன்னான். அந்தக் குடிசைக்குள் தன்னிடமிருந்த மத்தளம், ஆட்டுத்தோல் உடை, தொப்பி போன்ற எல்லாவற்றையும் பத்திரமாக வைத்தான்! அதற்குப் பக்கத்திலேயே ஒரு பெரிய நிலைக் கண்ணாடியையும் வைத்தான்.

இவன் இப்படிச் செய்ததைப் பார்த்ததும்... அங்கிருந்த அமைச்சர்களுக்கெல்லாம் ஒரே ஆச்சரியம்.

இருந்தாலும் யோசனை செய்தார்கள்.

ஒரு நாட்டுக்கு அரசராக இருப்பவர் இப்படியெல்லாம் செய்வது அவர்களுக்குப் பிடிக்கவில்லை. அதனால் அவர்களெல்லாம் சேர்ந்து அரசனிடம் மெதுவாகக் கூறினார்கள்;

"அரசே! நீங்கள் தனியாக இருக்கும்போது கூட உங்களுடைய ராஜ கௌரவத்தைக் காப்பாற்றிக் கொள்ளத்தான் வேண்டும்!" என்று ஆலோசனை தெரிவித்தார்கள்.

அதற்கு அந்த அரசன், "அரசனாக ஆவதற்கு முன்பு நான் ஓர் அடிமையாகத்தான் இருந்தேன்! இப்போதும் அடிக்கடி அதை நினைவுப்படுத்திக் கொள்கிறேன்! அப்போதுதான் உங்களையும், மற்றவர்களையும் விட நான் உயர்ந்தவன் அல்ல என்பது எனக்கு உறைக்கும்! என் மனதிலும் அகங்காரம் உண்டாகாது!" என்று கூறினான்.

இது இஸ்ரேல் தேசத்துக் கதை.

அதனால்... நம்முடைய நாற்காலிகள் மாறலாம்! அதற்காக... நம்முடைய பண்பு மாறிவிடக் கூடாது. மனிதர்களுக்கு இடையே இருக்க வேண்டிய மரியாதை குறைந்து விடக் கூடாது.

*தென்கச்சி கோ சுவாமிநாதன்*

# பல்கலை மாணவர் தலைமைத்துவ பயிற்சிக்கு இரண்டாம் கட்டமாக 10 ஆயிரம் மாணவர்கள்

(கொழும்பு)

பல்கலைக்கழக மாணவர்களுக்கான தலைமைத்துவப் பயிற்சியின் இரண்டாம் கட்டம் எதிர்வரும் 17 ஆம் திகதி ஆரம்பமாவதுடன் இதில் 10 ஆயிரம் மாணவர்களை இணைத்துக் கொள்ள எதிர்பார்ப்பதாக உயர் கல்வி அமைச்சின் செயலாளர் கலாநிதி சுனில் ஜயந்த நவரட்ண தெரிவித்தார்.

முதற் கட்டப்பயிற்சிகள் 28 மத்திய நிலையங்களில் நடைபெற்றதுடன் வெற்றிகரமாக முடிவுற்றுள்ளது.

85 சதவீதமான மாணவர்கள் முகற் கட்டப் பயிற்சிகளில் பங்கேற்றனர் என தெரிவித்த அவர் இரண்டாம் கட்டப் பயிற்சியில் 6 ஆயிரம் மாணவர்களையும் 4 ஆயிரம் மாணவிகளுமாக 10 ஆயிரம் மாணவர்களை இணைத்துக் கொள்ளத் தீர்மானித்துள்ளதாகவும் இதற்கான அழைப்புக் கடிதங் கள் சம்பந்தப்பட்ட மாணவ மாணவியருக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாகவும் உயர் கல்வி அமைச்சு தெரிவித்துள்ளது.

இரண்டாம் கட்டப் பயிற்சிகளுக்கான சகல நடவடிக்கைகளும் பூர்த்தியடைந்துள்ளதாகவும் மதவாச்சி கடற்படைப்பயிற்சி மத்திய நிலையத்திலும் சேர்.ஜோன் கொத்தலா வல பாதுகாப்பு அகடமியிலும் இப்பயிற்சிகள் வழங்கப்படவுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். (ஸ்ரீ-2)

# க.பொ.த.உயர்தர மாணவர்களுக்கான பரீட்சை வழிகாட்டல் செயலமர்வு

(யாழ்ப்பாணம்)

க.பொ.த. உயர்தரப்பரீட்சை-2011 இற்கு தோற்றும் கணித, விஞ்ஞான பிரிவு மாணவர்களுக்கான பரீட்சை வழிகாட்டல் செயலமர்வு இன்று காலை 11 மணி முதல் 2.30 மணிவரை யாழ்.மத்திய கல்லூரி தம்பர் மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இச் செயலமர்வை துறைசார் கல்வியலாளர்கள், ஆசிரியர்கள், பல்கலைக்கழக விரிவுரையாளர்கள் இணைந்து நடாத்தவுள்ளனர்.

இதில் இரசாயனவியல் பாடம் தொடர்பாக வெற்றிகரமாக பரீட்சை எழுதும் நுட்பங்கள், வினாத்தாள் ஒழுங்கமைக்கப்படும் விதம், பாடத்தில் உள்ளடக்கப்பட்ட புதிய் விடயங்கள் பற்றி துறைசார் விரிவுரையாளர் வைத்திய கலாநிதி ஆர்.சிறிகரன் விளக்கவுரை வழங்கவுள்ளார்.

அத்தோடு பௌதீகவியல் பாடம் தொடர்பாக வெளியிடப்படும் கைநூலிற்கான விளக்கவுரை, கடந்தகால வினாத்தாள் ஆய்வு மற்றும் பரீட்சைக்கு விடையளிக்கும் விதம் தொடர்பான விளக்கங்கள் வழங்கப்படும்.

இச்செயலமர்வுக்கு பங்குபற்றும் மாணவர்கள் பௌதீகவியல் 1999 ஆம் ஆண்டு கடந்த கால வினாத் தாள் தொகுதியுடன் இன்று காலை 8.45 மணிக்கு முன்னரே மண்டபத்திற்கு சமுகளிக்குமாறும் யாழ். மாவட்ட 5 வலயத்திற்குட்பட்ட பாடசாலை மாணவர்களும், தனிப்பட்ட பரீட்சார்த்திகளும் இதில் கலந்து கொள்ளுமாறும் வேண்டப்படுகின்றனர். (ஸ்ரீ)

# குடாநாட்டு சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | நெல்லியடி | திருநெல்வேலி | சாவகச்சேரி |
|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 35 | 30 | 30 |
| உருளைக்கிழங்கு | 80 | 80 | 70 |
| பச்சைமிளகாய் | 60 | 60 | 60 |
| தக்காளி | 40 | 50 | 40 |
| மரவள்ளிக்கிழங்கு | 50 | 50 | 50 |
| கோவா | 60 | 70 | 60 |
| கரட் | 60 | 80 | 80 |
| பூசணி | 20 | 30 | 25 |
| புடோல் | 30 | 40 | 30 |
| வாழைக்காய் | 20-25 | 30 | 25 |
| சின்ன வெங்காயம் | 130 | 130 | 110 |
| பெரிய வெங்காயம் | 55-60 | 60 | 60 |
| பாகற்காய் | 70 | 110 | 80 |
| வெண்டிக்காய் | 35 | 60 | 40 |
| கருணைக் கிழங்கு | - | 100 | 90 |
| பயற்றங்காய் | 70 | 80 | 130 |
| லீக்ஸ் | 70 | 60 | 60 |
| பீற்றூட் | 65 | 80 | 80 |
| கறிமிளகாய் | 90 | 60 | 70 |
| முருங்கைக்காய் | 300 | 300 | 350 |
| போஞ்சி | - | 120 | 150 |
| கத்தரிதம்புள்ள | - | 20 | 20 |
| கீரை - 1 பிடி | 5-8 | 20 | 20 |
| தேசிக்காய் | 140 | 150 | 110 |
| தேங்காய் (ஒன்று) | 30-50 | 50 | 40 |

# இராசி பலன்

10.06.2011
(வைகாசி 27, வெள்ளிக்கிழமை)
சூரிய உதயம் காலை 5.54மணிக்கு
நவமி பிற்பகல் 2.38 மணிவரை
உத்தரம் முற்பகல் 9.35 மணிவரை
இராகுகாலம் 10.22-11.52 மணிவரை
சுபநேரம் 5.52-7.22 மணிவரை
பாபகர தசமி, சித்தாமிர்தம்.

**மேடம்** விருந்து விழாக்களில் கலந்து சிறப்பிக்கும் நாள், அன்பு நண்பர்களின் சந்திப்பு இடம் பெறலாம், உற்சாகத்துடன் செயற்படுவீர்கள், இறைவழிபாட்டில் ஆர்வம் காட்டுவீர்கள்.

**இடபம்** சுற்றத்தார் வரவால் சுகம் கூடும் நாள், குடும்பத்தினரின் பேரன்பை பெறுவீர்கள், தன வருவாய் திருப்தியளிக்கும், புத்திரரால் பெருமையடைவீர்கள்.

**மிதுனம்** பொன்னான நாள், பிறர் போற்றும் வகையில் காரியம் ஒன்றைச் செய்வீர்கள், பிரியமான சிலரின் சந்திப்பு இடம்பெறலாம், பெற்றோர் நலனில் கூடிய அக்கறை காட்டுவீர்கள்.

**கடகம்** பிற இனத்தவரால் பெருமை சேரும் நாள், தொழில் முன்னேற்றப் பாதையில் செல்லும், உடன்பிறப்புக்கள் வழியில் உதவிகள் கிடைக்கலாம், தொல்லை தந்தவர்கள் விலகுவர்.

**சிங்கம்** தெய்வ நம்பிக்கை அதிகரிக்கும் நாள், பொருட்கள் வாங்குவதில் ஆர்வம் காட்டுவீர்கள், தொழில் வளர்ச்சி மேலோங்கும், வெளி வட்டாரத்தில் மதிக்கப்படுவீர்கள்.

**கன்னி** சுப செய்திகள் ஏற்படும் நாள், ஆரோக்கியம் சம்பந்தப்பட்ட வகையில் அச்சுறுத்தல் ஏற்பட்டு அகலும், பெரியோர்கள் சந்திப்புண்டு, தெய்வ சிந்தனை மேலோங்கும்.

**துலாம்** இல்லத்திலும், உள்ளத்திலும் அமைதி கூடும், நாணயத்தோடு நடந்து கொள்வதால் அனைவரும் பாராட்டுவார்கள், பிரியமான பயணங்கள் ஏற்படலாம்.

**விருச்சிகம்** மதிப்பும், மரியாதையும் உயரும் நாள், தொலைபேசி வழித் தகவல் மகிழ்ச்சி தரும், தொழில் நலன் கருதி எடுத்த முயற்சிகள் வெற்றி தரும்.

**தனுசு** தொழில் முன்னேற்றத்திற்கு மங்கையர் வழி ஒத்துழைப்பு கிடைக்கலாம், எடுத்த காரியத்தை எளிதில் செய்து முடிப்பீர்கள், ஆரோக்கியமான நாள்.

**மகரம்** தைரியத்தோடு செயற்பட்டு சாதனை படைக்கும் நாள், நீண்ட நாளைய பிரச்சினையொன்று நல்ல முடிவுக்கு வரும், வருமானம் திருப்தி தரும்.

**கும்பம்** இறைவழிபாட்டால் இன்பம் காண வேண்டிய நாள், அலைச்சல்கள் அதிகரிக்கும், அனைவரையும் அனுசரித்து செல்வது நல்லது, பிரயாண பயமுண்டு.

**மீனம்** மனதிற்கினிய சம்பவங்கள் நடைபெறும் நாள், வாழ்க்கைத் துணை வழியே வரவு வந்து சேரலாம், கனவு பலிதமுண்டு, தொழில் நலன் கருதி எடுத்த முயற்சி வெற்றி பெறும்.

வளவன்

# பதவி உயர்வு



யாழ்பல்கலைக்கழக விலங்கியற்றுறை சிரேஷ்ட விரிவுரையாளராகவும் மீன்பிடியியல் துறைத் தலைவராகவும் கடமையாற்றிய கலாநிதி திருமதி சிவசாந்தினி குகநாதன் 2009 ஆம் ஆண்டு ஒக்டோபர் முதல் விலங்கியலில் இணைப் பேராசிரியராகப் பதவி உயர்வு பெற்றார்.

திருகோணமலையை பிறப்பிடமாகக் கொண்ட இவர் திருகோணமலை புனித மரியாள் கல்லூரியிலிருந்து க.பொ.த. உயர்தரப்பரீட்சைக்கு தோற்றி உயிரியல் விஞ்ஞான கற்கை நெறிக்கு யாழ்.பல்கலைக்கழகத்துக்கு தெரிவாகினார். விலங்கியல் துறையில் சிறப்பு பட்டம் பெற்ற இவர் முதல் வகுப்பில் சித்தியெய்தினார். பின்னர் தனது முதுவிஞ்ஞானமானி (MSC) பட்டத்தினை ஐக்கிய லண்டனிலுள்ள University College of North Wales இலும் கலாநிதிப் பட்டத்தினை(ph.D) இந்தியாவின் அண்ணாமலைப் பல்கலைக்கழகத்திலும் தொடர்ந்தார்.

(ஸ்ரீ-2)




# கௌரவிப்பு விழாவும் கருத்தரங்கும்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் சயன்ஸ் கிளப்பின் கௌரவிப்பு விழாவும் கருத்தரங்கும் இன்று வெள்ளிக்கிழமை காலை 9 மணி தொடக்கம் 2.30 மணிவரை யாழ். மத்திய கல்லூரி தம்பர் மண்டபத்தில் நடைபெறவுள்ளது.


இந்நிகழ்வில் காலை 9 மணி தொடக்கம் 11 மணிவரை அண்மையில் ஓய்வு பெற்ற கல்விப்பணிப்பாளர் திருமதி. அ.வேதநாயகத்தின் சேவை நலன் பாராட்டு விழாவும் விருது வழங்கலும் நடைபெறும்.

அத்துடன் ''கோண உந்தம் ஒரு புதிய பார்வை'' கைநூலுக்கான ஆய்வுரை வழங்கலும் நூல்வெளியீடும் இடம் பெறும்.

அத்துடன் உயர்தர மாணவர்களுக்கான பௌதிகவியல், இரசாயனவியல் கருத்தரங்கும் காலை 11 மணி தொடக்கம் பிற்பகல் 2.30 மணி வரை நடைபெறவுள்ளது.

(ஸ்ரீ-2)

# நெல்லியடி ம.ம. வித்தியாலய கலையரங்கு திறப்பு விழா



(கரவெட்டி)

பொதுக்கல்வி செயற்றிட்டம், நவோதய செயற்றிட்டத்தின் நிதியுதவியுடன் சுமார் 2 1/2 கோடி ரூபா செலவில் புதிதாக நிர்மாணிக்கப்பட்ட நெல்லியடி மத்திய மகா வித்தியாலய கலையரங்கு எதிர்வரும் 13 ஆம் திகதி திங்கட்கிழமை நண்பகல் 12 மணிக்கு பாடசாலை அதிபர் எஸ்.சேதுராஜா தலைமையில் திறந்து வைக்கப்படவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினர்களாக பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிருத்தி அமைச்சர் கே.என்.டக்ளஸ் தேவானந்தா, வடமாகாண ஆளுநர் ஜி.ஏ.சந்திரசிறி ஆகியோர் கலந்து கொண்டு சிறப்பிக்கவுள்ளனர்.

(ஸ்ரீ-24)

# தாலிக்கொடியை கொள்ளையடித்த நபர்களுக்கு விளக்கமறியல்

(கரவெட்டி)

சரசாலைப்பகுதியில் பெறுமதியான தாலிக் கொடியை மோட்டார் சைக்கிளில் வந்து கொள்ளையடித்த இரு சந்தேக நபர்களை விளக்கமறியலில் வைக்குமாறு சாவகச்சேரி நீதிமன்றம் நேற்று உத்தரவிட்டுள்ளது.

சாவகச்சேரியில் சரசாலைப்பகுதியில் கடந்த மே மாதம் 7 ஆம் திகதி வீதியால் சென்ற பெண்ணின் 4 இலட்சத்து 60 ஆயிரம் ரூபா, பெறுமதியான தாலிக் கொடியை மோட்டார் சைக்கிளில் வந்த இருவர் கொள்ளையடித்த சம்பவம் தொடர்பாக இருவரை கைது செய்த சாவகச்சேரி பொலிஸார் நேற்றைய தினம் சாவகச்சேரி நீதிவான் நீதிமன்ற பதில் நீதிபதி செல்லையா கணபதிப்பிள்ளை முன்னிலையில் அடையாள அணிவகுப்பிற்காக ஆஜர்படுத்தினர்.

இருவரையும் அடையாளப்படுத்தியமையால் இருவரையும் எதிர்வரும் 23 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிபதி உத்தரவிட்டார்.

(ஸ்ரீ-24)

# 40 வயதுக்குட்பட்ட ஆண் ஆசிரியர்களின் விபரங்கள் கோரப்பட்டுள்ளன

(அல்வாய்)

யாழ்ப்பாணம், வலிகாமம், வடமராட்சி, தென்மராட்சி, தீவகம், கிளிநொச்சி, துணுக்காய், முல்லைத்தீவு, மன்னார், மடு, வவுனியா வடக்கு, வவுனியா தெற்கு ஆகிய வலயப் பாடசாலைகளில் கடமைபுரியும் 40 வயதுக்குட்பட்ட ஆண் ஆசிரியர்களின் விபரம் வடமாகாண ஆளுநரின் அறிவுறுத்தலுக்கமைவாக வடமாகாண கல்வித் திணைக்களத்தினால் கோரப்படுகின்றது.

மேற்குறித்த ஆசிரியர்களில், 40 வயதுக்கு உட்பட்டவர்கள், சிறந்த உடல் உள ஆரோக்கியம் உள்ளவர்கள், விளையாட்டுத் துறை, பொதுவேலைகளில் ஈடுபாடு உள்ளவர்கள், துறைசார்ரீதியாக உள்நாட்டில் அல்லது வெளிநாட்டில் புலமைப்பரிசில் கிடைக்கும் பட்சத்தில் அதனைப் பெற்று பயன் படுத்தக்கூடியவர்கள் போன்ற தகைமைகளைக் கொண்டிருக்கும் 50 ஆண் ஆசிரியர்களின் விபரங்களை இணைக்கப்பட்டுள்ள மாதிரிப் படிவத்துக்கு அமைவாக தயாரித்து உடன் அனுப்பி வைக்குமாறு வடமாகாண கல்விப் பணிப்பாளர் வலயக் கல்விப் பணிப்பாளர்களுக்கு அறிவித்துள்ளார்.

(ஸ்ரீ-19)

# அறிவுசார் கண்காட்சி

(சாவகச்சேரி)

சாவகச்சேரி பிரதேச சபையின் சரசாலை பொதுநூலக ஒழுங்குபடுத்தலில் உலக விழிப்புணர்வு நிறுவகம் வழங்கும் பன்முகத் தகவல் அறிவு விருத்திக்கான அறிவுசார் கண்காட்சி எதிர்வரும் 13 ஆம் திகதி தொடக்கம் 15 ஆம் திகதி வரை மட்டுவில் கமலாசினி வித்தியாலயத்தில் நடைபெறவுள்ளது.

இதற்கான ஆரம்ப நிகழ்வு எதிர்வரும் 13 ஆம் திகதி காலை 9 மணிக்கு சரசாலை பொது நூலக நூலகர் இ.தர்மலிங்கம் தலைமையில் மேற்படி பாடசாலை மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்விற்கு பிரதம விருந்தினராக தென்மராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் கு.பிறேமகாந்தன் கலந்து சிறப்பித்தார்.

சிறப்பு விருந்தினர்களாக சாவகச்சேரி பிரதேச சபை செயலாளர் செல்வி பி.தர்சினி. விழிப்புணர்வு நிறுவக செயலாளர் த.தனபாலசிங்கம், கமலாசினி வித்தியாலய அதிபர் எஸ்.பேரின்பநாதன் ஆகியோர் கலந்து சிறப்பிக்கவுள்ளனர்.

(ஸ்ரீ-29)

# இலவச யோகாசன வகுப்புக்கள் ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களம் நடத்தும் இலவச யோகாசன வகுப்புக்களில் புதிய பிரிவுகள் நல்லூர் நாவலர் மணி மண்டபத்தில் நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை காலை 7.30 மணிக்கு ஆரம்பமாகவுள்ளது.

ஆண்கள், பெண்கள், நோயாளர்களுக்கு என. தனிப்பிரிவுகளாக வகுப்புக்கள் நடைபெறும். யோகாசனம் செய்ய விரும்புவர்கள் தேவைகளைக் கருத்திற் கொண்டு பயிற்சி முறை நிர்ணயிக்கப்படும்.

பயிற்சியின் நிறைவில் பரீட்சை நடத்தப்பட்டு பரிசில், சான்றிதழ் வழங்கப்படும் எனவும் மேலதிக விபரங்களை 02122238 93 என்ற தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொண்டு பெற்றுக் கொள்ள முடியும் எனவும் இந்து கலாசார உத்தியோகத்தர் எஸ்.உதயபாலன் தெரிவித்தார். (ஸ்ரீ)

# கும்பாபிஷேகம்

(யாழ்ப்பாணம்)

அச்சுவேலி வருணன் ஸ்ரீ காளிகா தேவி சமேத வீர பத்திரசுவாமி தேவஸ்தான மஹா கும்பாபிஷேகம் நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை காலை 7.31 மணி முதல் 8.15 மணிவரையான சுபமுகூர்த்தவேளையில் நடைபெறவுள்ளது.

இதில் நாளை சனிக்கிழமை காலை 8 மணி முதல் மாலை 3 மணிவரை பக்தர்கள் எண்ணெய் காப்பு சாத்த முடியும். (ஸ்ரீ)

* * * * * *


(அல்வாய்)


புலோலி மத்தி அத்தியடிப் பிள்ளையார் கோவில் மகா கும்பாபிஷேகம் நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை அதிகாலை 5.53 மணி தொடக்கம் 6.32 மணி வரையான சுபவேளையில் நடைபெறவுள்ளது.

இதில் எண்ணெய் காப்பு சாத்தும் நிகழ்வு நாளை சனிக்கிழமை காலை 6 மணி முதல் மாலை 4 மணி வரை நடைபெறும்.

(ஸ்ரீ-19)







வடமாகாண குடும்பநல உத்தியோகத்தர்களுக்கான ஊக்குவிப்பு தொகை மற்றும் நியமனம் தொடர்பான கலந்துரையாடல் நேற்று யாழ்.வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெற்றது. இதில் வடமாகாண சுகாதார அமைச்சின் செயலாளர் எஸ்.ரவீந்திரன் தலைமையுரையாற்றுவதையும் வடமாகாண ஆளுநர் ஜீ.ஏ.சந்திரசிறி உரைநிகழ்த்துவதையும் குடும்பநல உத்தியோகத்தர்கள் அமர்ந்திருப்பதையும் படங்களில் காணலாம்.

(படங்கள்:-என்.குமார்)

# பிரிட்டனில் அரசியல் தஞ்சம் நிராகரிக்கப்பட்ட 300 இலங்கையர்கள் நாடு கடத்தப்படவுள்ளனர்

பிரிட்டனில் அரசியல் தஞ்சக் கோரிக்கை நிராகரிக்கப்பட்ட சுமார் 300 இலங்கையர்கள் எதிர்வரும் 16 ஆம் திகதி நாடு கடத்தப்படவுள்ளதாக தெரியவந்துள்ளது. இவர்களை பிரிட்டனிலிருந்து வெளியேற்றுவதற்காக பிரிட்டன் எல்லை முகவரகம் குறித்து விசேட விமானம் ஒன்றை ஏற்பாடு செய்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

பிரிட்டனைச் சேர்ந்த மனித உரிமை வழக்குரைஞர் ஒருவர் தனது வாடிக்கையாளர்கள் சிலருக்கும் பிரித்தானிய எல்லை முகவரகத்தினால் இந்த வெளியேற்றம் குறித்து அறிவிக்கப்பட்டுள்ளதாக கூறியுள்ளார்.

நாடு கடத்தப்படவுள்ள இலங்கையர்களில் பெரும்பாலானோர் தமிழர்கள் எனத் தெரிய வருவதாகவும் அவர் தெரிவித்தார்.

தம்மை நாடு கடத்துவதிலிருந்து தடுப்பதற்கு கடைசிநேர பிரயத்தனங்களில் மேற்படி இலங்கையர்கள் ஈடுபட்டுள்ளனர். எனினும் மேற்படி விமானம் ஜூன் 16 ஆம் திகதி மாலை 5 மணிக்கு பிரிட்டனிலிருந்து புறப்படுவதற்கு திட்டமிடப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

1980களின் முற்பகுதியிலிருந்து பல்லாயிரக்கணக்கான இலங்கையர்கள் பிரிட்டனுக்கு அகதிகளாக சென்றுள்ளனர்.

கனடாவுக்கு அடுத்தபடியாக அதிக எண்ணிக்கையான புலம்பெயர்ந்த தமிழர்களை கொண்ட நாடாக பிரிட்டன் உள்ளது.

அங்கு சுமார் ஒரு இலட்சத்து 20 ஆயிரம் இலங்கைத் தமிழர்கள் வசிப்பதாக மதிப்பிட்டுள்ளது. (ஸ்ரீ-2)


## இணுவில் கந்தசுவாமி கோயில் மஹோற்சவம்



நான்காம் திருவிழா (10.06.2011)

### ஐம்புலன் அடக்கும் ஆற்றலை அருள்வாய்

பல்லவி

ஐம்புலன் அடக்கும் ஆற்றலை அருள்வாய்
அம்புலியில் இணுவை அமரும் வடிவேலா

அனுபல்லவி

சும்புமகிழ் சுதனே சண்முகனே குகனே
நம்பும் அடியவர்க்கு நல்லருள் செய்பவனே

சரணம்

பாயும் மனக்குரங்கு பாய்ந்து பாய்ந்து திரிந்து
ஓயும் தன்மை மறந்து உழலுதே என் செய்வேன்
நோயும் பிணிகள் வந்து நேர்ந்திடா வண்ணம் காப்பாய்
தாயும் தந்தையும் குருவும் நீயே முருகவேளே.

அமரர் பிரம்மஸ்ரீ வீரமணிஐயர்

4 ஆம் திருவிழா உபயகாரர்

(5114)


# பூநகரியில் பனம்பொருள் உற்பத்தி பயிற்சி நிலையம் ஆரம்பிக்க திட்டம்

(பூநகரி)

பல ஆயிரக்கணக்கான பனந்தோப்புக்களைக் கொண்ட பூநகரி கௌதாரிமுனை கிராமசேவகர் பிரிவில் பனம் பொருள் உற்பத்தி நிலையம் ஒன்று பனை அபிவிருத்தி சபையால் ஆரம்பிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இது சம்பந்தமாக ஆரம்ப நடவடிக்கைகளை மேற்கொள்ளுமுகமாக பனை அபிவிருத்திச் சபைத் தலைவர் பசுபதி ஜீவரத்தினமும் அவரது குழுவினரும் கடந்த வாரம் கௌதாரி முனைப்பகுதிக்கு வருகை தந்து வேண்டிய நடவடிக்கைகளில் ஈடுபட்டதாக தெரிவிக்கப்படுகிறது. (ஸ்ரீ-84)


union assurance
Trust in your tomorrow, today.

## யூனியன் அஷ்யூரன்ஸ்

இலங்கையின் முன்னோடி காப்புறுதி நிறுவனமான யூனியன் அஷ்யூரன்ஸ் தனது புதிய கிளை அலுவல்கத்தை சுன்னாகம் பிரதேசத்தில் வெகுவிரைவில் ஆரம்பிக்கவுள்ளது. சுன்னாகம் கிளை அலுவலகத்திற்கு உடனடியாக விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. கீழ்க்குறிப்பிட்ட பதவி வெற்றிடங்களுக்கு ஆண்,பெண் இருபாலாரும் விண்ணப்பிக்கலாம்.

தகைமை :-

- க.பொ.த சாதாரண தரம் மற்றும் க.பொ.த. உயர்தரம்.
- 19 வயதிற்கும் 45 வயதிற்கும் இடைப்பட்டோர்.
- வலிகாமம் பிரதேசத்தை பிறப்பிடமாகவும், வதிவிடமாகவும் கொண்டோர் விரும்பத்தக்கது.

### பதவி வெற்றிடங்கள்

1. காப்புறுதி ஆலோசகர்
2. தனிப்பட்ட நிதித்திட்டமிடல் ஆலோசகர்
3. தனிப்பட்ட நிதித்திட்டமிடல் முகாமையாளர்
4. முகவர் அபிவிருத்தி முகாமையாளர்
5. பட்டதாரிகளுக்கான விஷேட நிலைகள் மற்றும் மாதாந்த ஊதியம்+விஷேட சலுகைகள்

உங்கள் விண்ணப்பங்களை கீழ்க்கண்ட முகவரிக்கு ஒருவார காலத்திற்குள் அனுப்பி வைக்கவும்.

தொடர்பு: பிராந்திய முகாமையாளர்,
யூனியன் அஷ்யூரன்ஸ் பிராந்திய அலுவலகம்,
139, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

(சி-3428)


# சர்வதேச சமூகத்தின் தீர்மானங்கள் இலங்கைக்கு அவசியம் இல்லை

## அமைச்சர் பீரிஸ் தெரிவிப்பு

(கொழும்பு)

சர்வதேச சமூகத்தின் தீர்மானங்களோ அல்லது இடையூறுகளோ இலங்கைக்கு அவசியம் இல்லை என வெளிவிவகார அமைச்சர் ஜீ.எல்.பீரிஸ் நேற்று முன்தினம் பாராளுமன்றில் தெரிவித்துள்ளார்.

அவசரகால சட்டம் தொடர்பான விவாதத்தில் கலந்து கொண்டு உரையாற்றியபோதே அமைச்சர் இந்தக் கருத்தினை வெளியிட்டார்.

இலங்கையின் நிலைப்பாடு தொடர்பில் தெளிவுபடுத்தல் மற்றும் சர்வதேச ஒத்துழைப்புக்களை பெற்றுக் கொள்வது தொடர்பில் வெளிநாடுகளுடன் விரிவாக பேச்சுவார்த்தை நடத்தியுள்ளதாக அமைச்சர் குறிப்பிட்டார்.

பயங்கரவாதத்தைத் தோற்கடித்தல் அதன்போது ஏற்பட்ட பிரச்சினைகளை எதிர்கொள்வதில் இலங்கை பாரிய நடவடிக்கைகளை முன்னெடுத்துள்ளதாக தெளிவுபடுத்துவதே இதன் நோக்கமாகும் என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

இதனால் சர்வதேச சமூகத்தின் தீர்மானங்களோ அல்லது இடையூறுகளோ இலங்கைக்கு அவசியம் இல்லை எனக்கூறிய அமைச்சர் நல்லெண்ணமும் இலங்கையின் நிலைமைகள் குறித்த புரிந்துணர்வுமே தேவைப்படுவதாக தெரிவித்தார்.

இவை அனைத்தையும் விட கூடுதலான நல்லிணக்கத்தை ஏற்படுத்துவதற்கான காலத்தையும் வாய்ப்பினையும் இலங்கைக்கு பெற்றுக் கொடுக்க வேண்டும் என சர்வதேச நாடுகளை தெளிவுபடுத்தியுள்ளதாகவும் அமைச்சர் தெரிவித்தார். (ஸ்ரீ-2)

# அனுமதியின்றி சாராயம் விற்ற நபருக்கு 6ஆயிரம் ரூபா அபராதம்

அனுமதியின்றி அரச சாராயம் விற்பனை செய்த குற்றச்சாட்டின் பேரில் நபர் ஒருவருக்கு 6 ஆயிரம் ரூபா அபராதம் விதித்து யாழ். நீதிவான் நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது.

மேற்குறித்த குற்றச்சாட்டில் நபர் ஒருவர் கோப்பாய் பொலிஸாரால் கைது செய்யப்பட்டு நேற்று யாழ். நீதிவான் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்டார்.

வழக்கை விசாரித்த யாழ். நீதிவான் நீதிமன்ற நீதிபதி ஏ.ஏ.ஆனந்தராஜா குறித்த நபர் மன்றில் குற்றத்தை ஒப்புக் கொண்டமையால் குற்றவாளியாகக் கண்டு 6ஆயிரம் ரூபா அபராதம் விதித்து தீர்ப்பளித்தார். (ஸ்ரீ-3)


## யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் முதலாவது பெண் துணைவேந்தர்



தென்மராட்சியின் புதல்வி பேராசிரியர் வசந்தி அரசரட்ணம் அவர்களின்

### கௌரவிப்பு விழா அழைப்பு

காலம் :- 12.06.2011 ஞாயிற்றுக்கிழமை பி.ப 2.00 மணி
இடம் :- தென்மராட்சிக் கலைமன்றக் கலாசார மண்டபம் (சிவன் கோவில் வீதி, சாவகச்சேரி)
தலைவர் :- திரு.அ.கயிலாயபிள்ளை (அதிபர், சாவகச்சேரி இந்துக் கல்லூரி)

நிகழ்வுகள்

- சாவகச்சேரி வாரிவனம் முத்துமாரி அம்பாள் ஆலயத்தில் இருந்து வரவேற்பு ஊர்வலம்
- ஆசியுரைகள்
- வாழ்த்துரைகள்
- 'வசந்தம்' சிறப்பு மலர் வெளியீடு
  வெளியிட்டு வைப்பவர்: திருமதி இமெல்டா சுகுமார் (யாழ். அரச அதிபர்)
- கௌரவிப்புக் கேடயம் வழங்கல்: வழங்கிக் கௌரவிப்பவர்: பேராசிரியர் க.கந்தசாமி
  (பீடாதிபதி, விஞ்ஞானபீடம் யாழ் .பல்கலைக்கழகம்)
- அவையோர் கௌரவிப்பு

பேராசிரியரின் அபிமானிகள் இந்த அழைப்பையே தனிப்பட்ட அழைப்பாக ஏற்று வருகை தந்து சிறப்பிக்குமாறு பணிவாக வேண்டுகின்றோம்.

விழாக்குழுவினர்.

எம்மண்ணின் வசந்தத்தை வாழ்த்துகின்றோம்
பிள்ளையார் களஞ்சியம்
கண்டி வீதி, சாவகச்சேரி.

(சி-3427)





உலக சுற்றாடல் தினத்தை முன்னிட்டு துணுக்காய் கல்வி வலயத்தால் பாடசாலை மாணவர்களுக்கு நடாத்தப்பட்ட பேச்சு, கவிதை, சித்திரப் போட்டிகளில் வெற்றியீட்டிய மாணவர்களை கௌரவிக்கும் நிகழ்வு மு/ மாங்குளம் மகா வித்தியாலயத்தில் நேற்று முன்தினம் நடைபெற்றது. இதில் வவுனியா மாவட்ட சுற்றாடல் ஆணையாளர் எஸ். சண்முகதேவன் மங்கல விளக்கேற்றுவதையும் அருகில் துணுக்காய் வலயக் கல்விப் பணிப்பாளர் த. மேகநாதன் நிற்பதையும் துணுக்காய் வலய விஞ்ஞான பாட ஆசிரிய ஆலோசகர் திருமதி ஸ்ரீவள்ளி ஜெகராஜன் உரையாற்றுவதையும் ஆசிரியர்கள் மற்றும் மாணவர்கள் அமர்ந்திருப்பதையும் படங்களில் காணலாம்.

*(படங்கள்:- மல்லாவி செய்தியாளர்)*

# யுத்தத்தால் பாதிப்படைந்த வைத்தியசாலைகளில் 90 வீதமானவை மீள இயங்க ஆரம்பித்துள்ளன

## வட மாகாண ஆளுநர் சந்திரசிறி தெரிவிப்பு



(யாழ்ப்பாணம்)

வட மாகாணத்தில் யுத்தத்தால் பாதிப்படைந்த 90 வீதமான வைத்தியசாலைகள் ஏனைய சுகாதார நிலையங்கள் என்பன தற்போது மீள இயங்க ஆரம்பித்துள்ளதாக வடமாகாண ஆளுநர் மேஜர் ஜெனரல் ஜி.ஏ. சந்திரசிறி தெரிவித்துள்ளார்.

வடமாகாணத்திலிருந்து தற்காலிகமாக இணைத்துக் கொள்ளப்பட்ட குடும்ப நல உத்தியோகத்தர்களுக்கான நியமனம் வழங்கும் நிகழ்வு நேற்று யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் இடம்பெற்றது. இதில் பிரதம விருந்தினராக கலந்து கொண்ட உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில், வடக்கின் வசந்தம் திட்டத்தின் கீழ் 20 வருடங்களுக்கு மேலாக போதியளவு வசதிகள் இல்லாமல் இயங்கி வந்த வைத்தியசாலைகள் பல புனரமைக்கப்பட்டுள்ளன.

வைத்தியசாலையில் காணப்பட்ட ஆளணி பற்றாக்குறையை நீக்குவதற்கு அரசாங்கம் பல நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது. நீண்ட காலமாக இந்த ஆளணியில் பற்றாக்குறை இருந்து வருகிறது.

இதனை நிவர்த்திசெய்யும் பொருட்டே 222 குடும்பநல உத்தியோகத்தர்கள் தற்காலிகமாக இணைத்துக் கொள்ளப்பட்டுள்ளனர்.

இவர்கள் 18 மாதங்கள் இந்தத் துறை தொடர்பாக பயிற்சியளிக்கப்பட்ட பின்பே இணைத்துக் கொள்ளப்பட்டுள்ளனர்.

வடமாகாணத்திலுள்ள ஐந்து மாவட்டத்திலிருந்தும் இவர்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளதோடு வடமாகாணத்திலேயே பணி செய்யவுள்ளனர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

ஏனைய மாவட்டத்தில் உள்ளவர்களை இத்துறையில் இணைத்துக் கொள்ளும் போது விதிக்கப்பட்ட நிபந்தனைகளை விட வடமாகாணத்தில் உள்ள மாவட்டத்திலிருந்து இணைத்துக் கொள்ளப்பட்ட கொடுக்கப்பட்ட நிபந்தனை குறைவாகவே காணப்படுகிறது.

தகுதியடிப்படையிலும் அது குறைவாகவே காணப்படுகின்றது.சாதாரண தரத்தில் சித்தியடைந்தவர்களும் இத்துறையில் இணைத்துக் கொள்ளப்பட்டுள்ளனர்.

தற்காலிகமாக இணைத்துக் கொள்ளப்பட்ட குடும்பநல உத்தியோகத்தர்களுக்கு அடிப்படைச் சம்பளமாக 6 ஆயிரம் ரூபாவை வழங்க தீர்மானித்துள்ளோம். பரீட்சை முடிபுகள் வந்தவுடன் நிரந்தரநியமனங்கள் தகுதியடிப்படையில் வழங்கப்படவுள்ளதோடு வேதனமும் அதிகரிக்கப்படும்.

பணிபுரிவதற்கான போக்குவரத்து வசதிகளை ஏற்படுத்தி கொடுக்கும் வகையில் துவிச்சக்கர வண்டிகளும் வழங்கப்படவுள்ளன.

அரசாங்கத்தின் கொள்கை எல்லோரும் சுகாதாரமான முறையில் நோய்கள் ஏற்படாத வண்ணம் வாழ வேண்டும் என்பதுவே.

இதற்கெனவே கடந்த ஒன்றரை வருடங்களாக பல வைத்தியசாலைகளை புனரமைத்து வருகின்றது.

வடமாகாணத்தில் யுத்தத்தால் பாதிப்படைந்த வைத்தியசாலைகள், ஏனைய சுகாதார நிலையங்கள் என்பன 90 வீதம் புனரமைப்பு செய்யப்பட்டு மீள இயங்க ஆரம்பித்துள்ளது.

இதில் கிளிநொச்சி, முல்லைத்தீவு, மன்னார், பூநகரி, தெல்லிப்பழை போன்ற பிரதேசங்களில் உள்ள வைத்தியசாலைகளும் அடங்கும்.

எதிர்வரும் காலத்தில் வடமாகாணத்திலுள்ள வைத்தியசாலைகளுக்கு மேலதிக வசதிகள் செய்து கொடுக்கப்படும் எனவும் தெரிவித்தார்.

மேலும் கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களில் மலேரியா நோயின் தாக்கம் அதிகரித்து வருகிறது எனவும் அத்தகைய நோய்த்தாக்கங்கள் ஏற்படுவதை தடுக்க வேண்டும் எனவும் அதற்காக வைத்திய அதிகாரிகள் கடுமையாக பாடுபட வேண்டும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

(ஸ்ரீ-6)

சர்வதேச இளைஞர் கப்பல் வேலைத்திட்டம்

## இளைஞர், யுவதிகளிடமிருந்து விண்ணப்பம் கோரல்

(தனங்கிளப்பு)

தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் யாழ்.மாவட்ட அலுவலகத்தினால் சர்வதேச இளைஞர் கப்பல் வேலைத்திட்டத்திற்காக யாழ். மாவட்டத்திலுள்ள 18 தொடக்கம் 29 வயதிற்குட்பட்ட ஆண், பெண் இருபாலாரிடமும் இருந்து விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

இதற்கு விண்ணப்பிக்கும் விண்ணப்பதாரிகள் இளைஞர் கழக அங்கத்துவம் பற்றிய விபரம், நிஸ்கோ அங்கத்துவம் பற்றிய விபரம், ஆங்கில பாடம் உட்பட சாதாரண தரச் சித்தி, ஆங்கிலம் பேச, எழுத, வாசிக்கும் திறன்களை கொண்டிருத்தல், இதுவரை வெளிநாடு செல்லாதவராக இருத்தல் வேண்டும்.

அத்துடன் சங்கீதம், விளையாட்டு, நடனம் போன்ற துறைகளில் திறமைகள் விசேட தகைமையாக கருதப்படும். சிறந்த உடல்/ உள நலம் உள்ளவராக இருத்தல் வேண்டும். மேற்படி தகைமைகளை உடையோர் தங்களினால் சுயமாக தயாரிக்கப்பட்ட விண்ணப்பத்தினை ரி.ஈஸ்வரராஜா, உதவி இயக்குநர்,தேசிய இளைஞர் சேவை மன்றம், மாவட்டக் காரியாலயம், யாழ்ப்பாணம் எனும் முகவரிக்கு எதிர்வரும் 12 ஆம் திகதிக்கு முன்பதாக அனுப்பி வைக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

(ஸ்ரீ-37)

# சகல நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கும் தமிழ்மொழிப் பயிற்சி இன்று ஆரம்பம்

(கொழும்பு)

நாடாளுமன்றத்தில் அங்கம் வகிக்கும் சகல உறுப்பினர்களுக்கும் தமிழ்மொழி பயிற்சிகளை வழங்க தேசிய மொழிகள் மற்றும் சமூக ஒருமைப்பாட்டு அமைச்சு நடவடிக்கை எடுத்துள்ளது.

நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கான இந்த தமிழ்மொழி பயிற்சிநெறி 6 மாத காலத்திற்கு வழங்கப்படவுள்ளது. நாடாளுமன்றக் கூட்டம் நடைபெறும் புதன், வெள்ளி ஆகிய கிழமைகளில் காலையில் இரண்டு மணி நேரம் தமிழ்மொழி பயிற்சிகள் வழங்கப்படும் என அமைச்சு அறிவித்துள்ளது.

அமைச்சர் வாசுதேவ நாணயக்காரவின் ஆலோசனைக்கு அமைய தேசிய மொழிகள் நிறுவனம் மற்றும் பயிற்சி நிறுவனம் ஆகியவற்றில் உள்ள அனுபவமுள்ள விரிவுரையாளர்களினால் இந்த தமிழ்மொழி பயிற்சி வழங்கப்படவுள்ளது.

தமிழ்மொழிக்கு முன்னுரிமை வழங்கி உருவாக்கப்பட்டுள்ள இந்த பாடநெறியில் பேச்சு பயிற்சிகள் மற்றும் செயன்முறை பயிற் சிகள் என்பன வழங்கப்படவுள்ளன.

முதல் குழுவுக்கான தமிழ்மொழி பயிற்சிநெறி இன்று ஆரம்பமாகவுள்ளதுடன் இதில் ஆளும் மற்றும் எதிர்க்கட்சியை சேர்ந்த 30 பேர் கலந்து கொள்ளவுள்ளனர்.

(ஸ்ரீ-2)


**யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை**

**வெளிவாரிப் பட்டப் பதிவுகள் மற்றும் பரீட்சைகள் அலகு**

**அறிவித்தல்**

வெளிநிலைத் தேர்வுநாடிகளின் பதிவேடுகள்

1. கலை முதற் தேர்வு
2. வணிக முதற் தேர்வு
3. கலைமாணி பகுதி-I
4. வணிகமாணி பகுதி-I
5. இசைமாணி
6. நடனமாணி

மேற்படி வெளிவாரிக் கற்கை நெறிகளுக்கு 2009/2010 கல்வியாண்டில் வெளிநிலைத் தேர்வு நாடிகளாக பதிவு செய்தவர்கள் தங்களுக்குரிய மாணவர் பதிவேட்டினை 13.06.2011 (திங்கட்கிழமை) முதல் வெளிவாரிப் பட்டப்பதிவுகள் பரீட்சைகள் அலகில் பெற்றுக்கொள்ளலாம்.

குறிப்பு: கல்வித் தகைமைச் சான்றிதழினதும் (க.பொ.த. உயர்தரம்), பிறப்பு அத்தாட்சிப் பத்திரத்தினதும் மூலப்பிரதிகளை சமர்ப்பிக்காதோர் அவற்றை சமர்ப்பிக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றீர்கள். வியாபார முகாமைத்துவமாணிக் கற்கைநெறி (இணையவழி) மாணவர்களுக்கான மாணவர் பதிவேடுகள் பின்னர் வழங்கப்படும்.

பதிவாளர்
09.06.2011

*(சி-3434)*

# தரம் - 5 புலமைப் பரிசில் பரீட்சை

# 2011 (ஆகஸ்ட்) மாதிரி வினாத்தாள் - 07

ஆசிரியர் :- புன்னியாமீன்,
மஸீதா புன்னியாமீன்

## பகுதி - II

**பின்வரும் பந்தியை வாசிக்க.**

வானத்திலே பஞ்சுப் பொதிகள் போல வெண் மேகங்கள் மெதுவாக அசைந்தன. மேகங்கள் அசையும் திசைக்கு எதிர்த் திசையாக முழு நிலா ஓடுவது போலத் தெரிந்தாலும் அது அசையாமல் அப்படியே தான் இருந்தது. ஆங்காங்கே ஓரிரு நட்சத்திரங்கள் கண்ணைச் சிமிட்டியபடி தாங்களும் அங்கே இருப்பதைக் காட்டிக் கொண்டன.

**இப்பந்தியைப் பயன்படுத்தி 1 தொடக்கம் 8 வரையுள்ள வினாக்களுக்கு விடை எழுதுக.**

1) மேலுள்ள விவரணம் ஒரு நாளின் எந்த வேளையைப் பற்றிய தாகும்?

........................................................................

2) நிலா ஏன் ஓடுவது போலத் தெரிந்தது?

........................................................................

3) இங்கு இடம்பெற்றுள்ள உவமானம் யாது?

........................................................................

4) நட்சத்திரங்கள் எவ்வாறு தமது இருப்பைக் காட்டிக் கொண்டன?

........................................................................

5) திசை என்பதற்கு ஒத்தகருத்துச் சொல்லை எழுதுக.

........................................................................

6) மெதுவாக என்பதன் எதிர்ச்சொல்லை எழுதுக.

........................................................................

7) கண்ணை எனும் சொல்லைப் பன்மையில் எழுதுக.

........................................................................

8) மேலுள்ள பந்தியிலிருந்து பெயராகவும், வினையாகவும் வரக் கூடிய சொல்லொன்றை எழுதுக.

........................................................................

**இடைவெளிகளுக்குப் பொருத்தமான எழுத்துகளை அடைப்பில் உள்ள எழுத்துகளிலிருந்து தெரிவு செய்து சொற்களைப் பூரணப்படுத்துக.**

9) ம ..... த்துவ ம ..... (ரு, று, னை, ணை)

10) பல்க ..... க்க ..... கம் (ளை, லை, ல, ள, ழ)

11) முய ..... சித்து முன்னே ..... (ட், ர், ற், ரு, று)

**பின்வரும் வாக்கியங்களில் இடம்பெற்றுள்ள பெண்பாலை ஆண்பாலாகவும், ஆண்பாலைப் பெண்பாலாகவும் மாற்றி முழு வாக்கியத்தையும் எழுதுக.**

12) என் தம்பி சரியான குறும்புக்காரன்

........................................................................

13) குறத்தி ஒருத்தி பாட்டுப்பாடி ஆடினாள்.

........................................................................

**பின்வரும் கருத்திற்குப் பொருத்தமான தனிச்சொல்லை எழுதுக.**

14) மணம் புரிந்தும் பிள்ளை இல்லாத பெண்

........................................................................

15) எவருக்கும் இல்லை என்னாது வாரி வழங்குபவன்

........................................................................

**பின்வரும் ஆங்கில வாக்கியத்தின் கருத்தைத் தமிழில் எழுதுக.**

16) My name is Mala ........................................

17) Thank you ........................................

**பின்வரும் வாக்கியத்தின் கருத்தை ஆங்கிலத்தில் எழுதுக.**

18) எனது புத்தகம் ........................................

19) உங்கள் வீடு ........................................

**பின்வரும் சிங்களச் சொற்களின் கருத்தை தமிழில் எழுதுக.**

20) (b)பத் ........................................

21) பன்தி காமரய ........................................

**பின்வரும் சொற்களின் சிங்கள வடிவத்தைத் தமிழ் எழுத்துகளில் எழுதுக.**

22) ஒன்பது ........................................

23) தங்கை ........................................

**பின்வரும் சொற்களை ஒழுங்கமைப்பதன் மூலம் கருத்துள்ள வாக்கியமாக்கி எழுதுக.**

24) நடக்கும் / வலது / நடக்க / வேண்டும் / பக்கமாக / போது / பாதையோரமாக

........................................................................

25) மனிதனை / ஒரு / படுத்தும் / வாசிப்பு / பூரணப்

........................................................................

26) உமக்குத் தெரிந்த பழமொழி ஒன்றை எழுத்துப் பிழையின்றி எழுதுக.

........................................................................

**பின்வரும் பாடலில் விடுபட்டுள்ள இடங்களுக்கு வரவேண்டிய சொல்லை எழுதி பாடலைப் பூரணப்படுத்துக.**

ஓடி 27) ........................................ பாப்பா - நீ

28) ........................................ பாப்பா

கூடி விளையாடு 29) ........................................ஒரு

குழந்தையை 30) ........................................ பாப்பா

31) வெள்ளப்பெருக்கு ஒன்றை விபரிக்கும் வாக்கியங்கள் கீழே ஒழுங்கின்றித் தரப்பட்டுள்ளன. அவற்றைச் சரியான முறையில் ஒழுங்குபடுத்தும் போது வரக்கூடிய 1 - 6 வரையான இலக்கங்களை உரிய வெற்றுக் கூட்டுக்குள் எழுதுக.

- ♦ வெள்ளம் வேகமாக பெருக ஆரம்பித்தது. ☐
- ♦ மிக மெல்லிய தூறலாய் மழை தொடங்கியது ☐
- ♦ மின்னல் வெட்டி இடி முழங்கியது. ☐
- ♦ வீடுவாசல்கள் கட்டிடங்கள் பாதைகள் யாவும் வெள்ள நீரில் மூழ்கின. ☐
- ♦ வானம் கருமேகத்தால் மூடப்பட்டது. ☐
- ♦ மழை பலமாகப் பொழியலாயிற்று. ☐

**32 - 46 வரையிலான வினாக்களில் ஒவ்வொன்றுக்கும் உரிய சரியான விடையின் கீழ்க் கோடிடுக.**

32) தகரத்திலடைக்கப்பட்ட உணவுப் பண்டத்தை வாங்கும்போது கட்டாயமாக அவதானிக்க வேண்டியது.
1) அதன் விலையை
2) அதன் நிறையை
3) அதன் உற்பத்தித் திகதியை
4) அது காலாவதியாகும் திகதியை

33) வாழ்க்கைவட்டம் ஒன்றைக் கொண்டுள்ள உயிரினம் ஒன்று
1) நுளம்பு 2) மீன் 3) அணில் 4) காகம்

34) 'கிரி கொரக்கா' எனும் நடனத்தைப் பாரம்பரியமாகக் கொண்டுள்ள மக்கள்
1) சிங்களவர்கள் 2) மலைவாசிகள்
3) ஆதிவாசிகள் 4) பறங்கியர்கள்

35) மனதில் எழும் எண்ணமொன்றைச் சித்திரமாக வரைதல்
1) கொலாஜ் சித்திரம் 2) கற்பனைச் சித்திரம்
3) அச்சுப்பதித்தல் 4) கோட்டுச் சித்திரம்

36) ரைட் சகோதரர்களால் கண்டுபிடிக்கப்பட்டது
1) தொலைபேசி 2) தட்டச்சுப்பொறி
3) ஆகாயவிமானம் 4) தொலைக்காட்சி

(14ஆம் பக்கம் பார்க்க)

# வேள்வி என்ற பெயரில் ஆலயங்களில் நடக்கும் மிருகப் பலியை தடுத்து நிறுத்த வேண்டும்

உயிர்க்கொலை பஞ்சமாபாதகங்களில் பிரதானமான ஒன்று என்பது ஊர் அறிந்த விடயம். பஞ்சமாபாதங்களால் ஏற்படும் பாரதூரமான விளைவுகள் பற்றி மனச்சாட்சி யின் குரலைக் கேட்கும் அனைவரும் நன்கு அறிந்திருப்பர். தப்பிக்க ஓடினாலும் அதன் தண்டனை துரத்தி வரும்.

இன்றெல்லாம் 'வேள்வி' என்ற பெயரால் பயங்கரமான உயிர்க் கொலைகள் பெரும் பரோபகாரங்களுடன் நடந்தேறுகிறது. குளிக்கப்போய் சேறு பூசுவதுபோல் எம்மிடமுள்ள மிருக சுபாவங்களை அழிப்பதற்காக இறை சந்நிதிக்குச் சென்று வேள்வி எனும் போர்வையில் உயிர்க் கொலைகளைச் செய்து பெரும் பாவத்தைத் தேடிக் கொள்கின்ற பரிதாப நிலை ஏற்பட்டுள்ளது.

ஐந்தொழில்களை ஆற்றி அருளாட்சி புரியும் சர்வவல்லமை பொருந்திய இறைவனால் உயிர்தந்து உருவாக்கப்பட்ட ஜீவராசிகளை அழித்து ஆட்கொள்ளும் உரிமை அந்த இறைவனிற்கு மட்டுமே உண்டு. 'வேள்வி' என்ற பெயரில் உயிர்க் கொலை செய்யும் பாவச்செயலில் ஈடுபடுவோர் அவற்றின் விளைவுகளை அனுபவித்தே ஆக வேண்டுமென்பது நியதி.

களை நாம் அனுபவித்தே ஆகவேண்டும். இறைவனின் அன்பு பரிசுத்தமானது, நிபந்தனைகள், எதிர்பார்ப்புக்கள் அற்றது. நாம் இறைவனிற்குப் பயப்படத் தேவையில்லை. மாறாக எம் செயல்களிற்குரிய தண்டனைகளிற்கே நாம் பயப்பட வேண்டும். நாம் எமது தீய குணங்களை அதாவது மிருக சுபாவங்களை அழிக்கும்போதே அவற்றிற்குரிய தண்டனைகளிலிருந்து விடுதலை பெற முடியும். ஆனால், இன்றோ நாம் மிருக சுபாவங்களைப் பலியிடுவதற்குப் பதிலாக மிருகங்களையே பலியிட்டு தண்டனைகளைப் பெருக்கிக் கொள்கின்றோம்.


வேள்வி முறை என்பது வேட்டுவ சமுதாயத்தினரிற்காக உருவாக்கப்பட்ட ஒன்று.

பிராணிகள் அவையும் தீர்ந்து போய் விட்டால் பின் மூவறிவுள்ள உயிர்கள் இவற்றிற்கும் பற்றாக் குறை ஏற்படும் போது அடுத்து நான்கறிவுள்ள ஜீவராசிகள் என முறையே அர்ப்பணிக்க முடியும் என வேதத்தில் அனுமதி வழங்கப்பட்டுள்ளது.



## உயிர்க்கொலையை இறைவன் ஒருபோதும் விரும்புவதில்லை

வேட்டையாடி மிருகங்களின் இறைச்சியையே பிரதான உணவாக உட்கொள்ளும் வேடர் குலத்தில் போய் உயிர் கொலை செய்வது



அதன் மாமிசத்தை உண்பது பாவமான செயல் என்று கூறினால் அவர்களால் அதனை உடனடியாக ஏற்றுக் கொள்ள முடியாது. மாறாக அவ் வாறு சொல்பவரையே வெட்டி மாமிசமாக்கினாலும் வியப்பதற்கில்லை. அவர்கள் தாம் உண் ணும் உணவின் ஒரு பகுதியை இறைவனிற்கு அர்ப்பணம் செய்து விட்டு உண் ணட்டும் என்ற நல்லநோக்குடனேயே அவர்களிற்காக அனுமதி வழங்கப்பட்டது.

இதற்கு இறைவனால் கூட ஒன்றும் செய்ய முடியாது.

ஓர் உயிர் வெட்டப்படும் போது அல்லது கொலை செய்யப்படும்போது அது எவ்வளவு வேதனைப்படும்? துன்பப்படும்? இன்னொரு உயிரின் வேதனை, துன்பம், மூலம் எமக்கு சுகம் கிடைக்குமாயின் அந்த சுகம் உண்மையில் சுகம்தானா? அவற்றால் நற்பலன் ஏதாவது தற்காலிகமாகக் கிடைப்பது போல் தோன்றினாலும் அவை நிலையானவையா? அவற்றால் அவ்வெட்டப்பட்ட உயிரின் வேதனை, துன்பம் என்பவற்றை ஈடுசெய்ய முடியுமா?

உண்மையில்கருணாமூர்த்தியான இறைவன் இவ்வாறான செயல்களை விரும்புவதில்லை. அன்பே வடிவான இறைவன் எமக்கு எந்தத் தீங்கும் நிகழ விடமாட்டார். ஆனால், எமது செயல்களின் பலன்

இதன் தவறான விளக்கத்தால் சுத்த சைவ உணவை உட்கொள்வோரும் பிராமணரும் மிகவும் அரிதாகவே வாழும் இக் கால கட்டத்தில் வேள்வி எனும் பெயரால் உயிர்க்கொலைகளைப் புரிந்து வீண் பாவத்தை தேடிக் கொள்கின்றனர். உயிர்க் கொலை செய்வது, மாமிசம் புசிப்பது மகா பாவம்; அதுவும் இறைவன் பெயரால் செய்வது அதைவிடப்பெரிய பாவம்.

இறைவனிற்கு அர்ப்பணிக்கப்பட வேண்டியவை இலை, பூ, பழம், நீர் போன்ற புனிதமான பொருட்களும். தர்மத்திற்குட்பட்டு நாம் செய்கின்ற புனிதமான செயல்களும் என பகவத் கீதையில் இறைவன் மிக அழகாகக் கூறியுள்ளார். இவை ஓரறிவுள்ள பொருட்களாக கொள்ளப்படுகின்றன. இவை கிடைக்கப் பெறாத பட்சத்தில் மாத்திரமே அடுத்தபடியாக ஈரறிவுள்ள

இவ்வாறிருக்கும் பொழுது இவற்றை சரியாகப் புரிந்து கொள்ளாமல் ஈரறிவு, மூவறிவு, நான்கறிவு உள்ளவற்றை எல்லாம் தாண்டி ஐந்தறிவுள்ள மிருகங்கள் இறைவனிற்கு அர்ப்பணம் செய்தல் என்ற பெயரில் கொலை செய்யப்படுகின்றன. ஆடம்பரம், அலங்காரங்களுடன் கூடி பெரும் கேளிக்கைகளுடன் களியாட்டமாக இவ்வெறியாட்டம் மேற்கொள்ளப்படுகிறது. இந்த ஒழுங்கில் செல்லும் போது அடுத்து பலியாக்கப்படுவது ஆறறிவுள்ள மனிதனே. இனிவரும் காலங்களில் மனிதப்பலி கூட இவ்வாறான களியாட்டமாக மேற்கொ ள்ளப்படலாம் என்பது எதிர்பார்க்கப்பட வேண்டிய ஒரு விடயமாகவே உள்ளது.

உண்மையில் மாமிசம் புசிப்பதற்கு ஏதுவாக மனித உடலின் பற்தொகுதி, சமிபாட்டுத் தொகுதி என்பன அமைக்கப்படவில்லை. இது ஒன்றே நாம் உயிர்க் கொலை செய்து மாமிசம் புசிக்க கூடாது என்பதற்கு பிரத்தியட்சமான சான்றாகும். இதனையும் மீறி நாம் மாமிசத்தை உட்கொண்டால், பல்வேறு வகையான தீராத வியாதிகளிற்கு ஆளாக நேரிடும். அதுமட்டுமல்ல. மனோ நிலை கூட உணவிற்கேற்பவே அமைந்து விடுகிறது. இதனாலேயே பல மிருகத்தனமான செயல்கள் எம் சமுதாயத்தினரிடையே தலை தூக்குகிறது. நாளைய தலைமுறையினரின் நன்மைகருதி இது பற்றி விழிப்புணர்வு கொள்வது அனைவரதும் தலையாய கடமையாகும்.


ஆலயம் என்பது ஆன்மா லயப்படும் புனிதமான இடம். அத்தகைய பரிசுத்தமான இடத்தில் உயிர்கொலை எனும் இழி செயலைச் செய்வது அநாகரிகமானது. அப்படி பலி கொடுக்க வேண்டும் என மனதில் தோன்றினால் தேங்காய் உடைத்தல், நீத்துப்பூசணி வெட்டல், வாலை வெட்டல் போன்றவற்றை மேற்கொள்ளலாம். பூமியில் இன்றுவரை இவ்வாறான ஓரறிவுள்ள


**சின்மயயுவகேந்திரா**
**(அளவெட்டி)**

பொருட்களிற்கு பஞ்சம் ஏற்படவில்லை. இவை தாராளமாகக் கிடைக்கும் காலத்திலேயே ஐந்தறிவுள்ள மிருகங்கள் வதை செய்யப்படும்போது கூடிய சீக்கிரம் மனிதப்பலிகளும் களியாட்டங்களுடன் மேற்கொள்ளப்படமாட்டாது என்பதற்கு என்ன உத்தரவாதம்?

''வேள்வி'' என்ற பெயரில் ஆலயங்களில் இடம்பெறும் மிருகபலி உண்மையில் தடுக்கப்பட வேண்டிய ஒன்று. இவற்றை ஆதரித்து வளர்ப்போமாயின் புற்று நோய் போல் எங்கும் பரவி இறுதியில் மனித குலத்திற்கே அழிவைக் கொண்டு வரும். இவ்வாறு வளர்ச்சியடைந்துவரும் இக்கொடிய செயலை இன்று நாம் ஊக்குவித்தால் நாளைய சமுதாயத்தில் செயலை இன்று நாம் ஊக்குவித்தால் நாளைய சமுதாயத்தில் இடி அமீன்களின் உருவாக்கத்திற்கு இவை ஏதுவாய் இருக்கும் என்பதில் ஐயமில்லை.

"கொல்லான், புலாலை மறுத்தானைக் கைகூப்பி எல்லா உயிரும் தொழும்''





இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் உள்ளக இடம்பெயர்ந்தோருக்கான தேசிய பாதுகாப்பிற்கும் நிரந்தரத் தீர்விற்குமான விசேட செயற்றிட்டத்தினால் கடந்த 2010 ஆம் ஆண்டு முல்லைத்தீவு மாவட்டத்தில் இளைஞர், யுவதிகளிடமிருந்து தெரிவு செய்யப்பட்டு ''மனித உரி மைப் பாதுகாவலர் பயிற்சிநெறி'' மூலமாக பயிற்றப்பட்ட மனித உரிமைப் பாதுகாவலர்களுக்கான சான்றிதழ் வழங்கி கௌரவிக்கும் நிகழ்வு கடந்த 24 ஆம் திகதி முல்லைத்தீவு அரசாங்க அதிபர் மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்றது. இந்நிகழ்வில் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்ட முல்லைத்தீவு பொலிஸ் அத்தியட்சகர் மாலை அணிவித்து வரவேற்கப்படுவதையும் இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் உத்தியோகத்தர் பயிற்சியளிக்கப்பட்ட ஒருவருக்கு சான்றிதழ் வழங்குவதையும் படங்களில் காணலாம்.

# இலங்கையை உலுப்பிவரும்

# ஐ.நா. நிபுணர் குழுவின் அறிக்கை

**(ஆ)உண்மையைக்கண்டறிவதில்அல்லது புலனாய்வில் தெளிவானதொரு அணுகுமுறை இல்லாத நிலை**

319. உண்மையைக் கண்டறிவது பொறுப்புக்கூறலின் அடிப்படை அம்சமொன்றாகும். கொள்கை யளவில், எல்.எல்.ஆர்.சி.யின் ஆணை, அது விடயத்தில் தெளிவற்றதாக இருந்த போதிலும், மனிதஉரிமை கள் மற்றும் சர்வதேச மனிதாபி மானச்சட்டம் அத்துடன் பாதிக்கப் பட்டவர்களின் அனுபவம் தொடர் பானவற்றை உள்ளிட்ட யுத்தத்தின் இறுதிக்கட்டங்கள் பற்றிய உண்மை யைக் கண்டறிவதில் அதன் பங்களிப் பைச் செய்வதற்கு அதனைத் தடுக்க வில்லை. ஏற்கனவே கலந்துரையா டப்பட்ட விடயங்களுக்கு அப்பால், எல்.எல்.ஆர்.சி.யின் உண்மையைக் கண்டறியும் நிலைசக்திக்கான பங்க ளிப்பு அதன் முறைமை மற்றும் அதன் அன்றாட நடைமுறை ஆகியவற் றினால் உருவாக்கப்படுவதாகும். அதன் தீர்மானங்களின் நம்பகத் தன்மை, ஓரளவு அந்த முறைமையின் ஒளிவு மறைவற்ற தன்மையில் தங்கி யிருக்கும்.

**வடக்கு,கிழக்கில் சாட்சியமளிக்க வந்தோருக்கு நல்லிணக்க ஆணைக்குழு சந்தர்ப்பத்தை வழங்கவில்லை.**

320. கிடைக்கக்கூடிய தகவலை மீளாய்வு செய்ததைத் தொடர்ந்து, உண் மையைக் கண்டறிவதற்கான அல்லது மீறல்களைப் புலனாய்வு செய்வதற் காக எல்.எல்.ஆர்.சி. பிரயோகித்த சகலதுமடங்கிய முறைமையினைக் குழுவுக்குத் தெளிவாய் அறிந்து கொள்ள முடியாதிருக்கின்றது.

ஏனைய நாடுகளில் உண்மையைக் கண்டறியும் ஆணைக்குழுக்கள் குறிப்பான குற்றச்சாட்டுக்கள் மற்றும் துஷ்பிரயோகத்தின் உருமாதிரிகள் தொடர்பான இராணுவநடவடிக்கை



பற்றிய உத்தியோகபூர்வ பதிவுகளை, காவல்துறைப்பதிவுகளை மற்றும் நீதிமன்றப்பதிவுகளைப் பெற்று மீளாய்வு செய்வதை உள்ளிட்ட ஏனைய புலனாய்வு முறைகளுடன் சாட்சியங்களைப் பதிவு செய்வது ஆகியவற்றை ஒருங்கிணைத்துள்ளன. சட்டவிரோதமாகத் தடுப்புக்காவலில் வைத்திருப்பது அல்லது பாதிக்கப் பட்டோர் மீதான மோதலின் விளைவுகள் ஆகியவிடயங்கள் தொடர்பான குறிப்பான புலனாய் வுகள் நடாத்துதல் மற்றும்காய மடைந்த, கொல்லப்பட்டவர்களின் எண்ணிக்கையை நம்பகமாக அறிவ தற்கான முறைமைகளை அறிமுகப் படுத்தல், அறிக்கைகள் பிரதிசெய் வோர், ஆய்வாளர்கள், புலனாய் வாளர்கள், தொடர்பாடல்துறை சார்ந்த நிபுணர்கள், பாலியல் வித்தியாசம் பற்றிய நிபுணர்கள் மனநோய் மருத்து வர்கள் ஆகியவர்கள் உள்ளிட்ட நூற் றுக்கணக்கான பணியாட்தொகுதியி னரை அவை தொழிலில் அமர்த்தி யுள்ளன. எல்.எல்.ஆர்.சி. இனைப் பொறுத்தமட்டில், அவர்களது சாட் சியம் பதியும் வேலை முக்கியமாக எழுத்து மூலமான சாட்சியங்களைப் பெற்று அவை தோதானவையா என மதிப்பீடு செய்து அதன் அடிப்படையில் சாட்சியத்தைப் பெறுவதா என்பதை ஆணைக்குழு தீர்மானிக்கும்.

ஐக்கியநாடுகளுடன் நடாத்திய சந்திப்பின்போது, சட்டமா அதிபர், எல்.எல்.ஆர்.சி. இடம் 4 ஆராய்ச்சி யாளர்கள், 4 காவற்றுறை உத்தி யோகத்தர்கள், 4 மொழிபெயர்ப் பாளர்கள் மற்றும் சில துணைப் பணியாட்கள் அடங்கிய மொத்தம் 20பேர்களைக் கொண்ட பணியாட் தொகுதி ஒன்று இருப்பதாக கூறிய தோடு, யுத்தத்தின் இறுதிக்கட்டத்தின் மிகவும் இயல்புக்குமாறான நிலைமை தொடர்பாக உண்மையைக் கண்டறி வதற்குத் தேவையான மூலங்களை விட அது மிகக்குறைவாகவே உள்ளது. மேலும், எல்.எல்.ஆர்.சி. அதன் நடை முறையில், யுத்தம் மற்றும் மீளிணக் கப்பாட்டின் சர்ச்சைக்குள்ளாகும் மற்றும் அவதானம் குறைவான வரலாற்று அம்சங்களின் பகுப் பாய்வில் இலேசாக ஈடுபடுவதோடு யுத்தத்தின் இறுதிக் கட்டங்களின் போது புரியப்பட்ட மீறல்கள் மீதான அதன் பாத்திரம் தொடர்பாக இருமனப்போக்கையும் நிச்சயமற்ற நிலைமையையும் பிரதிபலிக்கின்றது.

321. குறிப்பிட்டது போன்று, நேரடியாகவும் எழுத்து மூலமாகவும் சாட்சியங் களை எல்.எல்.ஆர்.சி. பெற்று வந்துள்ளது. சாட்சியங்களை வழங்கு மாறு அழைப்பு விடுத்தல் மற்றும் சாட்சியங்க ளைத் தெரிவு செய்த லுக்கான அதன் முறைமை தெளிவற்றதாகவுள்ள தோடு, அது ஒழுங் கானதொன்றல்ல என்ற கருத்தைத் தோற்றுவிப் பதாகவுள்ளது. பாதிக் கப்பட்டோரைப் பொறுத் தவரை, உண்மையை கண்டறியும் முயற்சியில் சாட்சியங்கள் சுயமா னதாக இருக்க வேண்டும் என்ற சர்வதேச தரங்களுடன் அது ஒத்திருந்த போதிலும், சில சந்தர்ப்பங்களில் சம்பந் தப்பட்ட தகவலை உடையவர்கள் அல்லது பொறுப்பான பதவிகளில் இருந்தவர்கள் அதன் முன்வருவதற்கு நிர்பந்திக்கப்படுகிறார்கள்.

322. எல்.எல்.ஆர்.சி.யின் இணை யத்தளத்தின்படி, 2011 ஜனவரி இறுதியில் இருந்தவாறாக, கொழும் பில் நடைபெற்ற அமர்வுகளின்போது சுமார் 148 தனி நபர்கள் மற்றும்/ அல்லது அமைப்புக்கள் சாட்சியமளித் துள்ளன. இத்தனிநபர்கள் அரசாங் கத்துறையில் மற்றும் வர்த்தகம், சமூகம் அத்துடன் சிவில் தலைமைத்து வம், உயர் தொழில்சார் அமைப்புக் கள், உயர் கல்வி மற்றும் சிவில் சமூகத் தைச் சார்ந்த சேவையிலிருக்கும் மற்றும் ஓய்வு பெற்றவர்களை மேவுவதாக இருந்தது. கொழும்பில் நடைபொற்ற அமர்வுகளின்போது, குறிப்பாக ஒரு சாட்சி ஏற்கனவே தயாரிக்கப்பட்ட நீண்ட தொரு அறிக்கையை வாசிப் பதைத் தொடர்ந்து பல மணித்தி யாலங்களுக்கு ஆணையாளர்க ளுடன் சமூக மான கலந்து ரையாடல் நடை பெறும். குறிப்பாக ஏன் போர் நிறுத்த ஒப் பந்தம் தோல் வியில் முடி வடைந்தது என்ற தர்க்கத்துடன் கூடிய எதிர் கால மீளிணக் கப்பாடு மற் றும் வரலாற்று ரீதியிலான பிரச் சினைகள் பற்றிய கேள்விகள் இவ்வ மர்வுகளின் முக்கிய தொனிப் பொரு ளாக அமைந்தன. பரவலான பிரச் சனைகளைப் புரிந்து கொள்வதற்காக இவ்வமர்வுகள் முக்கியமாக மற்றும் எல்.எல்.ஆர்.சி.யின் அதிக நேரத்தைக் குறிப்பதாகவும் இருந்தபோதிலும், ஆயுதந்தாங்கிய மோதலின் இறுதிக் கட்டங்களின் போது, குறிப்பாக அரசாங்கம் அல்லது எல்.ரி.ரி.ஈ. ஈடுபட்டிருக்கலாம் என்ற மீறல்கள் பற்றி அவை மிகக்குறுகிய விளக்கத் தையே வழங்குகின்றன.



காயம் ஏற்பட்ட குழந்தை


323. சர்வதேச சட்டத்தின் மீறல் கள் பற்றி, பாதுகாப்புப் படையினர் நடந்து கொண்டவிதம் உள்ளாக, நேரடியாக நடவடிக்கை எடுக்கும் போது, எதிர்த்து நிற்காதபோக்கே பின்பற்றப்படுகிறது. அவர்களது முக்கிய கடமைகள் மற்றும் யுத்தத்தின் இறுதிக் கட்டங்களில் நேர்ந்தவை பற்றி அவர்கள் அறிந்திருந்தனர் என்ற போதிலும், பாதுகாப்புச் செயலாளரும் ஐந்து மிகஉயர் பதவி வகிக்கும் இராணுவ அதிகாரிகளும் ஒவ்வொரு வராக குறுகிய நேரத்துக்கு மாத்திரமே ஆணைக்குழுவின் ஆரம்ப அமர்வுக ளின்போது அதன் முன்னிலையில் சமூகமளித்தனர். இந்த சிரேஸ்ட அதிகாரிகள் ஆணைக்குழு முன்னி லையில் ஆஜரானதும், மீறல்கள் பற்றிய பொதுவான குற்றச்சாட்டுக்கள் அல்லது யுத்தத்தின் இறுதி கட்டங் களின்போதான சகலதுமடங்கிய வியூகம்பற்றியே அவர்களிடம் கேள் விகள் கேட்கப்பட்டன. சர்வதேச ஊடகங்களில் பொதுவாக அறிவிக் கப்பட்ட மீறல்கள் பற்றி குறிப்பான விடயங்களை அபூர்வமாக ஆணை யாளர்கள் அணுகினர். “பொது மக்கள் காயமடைவது மற்றும் கொல்லப் படுவது தொடர்பில் பூஜ்ய சகிப்புத் தன்மை” என்ற உறுதிப்பாடுகள் போன்ற குழுவினால் தொகுக் கப்பட்ட குற்றச்சாட்டுக்களுக்கு நேரடியாக முரண்பாடான நிலையிலான சாட்சியங்களும் ஏற்றுக்கொள்ளப் பட்டுள்ளன. புலனாய்வு முறைமை யின் நலிவையும், 'பாரிய குற்றச்சாட் டுக்களின் பின்னணியில் உள்ள உண்மையைக்கண்டறிவதில் ஆணைக்குழுவின் திறனை அதிக மாக மட்டுப்படுத்தும் விதத்தில், சிரேஷ்ட அதிகாரிகளுக்கு அள வுக்கு அதிகமான மரியாதையை வழங்குவதையும் இது குறிக்கிறது. சிரேஷ்ர அதிகாரிகளின் மற்றும் சிவிலியன் அதிகாரிகளின் சாட்சியம் தொடர்பான இத்தகைய விமர்சன மற்ற மற்றும் மரியாதை நிறைந்த அணுகு முறை, யுத்தத்தின் இந்த முக்கிய கட்டம் தொடர்பான உண்மைகளை அறிந்து, இலங்கை யின் சிவிலியன் மற்றும் இராணுவ தலைமைத்துவத்திற்கு பாரிய விளை வுகளை ஏற்படுத்தக் கூடிய அரசியல் அவதான மிக்க விடயங்களை உறுதிப்படுத்துவதற்கான எல்.எல். ஆர்.சி.யின் மனவுறுதியைப் பற்றிய ஆழ்ந்த கேள்விகளை குழுவுக்கு எழுப்புகிறன.


324. யுத்தத்தினால் பாதிப் படைந்த பெரும்பாலான சாட்சிகள் உள்ள வடக்கு மற்றும் கிழக்குப் பிரதேசங்களுக்கான எல்.எல். ஆர்.சி.யின் கள விஜயங்களின் போது, அதன் அணுகுமுறைப் பிரதேங்களிலான சாட்சி முக்கியமாக இருந்த போதிலும், 2011 ஜனவரி இறுதியில் இருந்தவாறாக எல்.எல். ஆர்.சி.யின் இணையத்தளம் 2010 மே மாதம் ஆணைக்குழுவுக்கான ஆணை வழங்கப்பட்ட திகதியில் இருந்து 14 கள விஜயங்களேயே குறிப்பிடு கின்றது. வ்டக்கிலும் கிழக்கிலும் சாட்சியம் பதிவு செய்வதற்காக தோதான சாட்சியுள்ளவர்களுக்கு வழங்கப்பட்ட நேரம் மிகக்குறை வாகவே இருந்ததோடு சாட்சியம்

**தமிழாக்கம் தொடர் 40**

வழங்க, முன்வந்த அதிக எண்ணி க்கையிலான பாதிக்கப்பட்டவர்க ளுக்கு சாட்சியம் அளிப்பதற்கான சந்தர்ப்பம் கிடைக்கவில்லை. இப் பாதிப்புக்குட்பட்டோரில் அதிக மானோர் பெண்களாவர் இப்பாரிய எண்ணிக்கை மற்றும் அதுபற்றி ஆண்ணக்குழுவின் கவனத்துக்கு சிவில் சமூகத்தால் கொண்டு வரப்பட்ட போதிலும், இவ்வெண்ணிக்கை யிலான சாட்சிகளுக்கு வசதியளிப் பதற்காக அதன் சாட்சிகள் பதிவு செய்யும் அட்டவணையை எல்.எல். ஆர்.சி. மறுசீரமைத்ததாகத் தெரிய வில்லை.

(தொடரும்)





பொன்னாலை பாபுஜி முன்பள்ளி ஆசிரியருக்கு சைக்கிள் மற்றும் மாணவர்களுக்கான பாடசாலை உபகரணப் பொருட்கள் வழங்கும் நிகழ்வு அண்மையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் நாடாளுமன்ற உறுப்பினர் சுரேஷ் பிறேமச்சந்திரன் சைக்கிள் ஒன்றினை முன்பள்ளி ஆசிரியருக்கு வழங்கி வைப்பதையும் கலந்துகொண்ட மாணவர்களையும் படத்தில் காணலாம்.

# பாடசாலைகளில் நாமல் சிறுவர் சுற்றாடல் அமைப்புக்களை அமைக்க நடவடிக்கை

## கல்வியமைச்சர் தெரிவிப்பு



(கொழும்பு)

பாடசாலை மாணவர்கள் மத்தியில் நாமல் சிறுவர் சுற்றாடல் அமைப்புக்களை ஆரம்பிக்கவுள்ளதாக கல்வி அமைச்சர் பந்துல குணவர்த்தன தெரிவித்தார். தகவல் திணைக்களத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பொன்றின்போதே அமைச்சர் இதனைக் குறிப்பிட்டார். தேசிய நாமல் பூங்கா பாதுகாப்புத் திட்டத்துக்கு 20 வருட பூர்த்தியை முன்னிட்டு இப்புதிய நாமல் சிறுவர் சுற்றாடல் அமைப்புக்களை அமைக்கும் திட்டம் அறிமுகப்படுத்தப்படுகின்றது.

சுற்றாடலைப் பாதுகாப்பதற்கான இதுபோன்ற திட்டங்களை சிறுவர்கள் மத்தியில் ஆரம்பிப்பதன் மூலம் அதனை அவர்கள் மனதில் ஆழமாகப் பதிய வைத்து சிறந்த வெற்றியைப் பெறலாம் என அமைச்சர் நம்பிக்கை தெரிவித்தார்.

இத்திட்டம் மூன்று கட்டங்களாக செயற்படுத்தப்படவுள்ளது. முதற் கட்டமாக அம்பாந்தோட்டை மாவட்டத்தில் உள்ள 22 பாடசாலைகளில் எதிர்வரும் பொசன் பண்டிகையை அடுத்து ஆரம்பிக்கப்படவுள்ளது. இரண்டாம் கட்டமாக நாட்டிலுள்ள 340 தேசியப்பாடசாலைகளில் இந்தத் திட்டம் செயற்படுத்தப்படுவதுடன் 3 ஆம் கட்டமாக ஏனைய பாடசாலைகளுக்கு இத்திட்டம் விஸ்தரிக்கப்படவுள்ளது. கல்வி அமைச்சு சார்பாக அமைச்சின் விஞ்ஞானப் பிரிவு இதற்கான நடவடிக்கைகளை தேசிய நாமல் பூங்கா பாதுகாப்புத் திட்டத்துடன் இணைந்து மேற்கொண்டு வருவதாக அமைச்சர் மேலும் குறிப்பிட்டார். (ஸ்ரீ-2)

# டெங்கு காய்ச்சல் காரணமாக வயோதிபர்களே அதிகளவில் பாதிப்பு

## சுகாதார அமைச்சு தெரிவிப்பு

(கொழும்பு)

டெங்கு காய்ச்சலினால் அதிகளவில் வயோதிபர்கள் பீடிக்கப்படுவதாக சுகாதார அமைச்சு குறிப்பிட்டுள்ளது.

டெங்கு காய்ச்சலினால் பீடிக்கப்பட்டுள்ளவர்களுள் 60 வீதமானோர் வயோதிபர்கள் என சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

சுகாதார அமைச்சர் மைத்திரிபால சிறிசேன தலைமையில் சுகாதார வைத்திய பணிப்பாளர்களுடன் இடம்பெற்ற கலந்துரையாடலின் போது இந்த விடயம் கண்டறியப்பட்டுள்ளது.

இதேவேளை டெங்கு காய்ச்சலினால் 20 வீதமான சிறுவர்களும் 20 வீதமான இளைஞர்களும் பீடிக்கப்படுவதாக அமைச்சு குறிப்பிட்டுள்ளது.


காய்ச்சல் ஏற்பட்ட பின்னர் முறையான சிகிச்சை பெற்றுக் கொள்ளாததன் காரணமாக வயோதிபர்கள் அதிகளவில் டெங்கு காய்ச்சலினால் பாதிக்கப்படுவதாக அமைச்சு சுட்டிக் காட்டியுள்ளது.

இரண்டு நாட்களுக்கு தொடர்ச்சியாக காய்ச்சல் ஏற்பட்டால் உடனடியாக வைத்தியர் ஒருவரிடம் அல்லது அரச வைத்தியசாலைக்குச் சென்று சிகிச்சை பெற்றுக் கொள்ளுமாறு சுகாதார அமைச்சு மக்களிடம் வேண்டுகோள் விடுத்துள்ளது.

இந்த வருடத்தில் ஆறாயிரத்து 999 பேர் டெங்கு காய்ச்சலினால் பீடிக்கப்பட்டுள்ளதாக சுகாதார அமைச்சு குறிப்பிட்டுள்ளது.

இதேவேளை டெங்கு காய்ச்சல் காரணமாக வருடத்தின் இதுவரையான காலப்பகுதியில் 60 பேர் உயிரிழந்துள்ளதுடன் உயிரிழந்தவர்களுள் 40 வீதமானவர்கள் வயோதிபர்கள் என சுகாதார அமைச்சு சுட்டிக்காட்டியுள்ளது. (ஸ்ரீ-2)

# ஊழியர் சேமலாப நிதியைப் பயன்படுத்தி கடனை அடைக்க முனைகிறது அரசாங்கம்



## ரணில் குற்றச்சாட்டு

(கொழும்பு)

ஊழியர் சேமலாப நிதி மற்றும் ஊழியர் நம்பிக்கை நிதி ஆகியவற்றைப் பயன்படுத்தி அரசாங்கம் கடன்களை அடைப்பதற்கு முயற்சி மேற்கொண்டு வருவதாக ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்ரமசிங்க தெரிவித்துள்ளார். அரசாங்கம் வெட்கமின்றி தனியார் துறை பணியாளர்களின் கடின உழைப்பை சூறையாடியுள்ளதாகக் குறிப்பிட்டுள்ளார். ஊழியர் சேமலாப நிதி மற்றும் ஊழியர் நம்பிக்கை நிதி ஆகியவற்றை நாளைய தினம் மீளச் செலுத்துமாறு கோரினால் அதனை திருப்பிச் செலுத்த முடியாது என அவர் சுட்டிக்காட்டியுள்ளார். தனியார்துறை ஓய்வூதியச் சட்ட மூலத்தை நிறைவேற்றுவதன் மூலம் தமது செயற்பாடுகளுக்கு நியாயம் கற்பிக்க அரசாங்கம் முயற்சிப்பதாக அவர் குறிப்பிட்டுள்ளார். (ஸ்ரீ-2)

# அவசரகாலச் சட்டம் கிரமமாகவே நீக்கப்படவேண்டும்

## அமைச்சர் டலஸ் அழகப்பெரும தெரிவிப்பு



(கொழும்பு)

அவசரகாலச் சட்டம் கட்டம் கட்டமாக நீக்கப்பட வேண்டும் என இளைஞர் விவகார அமைச்சர் டலஸ் அழகப்பெரும தெரிவித்துள்ளார்.

பிரிவினைவாத சக்திகளின் செயற்பாடுகள் முற்று முழுதாக இல்லாதொழிக்கப்படும் வரையில் அவசரகாலச்சட்டத்தை முழுமையாக நீக்கக்கூடாது எனவும் கிரமமாகவே நீக்கப்படவேண்டும் எனவும் அவர் சுட்டிக் காட்டியுள்ளார்.

பயங்கரவாதிகளின் ஆயுதப் போராட்டம் முறியடிக்கப்பட்டபோதிலும் பிரிவினைவாதிகளின் செயற்பாடுகள் முழுமையாக இல்லாது ஒழிக்கப்படவில்லை எனவும் நாட்டில் மீண்டும் பிரிவினைவாதத்தைத் தூண்டும் நோக்கில் தாருஸ்மான் அறிக்கை வெளியிடப்பட்டுள்ளதாக அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

அவசரகாலச் சட்ட நீடிப்பு தொடர்பிலான நாடாளுமன்ற விவாதத்தில் கலந்து கொண்டு உரையாற்றியபோது அவர் மேற்கண்டவாறு குறிப்பீட்டுள்ளார்.

நாடு கடந்த தமிழீழ இராச்சியம் உருவாக்கமும் ஒரு வகையிலான பிரிவினைவாதமே என அவர் சுட்டிக்காட்டியுள்ளார். அனைத்துப் புலம்பெயர் தமிழர்களையும் புலி ஆதரவாளர்கள் எனமுத்திரை குத்த முடியாது எனவும் ஒருதொகுதி புலம்பெயர் தமிழர்கள் புலிகளுக்கு ஆதரவாக செயற்பட்டு வருவதாகக் குறிப்பிட்டுள்ளார்.

முரண்பாடுகளுக்கு அமைதியான முறையில் தீர்வு தேடிய முன்னாள் ஜனாதிபதி சந்திரிக்கா மற்றும் முன்னாள் பிரதமர் ரணில் ஆகியோரின் முயற்சி தோல்வியில் முடிவடைந்ததாகக் குறிப்பிட்டுள்ளார்.

இதனால் அவர்கள் நாட்டுப் பற்றுக் கிடையாதவர்கள் என கருதமுடியாது என அவர் தெரிவித்துள்ளார்.

பிரிவினைவாதத்தை இல்லாதொழிப்பதற்கு எதிர்க்கட்சிகள் அரசாங்கத்துடன் இணைந்து கொள்ள வேண்டுமென அவர் சுட்டிக்காட்டியுள்ளார். (ஸ்ரீ-2)

# டெங்கு நோயாளர்களுக்கு தீவிர சிகிச்சைப் பிரிவுகள்

(கொழும்பு)

இலங்கையில் உள்ள பிரதான வைத்தியசாலைகளில் டெங்கு நோயாளர்களுக்கு தீவிர சிகிச்சை பிரிவுகளை அமைக்க சுகாதார அமைச்சு நடவடிக்கை எடுத்துள்ளது.

இதற்காக ஒவ்வொரு பிரதான வைத்தியசாலைக்கும் என 50 இலட்சம் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளதாக சுகாதார அமைச்சர் மைத்திரி பால சிறிசேன தெரிவித்துள்ளார்.

இவ்வாறு அமைக்கப்படும் ஒவ்வொரு தீவிர சிகிச்சைப் பிரிவிலும் டெங்கு நோயாளருக்கு மட்டுமென 5 கட்டில்களை ஒதுக்கி வைக்குமாறு வைத்தியசாலையின் பணியாளர்களுக்கு உத்தரவிட்டுள்ளார்.

அத்துடன் டெங்கு நோயாளர்களை பராமரிக்கும் வைத்திய குழுவினருக்கு விசேட பயிற்சிகளை வழங்கவும் அமைச்சு நடவடிக்கை எடுத்துள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. (ஸ்ரீ-2)

# த.தே.கூட்டமைப்புடன் அரசாங்கம் யதார்த்தமான முறையில் பேச்சுவார்த்தை

## அவைத்தலைவர் நிமல் சிறிபால டி சில்வா தெரிவிப்பு

(கொழும்பு)

தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு கட்சியுடன் அரசாங்கம் யதார்த்தமான முறையில் பேச்சுவார்த்தை நடத்தி வருவதாக அவைத் தலைவர் நிமால் சிறிபால டி சில்வா தெரிவித்துள்ளார்.

வடக்கு மற்றும் தெற்கு மக்களினால் ஏற்றுக் கொள்ளக்கூடிய நியாயமான அரசியல் தீர்வுத் திட்டமொன்றை பெற்றுக் கொள்ளும் நோக்கில் பேச்சுவார்த்தை நடத்தப்படுவதாக குறிப்பிட்டுள்ளார்.

வெளிநாட்டு சக்திகளின் கட்டளைக்கு அடிபணிந்து அரசாங்கம் செயற்படப் போவதில்லை எனவும் அரசியல் தீர்வுத் திட்டம் நோக்கிய பயணம் தொடரும் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

வடக்கு மக்களினால் மட்டுமின்றி தெற்கு மக்களினாலும் ஏற்றுக் கொள்ளக்கூடிய காத்திரமான அரசியல் தீர்வுத் திட்டமொன்று நிறைவேற்றப்பட வேண்டுமென அவர் வலியுறுத்தியுள்ளார்.

அவ்வாறான தீர்வுத் திட்டமொன்று முன்வைக்கப்படாவிட்டால் நிரந்தர சமாதானத்தை நிலைநாட்ட முடியாது என அவர் சுட்டிக்காட்டியுள்ளார். எதிர்வரும் 23 ஆம் திகதி மீண்டும் தமிழ் தேசியக் கூட்டமைப்பு கட்சியுடன் பேச்சுவார்த்தை நடத்தப்படவுள்ளது. (ஸ்ரீ-2)

# வெள்ளைக்கொடி வழக்கின் பிரதான விசாரணை அதிகாரிக்கு அபராதம்

(கொழும்பு)

வெள்ளைக்கொடி வழக்குடன் தொடர்புடைய பிரதான விசாரணை அதிகாரி அடிப்படை உரிமைமீறல்களில் ஈடுபட்டதாக குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

வெள்ளைக் கொடி வழக்கு தொடர்பான விசாரணைகளை நடத்தி வரும் பிரதான பொலிஸ் பரிசோதகர் அநுர டி சில்வா உள்ளிட்ட மூன்று பொலிஸ் உத்தியோகத்தர்கள் அடிப்படை உரிமை மீறல்களில் ஈடுபட்டதாக நீதிமன்றம் அறிவித்துள்ளது.

நபர் ஒருவருக்கு எதிரான வழக்கு விசாரணைகளின் போது குறித்த நபரின் அடிப்படை உரிமையை மீறும் வகையில் அதிகாரிகள் செயற்பட்டதாக நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது.

குற்றச்செயலில் ஈடுபட்ட முதல் இரண்டு அதிகாரிகளுக்கும் தலா 5 ஆயிரம் ரூபா அபராதமும் மூன்றாம் நபருக்கு 3 ஆயிரம் ரூபா அபராதமும் விதிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை வெள்ளைக்கொடி வழக்கு விசாரணை மேற்கொள்ளும் பொலிஸ் உத்தியோகத்தருக்கு எதிரான நீதிமன்ற தீர்ப்பு ஒன்றை சாட்சியமாக சரத் பொன்சேகாவின் சட்டத்தரணி நலின் லந்துவேஹெட்டி சமர்ப்பித்துள்ளார். (ஸ்ரீ-2)

# பாராளுமன்றத்தை பிழையான முறையில் வழி நடத்துவோர் தண்டிக்கப்படவேண்டும்

## ரவி கருணாநாயக்க எம்.பி.தெரிவிப்பு

பாராளுமன்றத்தைப் பிழையாக வழிநடத்துவோர் தண்டிக்கப்படவேண்டும் என ஐக்கிய தேசியக் கட்சியின் தேசிய அமைப்பாளர் ரவி கருணாநாயக்க கோரிக்கை விடுத்துள்ளார்.

நீதிமன்றத்தில் பிழையான தகவல்களை வழங்குவோருக்கு எடுக்கப்படும் சட்ட நடவடிக்கைகளைப் போன்றே பாராளுமன்றிலும் பிழையான தகவல்களை வழங்குவோருக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படவேண்டுமென அவர் வலியுறுத்தியுள்ளார்.

அமைச்சர் தயா திசேராவிற்கும் ரவி கருணாநாயக்கவிற்கும் இடையில் பாராளுமன்றில் ஏற்பட்ட வாக்குவாதத்தின் போது அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

அமைச்சர் திசேரா முதலில் தாம் வழங்கிய புள்ளிவிபரத் தரவுகள் சரியானவை என வாதிட்டு பின்னர் தரவுகளைப் பரீட்சித்து சில தரவுகள் பிழையானவை என ஒப்புக்கொண்டுள்ளார்.

பாராளுமன்றத்தில் பிழையான புள்ளி விபரத்தரவுகளை முன்வைப்பவர்கள் தண்டிக்கப்படவேண்டுமென கருணாநாயக்க தெரிவித்துள்ளார். (ஸ்ரீ-2)

# நாட்டின் பல பாகங்களும் இராணுவமயப்படுத்தப்படுகிறது

## மங்கள சமரவீர எம்.பி. தெரிவிப்பு

(கொழும்பு)

அமெரிக்க கடவுச்சீட்டை உடைய அரசாங்கத்தின் உயரதிகாரியொருவர் நாட்டை இராணுவ மயப்படுத்த முயற்சிப்பதாக ஐக்கிய தேசியக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் மங்கள சமரவீர தெரிவித்துள்ளார்.

குறித்த அதிகாரி விடுதலைப்புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரனைப் போன்று சிந்திப்பதாக அவர் சுட்டிக்காட்டியுள்ளார். நாட்டின் பல பகுதிகளும் இராணுவ மயப்படுத்தப்பட்டு வருவதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

குறிப்பாக மாத்தறை மாவட்டம் அரசாங்கத்தின் திட்டங்களினால் பாதிக்கப்பட்டுள்ளதாக குறிப்பிட்டுள்ளார். யுத்தம் நிறைவடைந்து இரண்டு ஆண்டுகள் பூர்த்தியடைந்த போதிலும் அரசாங்கம் மக்களை அமைதியாக வாழ்வதற்கு இடமளிக்கவில்லை என அவர் தெரிவித்துள்ளார். (ஸ்ரீ-2)

2011.06 10

# இன்றைய நாளின் முன்னைய பதிவுகள்

★ 1190-மூன்றாவது சிலுவைப் போர்: புனித ரோமப் பேரரசன் முதலாம் பிரெடெரிக் ஜெருசலேம் நகரை நோக்கிய படையெடுப்பின் போது சாலி ஆற்றில் மூழ்கி இறந்தான்.

★ 1786-சீனாவின் சிச்சுவான் மாகாணத்தில் பத்து நாட்களுக்கு முன்னர் நிகழ்ந்த நிலநடுக்கம் காரணமாக டாடு ஆறு அணைப்பு உடைந்ததில் ஒரு இலட்சம் பேர் கொல்லப்பட்டனர்.

★ 1846-கலிபோர்னியாக் குடியரசு மெக்சிக்கோவிலிருந்து விடுதலையை அறிவித்தது.

★ 1886-நியூசிலாந்தில் டரவேரா மலை தீ கக்கியதில் 153 பேர் கொல்லப்பட்டனர்.

★ 1898-அமெரிக்கக் கடற்படையினர் கியூபா தீவில் தரையிறங்கினர்.

★ 1940-இரண்டாம் உலகப் போர்: ஜேர்மனியப் படையிடம் நோர்வே வீழ்ந்தது.

★ 1940-இரண்டாம் உலகப் போர்: பிரித்தானியா மற்றும் பிரான்சுக்கு எதிராக இத்தாலி போரை அறிவித்தது.

★ 1940-இரண்டாம் உலகப் போர்: ஜேர்மனியப் படைகள் ஆங்கிலக் கால்வாயை அடைந்தன.

★ 1940-இரண்டாம் உலகப் போர்: நோர்வே ஜேர்மனியர்களிடம் சரணடைந்தது.

★ 1940-இரண்டாம் உலகப் போர்: இத்தாலிக்கு எதிராக கனடா போரை அறிவித்தது.

★ 1944-இரண்டாம் உலகப் போர்: பிரான்சில் ஒரே டூர்-சர்-கிளேன் என்ற இடத்தில் 642 பொது மக்கள் படுகொலை செய்யப்பட்டனர்.

★ 1944-இரண்டாம் உலகப் போர்: கிரேக்கத்தில் டிஸ்டோமோ என்ற இடத்தில் 218 பொது மக்கள் ஜேர்மனியர்களினால் கொல்லப்பட்டனர்.

★ 1945-அவுஸ்திரேலியப் படைகள் புருணையை விடுவிப்பதற்காக அங்கு தரையிறங்கினர்.

★ 1956-அம்பாறையில் 150 தமிழர்கள் படுகொலை செய்யப்பட்டனர்.

★ 1967-இஸ்ரேலும் சிரியாவும் போர் நிறுத்த உடன்பாட்டிற்கு வந்ததில் ஆறுநாள் போர் முடிவுக்கு வந்தது.

★ 1986-யாழ்ப்பாணம், மண்டைதீவில் குருநகரைச் சேர்ந்த 31 மீனவர்கள் படுகொலை செய்யப்பட்டனர்.

★ 1996-வடக்கு அயர்லாந்தில் சின் ஃபெயின் பங்குபற்றாத நிலையில் அமைதிப் பேச்சுக்கள் ஆரம்பமாகின.

★ 1999-கொசோவோவில் இருந்து சேர்பியப் படையினர் விலக எடுத்துக் கொண்ட முடிவை அடுத்து நேட்டோ தனது தாக்குதல்களை நிறுத்தியது.

★ 2003-நாசாவின் ஸ்பிரிட் தளவுளவி செவ்வாய்க்கோளை நோக்கி ஏவப்பட்டது.

★ 2006-மன்னார் வங்காலையில் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த 4 தமிழர் படுகொலை செய்யப்பட்டனர்.

### பிறப்புக்கள்

★ 1925-வே. தில்லைநாயகம், தமிழக நூலகத்துறையின் முன்னோடி

★ 1971-பாபி ஜிண்டல், அமெரிக்கா லூசியானாவின் ஆளுநர்

### இறப்புக்கள்

★ கி.மு-323- மகா அலெக்சாண்டர் (பி.கி.மு.356)

★ 1836-அன்ட்ரே- மரீ அம்பியர், பிரெஞ்சு இயற்பியலாளர் (பி.1775)

★ 2004-ரே சார்ல்ஸ், அமெரிக்க இசைக்கலைஞர் (பி.1930)

### சிறப்பு நாள்

★ போர்த்துக்கலின் தேசிய தினம்.

# கொஞ்சம் அமுதம் கொஞ்சம் விஷம்



ஆன்மீகம் 10

"அண்மையில் நடக்க இருந்த என் திருமணம் கடைசி நிமிடத்தில் நின்று விட்டது. அத்தனை பேருக்கு நடுவில் எனக்கு நேர்ந்துவிட்ட அவமானத்தை தாங்க முடியவில்லை. யார் என்ன சமாதானம் செய்தாலும் பழையபடி என்னால் கலகலப்பாக மாற இயலவில்லை. இந்தக் கசப்பான அனுபவத்தில் இருந்து எப்படி மீள்வது?"

ஏதுநமக்கு எதிரானது என்று நினைக்கிறோமோ, அதுநம்மிடம் மோசமான விளைவை ஏற்படுத்திவிடாமல் கவன மாக இருக்கவேண்டும் அதுவே முதல் அடி!

வழியில், வாழ்க்கையில், நீங்கள் கற்பனை செய்தே பார்த்திராத அனுபவங்கள் எதிர்ப்படலாம் வாழ்வின் பல்வேறு அம்சங்களை அனுபவித்து அறிந்து கொள்ளக் கிடைத்த வாய்பாக அவற்றை நினைக்க வேண்டும். சிக்கல் வரும்போது தான் நம் திறமை என்ன நாம் எங்கே நிற்கிறோம் என்பது தெளிவாகத் தெரியும். அதை முன் வைத்து நம் வளர்ச்சிக்கு அந்த அனுபவத்தை எப்படி பயன்படுத்திக் கொள்ளலாம் என்று பார்க்கவேண்டும்

சங்கரன்பிள்ளை எலெக்ட்ரிக் சாமான்கள் விற்கும் கடைக்குள் கோபமாக நுழைந்தார் தான் வாங்கிப்போன புதிய இஷ்திரிப் பெட்டியை கல்லா மீது டொப்பென்று வைத்து "மூன்று முறை உங்கள் கடையில் இஷ்திரிப் பெட்டி மாற்றி விட்டேன். எதுவும் ஒழுங்காக வேலை செய்யவில்லை" என்று சத்தம் போட்டார்.

கடைக்காரர் குழம்பி, நானகாவதாக ஓர் இஷ்திரிப் பெட்டியை எடுத்துத் தந்தார். "ஐயா எதற்கும் இதை இங்கேயே சரி பார்த்து விடலாம். உங்கள் கசங்கிய சட்டையைக் கொடுங்கள்!" என்றார்.

சங்கரன்பிள்ளைசட்டையைச் கழற்றிக் கொடுத்தார்.

கடைக்காரர் இஷ்திரிப் பெட்டியின் வயரை மின் இணைப்பில் செருகியதும், சங்கரன்பிள்ளை "ஓ, இதை இப்படிச் செருக வேண்டுமா? சொல்லவே இல்லை ?" என்றார்.

பல சூழ்நிலைகளில் எளிதான தீர்வுகள் இருக்க மனம் தேவை இல்லாமல் குழம்பிக் கொள்வது இப்படித்தான்!

"சிறு சோகங்களை மறக்கலாம்.எனக்கு நேர்ந்தது போன்று மோசமான சூழ்நிலைகளை எப்படி எதிர்கொள்வது? "

திருமணம் நின்று விட்டால், துக்கம் அனுஷ்டிப்பது ஒருவகை, சுதந்திரம் நீடிக்கப்பட்டு

## வலை வீசிப் பாடுங்கள்...

இருப்பதாகச் சந்தோசப்படுவது ஒருவகை.

உங்களுக்குக் கிடைத்தது ஒரு வரமாகக் கூட இருக்கலாம். அதை ஏன் சாபம் என்று நினைத்து மருக வேண்டும்?

அமெரிக்கா. அந்தப் பெண்ணுக்கு ஐந்தாவதுமுறை திருமணம் நடந்தது.

இரவு... படுக்கையறையில் "உன் முதல் கணவன் எப்படி இறந்தான்?" என்று கேட்டான் புதுக்கணவன்.

"விஷக்காளானை தின்று விட்டதால் செத்தான்."

"இரண்டாமவன்...?"

"அவனும் விஷக்காளான் தின்றுதான் உயிரை விட்டான்.மூன்றாவது கணவனும் அதே வழியில்தான் முடிந்து போனான்..."

புதுக்கணவன் உசாரானான்.

"நான்காமவன்...?"

"ஓ அவனா? அவனுக்குக் களான் பிடிக்காதாம் அதனால் கழுத்துமுறிந்து செத்துப் போனான்!"

இது போன்ற மனைவி வாய்க்காமல் போனாளே என்று நீங்கள் சந்தோசப்பட்டு விட்டு போகலாமே!

வெளிச்சூழ்நிலைகளை மனரீதியாக ஏற்றுக் கொண்டால் ஓர் உணர்வு; நிராகரித்தால் வேறோர் உணர்வு இரண்டையுமே நீங்கள் தான் உருவாக்குகிறீர்கள். இது பற்றிய கவனத்துடன் இருந்தால், நீங்களாக ஏன் வலியை உருவாக்கப்போகிறீர்கள்? ஆனால் பெரும் பாலான சமயங்களில் கவனமின்றி விழிப் புணர்வு இன்றி உங்கள் மனம் உங்களுக்கு சுகமற்ற உணர்வுகளை உருவாக்கி விடுகிறது.

நீங்கள் எதிர்பாராதது நிகழும்போது உங்களுக்கு கோபம்,எரிச்சல்,ஆற்றாமை, வேதனை என எத்தனையோ உணர்வுகள் வருகின்றன.ஆனால் ஒவ்வொரு கணமும் நீங்கள் எதிர்பார்த்தபடியே நடந்து கொண்டிருந்தால், உங்களுக்கு வாழ்க்கையில் ஆர்வம் குறைந்துவிடும். சவால்கள் அற்ற வாழ்க்கை செத்துப்போன வாழ்க்கை.

வெளிச்சூழ்நிலைகள் எப்படி அமைந்தாலும் அவற்றை உங்கள் திறனுக்கேற்றபடி எதிர்கொண்டு உள்சூழ்நிலையை அமைதியாக வைத்திருந்தீர்கள் என்றால் எதுவும் பிரச்சினையாகத்தோன்றாது.

"அப்படியானால் வருவதை கேள்வியின்றி ஏற்றுக்கொள்ள வேண்டுமா?"

உங்களைச் சுற்றி நடப்பதையெல்லாம் அப்படியே ஏற்றுக்கொள்ள ஆரம்பித்தீர்கள் என்றால் அது பேரழிவுக்குத்தான் வழிகோலும். சோம்பேறியாகி, எதற்கும் உதவாதவர் ஆகிவிடுவீர்கள். உங்களுக்கு தேவையானதை, நீங்கள் விரும்புவதை உருவாக்கிக்கொள்ள தேவையான அத்தனை செயல்களையும் முயற்சிகளையும் செய்யுங்கள்.

இலட்சம் மனிதர்கள் உங்கள் விருப்பத்துக்கு நேரெதிராக இருக்கக்கூடும். எதிர்ப்பு இருந்து கொண்டுதான் இருக்கும். எந்தக் குறிப்பிட்ட சூழ்நிலையும் எல்லோருக்கும் பொருத்தமானதாக அமைந்துவிடுவதில்லை.

இங்கே குறுக்கில் ஒரு தடை வந்து, அங்கே ஒரு எதிர்பாராத திருப்பம் வந்தால்தானே வாழ்க்கையில் சாதிக்க வேண்டும் என்ற ஆசையே வரும்? நம்முடன் மோதுவதற்கான எதிரணிவீரர்களே இல்லாமல் விளையாடினால் எந்த விளையாட்டுத்தான் சுவையாக அமையும்? தள்ளி நின்று வேடிக்கை பார்த்துவிட்டு போவதல்ல வாழ்க்கை. களத்தில் இறங்கி, வருவதை எதிர்கொண்டு, சளைக்காமல், நம்பிக்கை இழக்காமல், வெற்றி பெறுவதில்தான் திருப்தி இருக்கிறது.

தேவையான புத்திசாலித்தனத்தை பயன்படுத்தி, நம்வேலையை நாம் தொடர்ந்து செய்து கொண்டேதான் இருக்கவேண்டும்.

உங்களுக்குக் குறிப்பிட்ட ஒருமீன்தான் வேண்டுமென்று தண்ணீரில் வலை வீசிப் பாருங்கள் அந்த மீன் கிடைக்காமல்வேறு மீன்கள் மட்டுமே சிக்கலாம். அல்லது அந்த மீனுடன் இன்னும் நூறு மீன்கள் சேர்ந்து சிக்கலாம். வாழ்க்கையும் அப்படித்தான்!

கேட்டது எதுவும் பரிசுப்பொட்டலத்தில் கட்டப்பட்டு, உங்கள் முகவரிக்கு வந்து சேர்வதில்லை. தேவையற்றதைப்பார்த்து வெறுத்துக்கொண்டு இருப்பதைவிட தேவையானதைக்கண்டு பிடித்து எடுத்துக் கொள்வதுதான் புத்திசாலித்தனம்.

பிரச்சினை இருக்கும் எந்த இடத்திலும் அதற்கொரு தீர்வும் இருக்கும். எதன்பின்னால் போகப்போகிறோம் என்பது நம் விருப்பம். அமுதமா, விஷமா...நீங்கள் தேர்வு செய்யுங்கள்!

சத்குரு ஜக்கி வாசுதேவ்

# ஈழத்தின் முதற் பெண் கவிஞரும் முதற் பெண் மொழிபெயர்ப்பாளருமான பண்டிதை பத்மாசனி அம்மாள்

04



ஸ்ரீமதி ந.பத்மாசனி அம்மாள்

நாற்பத்தெட்டு பாடல்களில் அமைந்த இம் மொழிபெயர்ப்பிற் பெருமளவான பாடல்கள் (42) அறுசீர் விருத்த யாப்பில் அமைந்துள்ளன. சமாதி சாசனம் என்னும் தலைப்பில் அமைந்த இறுதி ஆறு பாடல்களும் கலிவெண்பா என்னும் யாப்பில் அமைந்துள்ளன. ஆங்கிலக்கவிதைகளை தமிழ் மரபுக் கவிதையாகவே மொழிபெயர்த்த பத்மாசனியின் எளிமையான மொழி பெயர்ப்புக்கு,

"இங்கிவர்க் காதத் தீயும் இனி யெரிந்திடவே மாட்டா

தங்குறை மனையாள் தானும் அரும்பணி இயற்றாள் இன்னோர்

பங்கமில் வருகை பார்த்தே தனையரார் முத்தம் வேண்டிக்

தங்களின் மாறு கொண்ட தாளினும் ஏறமாட்டார்"

"உண்மை சேரு நல்லுரை உற்றுளோன்

வண்மையாளனாய்த் திகழும் மாண்பினோன்

கண்ணிம் செறி கடவுளும் இவற் கெண்ணுமோர் பெரும் பேற்றை ஈந்தனன் (45)

என்னும் இரு பாடல்களும் உதாரணங்களாக உள்ளன.

"The curfew bell Kenlis the parting day" எனும் தொமஸ்கிரேயின் முதற் பாடலடியை "சயனமாமணியின் சத்தம் பகலின் சா மணியைச்நேர்ந்து" எனத்தமது முதற் பாடலடியாக மொழி பெயர்த்துள்ளார். இவரது மொழி பெயர்ப்பில் பின்வரும் இரு விடயங்களை அவதானிக்கலாம்.

1. விளக்கம் போதாத இடங்களில் உரிய ஆங்கிலச்சொல்லை அடைப்புக்குறிக்குள் தருதல்,

உதாரணமாக:

"தன்னொடு மெதிர்ந்து நின்ற தகைபெறு காம்ப்ட் (Hampden)னாக மன்னிய வீரருக்கு வந்திருந்தாரு மாவார்" (17)

தேசொன்று மில்லாராகி மௌன மாந்திறத்தையுற்ற மாசறு மில்ட்டன் (Milton) ஆக வாழ்ந்திருந்தாருமாவர் தேசத்தின் குருதியாலே கொடுமையாந் திறம் பெறாத ஆசிலாக்குரும்வெல் (Cromwell) ஆக வாழ்ந்திருந்தாரு மாவர்" (18)

2. தமிழ்ப்பண்பாட்டிற்கேற்ற மாற்றங்களை மேற்கொள்ளல் பிற மொழிப்பாடலை மொழி பெயர்க்கும் போது இலக்கு மொழிக்குரியோர்

**கொழும்பில் நடைபெற்ற சர்வதேச தமிழ் எழுத்தாளர் மாநாட்டில் சமர்ப்பிக்கப்பட்ட ஆய்வுக்கட்டுரை**

இலகுவில் விளங்கிக்கொள்ளக்கூடிய வகையில் அவர்களின் புவியியற் பண்பாட்டு கூறுகளை கவனித்து மொழி பெயர்ப்பு அவசியமாகும். உமறுப் புலவரின் சீறா புராணத்தில் அரபு நாட்டின் வர்ணனை தமிழகத்தின் மருதநில வர்ணனையாக மாற்றம் பெற்றுள்ளது. உமர்கய்யாமின் பாடல்களை மொழி பெயர்த்த கவிமணி தேசிக விநாயகம்பிள்ளை "A book of verse" என்னும் தொடரை தமிழ் பண்பாட்டிற்கேற்பக் "கையிற் கம்பன் கவியுண்டு" என்று மொழி பெயர்த்தார். அதே போல பண்டிதை பத்மாசனியின் தொமஸ்கிரே குறிப்பிட்ட இங்கிலாந்து மரங்களுக் குப்பதிலாக,

"பொரி அரை ஞாழற் கீழும் பூமலி வாகைக் கீழும்

மருவியே செறிகள் சூழ்ந்து பயங்கு பாழ்நிலைய வாகித்

தெரியும் இச்சிறிய கல்லி னறை

**ம.பா. மகாலிங்கசிவம்**

தொறும் இந்த நாட்டிற்கு உரியராம் மூடமுன்னோர் உறுதியில் பொருந்துகின்றார்"

எனச் சங்க இலக்கியங்களிற் குறிப்பிடப்படும் ஞாழல், வாகை முதலிய தமிழர்களுக்குத்தெரிந்த மரங்களைக்கொண்டு கருத்தை விளங்க வைக்கின்றார்.

(தொடரும்)

## யாழ்ப்பாண விஞ்ஞான சங்கத்தின் பிரிவு A வழங்கும்...


# யாழ்.மாவட்டத்துக்கான ஆழ்கடல் மீன்பிடித்துறையின் அபிவிருத்தியும் எதிர்நோக்கும் சவால்களும்

கடல் வளமானது திறந்த, மட்டுப்படுத்தப்பட்ட ஆனால் புத்துயிர்ப்படையக்கூடிய வளமாகும். இவற்றுள் பிரதானமானது மீன்பிடி வளம். இலங்கையின் மீன்பிடி வளத்தினை உற்று நோக்கினால் அது கரையோர மீன்பிடி, கரைக்கப்பாலான மீன்பிடி, ஆழ்கடல் மீன்பிடி என மூன்று பெரும் பிரிவுகளை உள்ளடக்கியுள்ளது.

இவற்றுள் கரையோர மீன்பிடியானது கடற்கரையோரத்திலிருந்து 40 கி.மீ தூரம் வரையான மீன்பிடி எனவும் 40 கி.மீ முதல் 100 கி.மீ தூரம் வரையான மீன்பிடி கரைக்கப்பாலான மீன்பிடி எனவும் 100 கி.மீ க்கப்பாற்பட்ட மீன்பிடியானது ஆழ்கடல் மீன்பிடி எனவும் நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

எனினும் இலகுவாகக் கையாள்வதற்காக சர்வதேச ரீதியில் இப்பாகுபாடானது கரையோர மீன்பிடி, கரைக்கப்பாலான/ ஆழ்கடல் மீன்பிடி என நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது.

இலங்கையின் இரண்டு கண்களாக விவசாயம், மீன்பிடி எனும் இரண்டு துறைகளையும் குறிப்பிடலாம். இவற்றுள் மீன்பிடித்துறையானது புரத உணவை வழங்கும் மூலமாகவும் வேலைவாய்ப்பு மற்றும் வெளிநாட்டு பணவரவுகளின் மூலமாகவும் பொருளாதார மேம்பாட்டில் முக்கிய பங்கு வகிக்கிறது. மீன்பிடித்துறையானது 65% விலங்குப் புரதத்தை நாட்டுக் வழங்குவதுடன் 6இலட்சம் பேருக்கு நேரடியாகவோ, மறைமுகமாகவோ வேலைவாய்ப்பினையும் வழங்குவதாக தேசிய நீர்வாழ்வள ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி நிறுவக (NARA) புள்ளி விபரங்கள் தெரிவிக்கின்றன. மீன்பிடித்துறையானது 2% மொத்த உள்ளூர் உற்பத்திக்கு பங்களிக்கின்றது.





உரு -02 இலங்கையின் அமைவிடம்-பிரத்தியேக பொருளாதார வலயம் ஆழ்கடல் மீன்பிடி வளங்களின் அமைவிடம் என்பன காட்டப்பட்டுள்ளது.

கரையோர மீன்பிடி,கரைக்கப்பாலான / ஆழ்கடல் மீன்பிடி எனும் பதங்கள் எல்லா நாட்டிலும் பாவனையிலிருந்தாலும் இதுவரை ஒரு தெளிவான வரைவிலக்கணம் இப்பதங்கட்கு நிர்ணயிக்கப்படவில்லை.

ஆழ் கடல் மீன்பிடி என்பதற்கான வரைவிலக்கணம் வேறுபட்ட இடங்களில் வாழும் மக்களுக்கு வேறுபட்டுக் காணப்படுகின்றது.

எனினும் வசதிக்காக விஞ்ஞானிகளும் சமுத்திரவியலாளர்களும் ஆழ்கடல் மீன்பிடியினை எவ்வாறு நிர்ணயம் செய்துள்ளார்கள் என்பதை உரு1 காட்டுகிறது. தற்போது கடற்கரையோரத்திலிருந்து கண்டவிளிம்பு வரையான பகுதி கண்டமேடை எனவும் கண்டமேடைக்கப்பாற்பட்ட பகுதி ஆழ்கடல் மீன்பிடிக்குரிய பகுதி எனவும் கருதப்படுகிறது. பொதுவாக அநேக மீன்களின் பரம்பல் 100 மீற்றர் ஆழத்துக்கப்பால் காணப்படுவதாக நம்பப்படுகிறது.





உரு-01 கரையோர கரைக்கப்பாலான/ஆழ்கடல், மீன்பிடியை வரையறை செய்தமையை விளக்கும் படம்

இலங்கையின் வடபகுதியின் சமுத்திரவியலுக்குரிய சூழலமைவை உரு2 காட்டுகிறது. இங்கு இலங்கைக்கும் இந்தியாவுக்குமிடையேயான கடல் எல்லையையும் அவதானிக்க முடிகிறது.

தற்போது இலங்கையில் யாழ்.மாவட்டத்தில் அதிகளவில் மேற்கொள்ளப் படுவது கரையோர மீன்பிடியாகும்.

வடபகுதியின் பெரும்பாலான மீனவர்கள் கரையோர மீன்பிடித் தொழிலிலேயே தங்கியுள்ளனர்.

மொத்தக் கடல்மீன் உற்பத்தியில் 60% க்கும் அதிகமானது கரையோர மீன்பிடியிலிருந்தே பெறப்படுகிறது. குறிப்பிட்ட சில மீன் இனங்களைத் தவிர ஏனைய மீனினங்களை அடிப்படையாகக் கொண்டு பார்க்கும் போது கரையோர மீன்பிடியானது தற்போது அதிகூடிய அறுவடை அடைந்து விட்டதாக நம்பப்படுகிறது.




கடந்த காலத்தில் கரையோர மீன்பிடித் தொழிலின் வளர்ச்சிக்கும் விரிவாக்கத்துக்கும் முன்னுரிமை வழங்கப்பட்டு வந்துள்ளது.

கரையோர மீன்பிடியானது மிகக் குறைந்த முதலீட்டுடன், மிகக் குறைந்த செலவில் அதிகூடிய விளைச்சலைப் பெறக்கூடியதாகத் திகழ்தல், தொழிநுட்ப அறிவு அதிகம் தேவைப்படாமை போன்ற சிறப்பான பண்புகளைக் கொண்டிருப்பதனால் எம் நாட்டு மக்கள் கரையோர மீன்பிடியையே அதிகம் தேர்ந்தெடுக்கின்றனர். மாறாக ஆழ்கடல் மீன்பிடியானது அதிக முதலீட்டையும் உயர் தொழில்நுட்பத்தையும் உள்வாங்குவதால் இது மிகக் குறைந்த முன்னுரிமையையே கொண்டு திகழ்கிறது.

இலங்கையில் குறிப்பாக வடபகுதியில் ஆழ்கடல் மீன்பிடியானது அண்மைக்காலம் வரை குறிப்பிடத்தக்களவுக்கு நடைமுறையில் இருக்கவில்லை.

இலங்கையைப் பொறுத்தவரையில் 1980க்கு முன் மொத்த உற்பத்தியில் 7-10% இனை மட்டுமே ஆழ்கடல் மீன்பிடி பெற்றுக் கொடுத்திருந்த போதிலும் 2009 ஆம் ஆண்டில் அது மொத்த மீன் உற்பத்தியின் 40% ஐ எட்டியுள்ளது. (மூலம்:மீன்பிடியியல் நீர்வாழ்வள அமைச்சின் புள்ளிவிபரங்கள் 2009). உரு3 இதற்கான விளக்கத்தைத் தெளிவுபடுத்துகிறது.

இலங்கையின் வடபகுதியை உற்று நோக்குவோமானால் வடமராட்சியின் வட கிழக்கு, முல்லைத்தீவு கடற்பகுதியின் ஆழ் கடற்பகுதியானது மிகுந்த உயிரின வளத்தைக் கொண்டுள்ளது.

யாழ். கடல் நீரேரி யாழ்.குடாவைச் சூழவுள்ள தீவுப்பகுதிகள், வலி.வடக்கினைச் சூழவுள்ள கடற்பகுதி மற்றும் பாக்கு நீரிணைப் பகுதி என்பன ஆழம் குறைந்த கடற்பகுதிகளாகும்.

எனவே, ஆழ்கடல் மீன்பிடியானது வடமராட்சியின் வடகிழக்குப் பகுதி, முல்லைத் தீவுப்பகுதி என்பவற்றில் செறிவாக்கப்படலே சிறந்தது. (உரு2)

(தொடரும்)

கலாநிதி திருமதி சிவசாந்தினி குகநாதன்
இணைப் பேராசிரியர்,
விலங்கியற்றுறை, யாழ்.பல்கலைக்கழகம்.

## வாரத்திற்கு ஒரு புதிர்! 42

ஒளி-மின் முடிவிட மாற்றீடுகளுடன் தகவல் சமிக்ஞைகளை டியிட்டல்(Digital) முறையில் கடத்தும் ஊடகம் யாது?

விடைகளை 20.06.2011 இற்கு முன் கிடைக்கக் கூடியதாக அனுப்ப வேண்டிய முகவரி:

Mr.S.Ketheeswaren
Editor, Section A
Jaffna Science Association
Library
University of Jaffna, Jaffna.

சரியான விடையை அனுப்பும் அதிர்ஷ்டசாலிக்கு ரூபா 250/- பணப்பரிசு வழங்கப்படும்.
இப் பணப்பரிசினை யாழ். பல்கலைக்கழக விஞ்ஞான பீட தாவரவியல் துறையில் கலாநிதி பி.செவ்வேளிடம் (தலைவர் பிரிவு A) நேரில் சென்று பெற்றுக் கொள்ளலாம்.

பரிசுக்கு அனுசரணை வழங்குவோர்:
மக்கள் வங்கி,
யாழ்.பல்கலைக்கழகம்.

**புதிர் 41 க்கான 250/-பரிசு பெறும் அதிர்ஷ்டசாலி**

திரு.கே.ராஜகோபால்
அடைக்கலம் தோட்டம்,
கந்தசாமி கோயிலடி,
வட்டுக்கோட்டை.

**புதிர் 41 இற்கான கேள்வியும் விடையும்:**

Dewey Decimal Classification என்பது என்ன தேவைக்காக பயன் படுத்தப்படுகின்றது?

தகவல் வளங்களை பாடரீதியில் பகுப்பதற்காக பயன்படுத்தப் படுகிறது.

**யாழ்ப்பாண விஞ்ஞான சங்கம்**
**புதிர் இல . 42**

சரியான விடை :..........................
முழுப்பெயர் :..........................
முகவரி :..........................
:..........................
தொ.பே. இல :..........................
கையொப்பம் :..........................

37) உப்பளம் ஒன்று அமைவதற்குப் பொருத்தமான பிரதேசம்
1) கடற்கரை ஓரம் 2) மலையடிவாரம்
3) ஆற்றங்கரை 4) புற்சமவெளி


38) கூடு கட்டாத ஒரு பறவை
1) மைனா 2) கிளி 3) காகம் 4) குயில்


39) குத்துவிளக்கொன்றை ஏற்றுவதற்கு உபயோகிக்கப்படும் எண்ணெய்
1) மண்ணெண்ணெய் 2) தேங்காயெண்ணெய்
3) நல்லெண்ணெய் 4) மரக்கறி எண்ணெய்


40) சீருடை அணிகின்ற பிரிவினர் அல்லாதவர்
1) மாணவர் 2) பொலிஸார்
3) இராணுவத்தினர் 4) ஆசிரியர்


41) இராக்காலத்தில் சஞ்சரிக்கும் பறவை ஒன்று
1) மின்மினிப்பூச்சி 2) நுளம்பு 3) ஆந்தை 4) பூனை

42) விற்றமின் அதிகமுள்ள உணவுப் பொருள்
1) சோறு 2) பழவகை 3) பலாக்காய் 4) பாண்

43) எமது நாட்டின் தேசியப் பறவை
1) 2) 3) 4)



44) மழைமானி ஒன்றின் சரியான அமைப்பு
1) 2) 3) 4)


45) உருவில் காட்டப்பட்டுள்ள வீதிச் சமிக்ஞையால் விளக்கப்படுவது

1) இங்கே ஒலி எழுப்பத்தடை
2) மருத்துவமனை முன்னால் உள்ளது
3) அபாயகரமான சரிவு உண்டு
4) வீதி மூடப்பட்டுள்ளது

46) பின்வரும் தையல் முறைகளில் கோழிக்காற் தையலைக் குறிப்பது.
1) 2) 3) 4)




47) ரம்புட்டான் பழங்களை வீதியோரமாக இருந்து விற்பனை செய்யும் பாலன் வாரத்தின் 6 நாட்களிலும் விற்பனைக்குக் கொண்டுவந்த பழங்களினதும், ஒரு தினத்தில் விற்பனை செய்யப்பட்ட பழங்களினதும் விபரங்கள் அட்டவணையில் தரப்பட்டுள்ளன.

| | திங் | செவ் | புதன் | வியா | வெள் | சனி |
|---|---|---|---|---|---|---|
| விற்பனைக்கு கொண்டுவரப்பட்ட பழங்கள் | 350 | 300 | 450 | 500 | 400 | 250 |
| அன்றைய தினம் விற்கப்பட்ட பழங்கள் | 300 | 300 | 400 | 250 | 350 | 200 |

i) அதிகூடிய பழங்கள் எந்நாளில் விற்பனை செய்யப்பட்டுள்ளது?
..............................
ii) எல்லாப் பழங்களும் விற்பனை செய்யப்பட்ட நாள் எது?
..............................
iii) விற்பனைக்குக் கொண்டுவந்த பழங்களில் சரி அரைவாசிப் பழங்கள் விற்கப்பட்ட நாள் எது? ..............................
iv) பாலன் ஒவ்வொரு நாளும் எஞ்சும் பழங்களையும் சேர்த்து அடுத்தநாள் விற்பனைக்காகக் கொண்டு வருவார் எனின் வெள்ளிக்கிழமையன்று அவர் புதிதாகக் கொண்டு வந்த பழங்கள் எத்தனை? ..............................
v) ஆறு தினங்களிலும் விற்பனை செய்யப்பட்ட பழங்களின் மொத்த எண்ணிக்கை யாது? ..............................
vi) விற்கப்பட்ட ரம்புட்டான் பழங்களின் எண்ணிக்கையைப் பின்வரும் வரைபில் குறித்துக் காட்டுக.




48) ஒரு தோட்டத்திலிருந்து 685 தேங்காய்கள் பறிக்கப்பட்டன, ஒவ்வொரு குவியலிலும் சமமான எண்ணிக்கை இருக்குமாறு அவை 5 குவியல்களாக பிரிக்கப்பட்டன எனின் ஒரு குவியலில் உள்ள தேங்காய்கள் எத்தனை? ..............


49) 40 பக்கம் கொண்ட அப்பியாசக்கொப்பி ஒன்றின் விலை ரூ. 12 ஆகும்.
i) 100 ரூபாவுக்கு எத்தனை கொப்பிகள் வாங்கலாம்? ..............
ii) கொப்பிகளை வாங்கியபின் அவருக்குக் கிடைக்கும் மீதிப்பணம் எவ்வளவு? ..............

50) வியாபாரி ஒருவர் தன்னிடமிருந்த 3 பூசணிக்காய்களை நிறுத்த விதம் உருவில் உள்ளது.


1) B பூசணிக்காயின் நிறை 700 கிராம் ஆகும். C பூசணிக்காயின் நிறை 1 கிலோகிராம் 500 கிராம் ஆகும் எனின் A பூசணிக்காயின் நிறை என்ன?
..........கிலோகிராம்........... கிராம்
2) 3 பூசணிக்காய்களினதும் மொத்த நிறை யாது? ..............................

51) 1 கிலோகிராம் வாழைப்பழத்தில் 18 காய்கள் அடங்கும் எனின் 4 கிலோகிராம் வாழைப்பழத்தில் எத்தனை காய்கள் அடங்கும்?
..............................

52)

1) உருவிலுள்ள திண்மவுருவின் பெயர் என்ன?
..............................
2) அதில் எத்தனை முகங்கள் உள்ளன?
..............................

53)

உருவில் நிழற்றப்பட்டுள்ள பகுதியை முழு உருவின் பின்னமாக எழுதுக.
..............................

54) ஒரு போத்தல் கோடியல் 750 மில்லிலீற்றர் கொண்டது. ஒரு போத்தல் கோடியலுக்கு அது போன்று இரு மடங்கு நீர் ஊற்றி கோடியல் பானம் தயாரிக்கப்பட்டால் தயாரிக்கப்பட்ட பானத்தின் அளவை லீற்றர் மில்லிலீற்றரில் கூறுக.
........... லீற்றர் ............ மில்லிலீற்றர்

55) 250 கிராம் முந்திரிகைப் பருப்பின் விலை 65 ரூபாவாகும்.
1 கிலோகிராம் முந்திரிகைப் பருப்பின் விலை என்ன? ..........

☛ **பின்வரும் வினாக்களில் அடைப்பிட்டுத் தரப்பட்டுள்ள விடயத்துக்குப் பொருந்துமாறு வரக்கூடிய சரியான விடையின் கீழ்க் கோடிடுக.**

56) நீராவித் துளிகளின் மீது (மழை, வெயில், காற்று) படுவதனால் வானவில் உண்டாகின்றது.

57) ஆதிகாலத்தில் மனிதன் கல்லோடு கல்லை உரசியதன் மூலம்(காற்றை, ஒலியை, நெருப்பை) உண்டு பண்ணினான்.

58) உயிரங்கிகள் யாவும் (ஒட்சிசன், காபனீரொட்சைட்டு, ஐதரசன்) வாயுவையே சுவாசிக்கின்றன.

59) (தர்மசக்கரம், சிலுவை, பிறைச்சந்திரன்) முஸ்லிம் மக்களின் மத அடையாளமாக இருக்கிறது.


60) காந்தம் (செம்பு, பித்தளை, இரும்பு)ப் பொருட்களை மாத்திரம் கவர்கின்றது.

☛ **பின்வரும் வினாக்களுக்குரிய சரியான விடையை எழுதுக.**

61) இலங்கையின் மிக நீளமான நதி ..............................
62) இலங்கையை ஆட்சி செய்த கடைசி மன்னன்..............................
63) இலங்கையின் சுதந்திரத்துக்குப் போராடிய தமிழ்த் தேசியத் தலைவர் ஒருவர் ..............................
64) இலங்கையின் தலைநகரம் ..............................

65) 'பலத்த மழை பெய்து இப்போதுதான் ஓய்ந்திருக்கிறது' எனும் கருத்தின் கீழ் மழைக்குப் பின்னர் நீர் காணக் கூடியவற்றை ஆறு வாக்கியங்களில் எழுதுக.
(ஒவ்வொரு வாக்கியத்திலும் நான்கு சொற்களேனும் இடம் பெறுவதோடு, அவ் வாக்கியங்களில் எழுவாய்,பயனிலைத் தொடர்பு சரியாக இருக்க வேண்டும்)
1) ..............................
2) ..............................
3) ..............................
4) ..............................
5) ..............................
6) ..............................

# இலங்கை மீது பொருளாதார தடை தமிழக அரசுக்கு சீமான் பாராட்டு



## தமிழினத்துக்கு விடிவு தேடித்தரும் தீர்மானம்

இலங்கையில் போர்க்குற்றங்களை நிகழ்த்தியவர்களை போர்க்குற்றவாளிகள் என்று பிரகடனப்படுத்த ஐக்கிய நாடுகள் சபையை இந்திய அரசு வலியுறுத்த வேண்டும், இலங்கைக்கு எதிராக இந்திய அரசு பொருளாதாரத் தடை விதிக்க வேண்டும் என்றும் வலியுறுத்தி தமிழக சட்டப் பேரவையில் ஒருமனதாக தீர்மானம் நிறைவேற்றப்பட்டிருப்பதை நாம் தமிழர் கட்சி மகிழ்ச்சியுடன் வரவேற் கின்றது என்று நாம் தமிழர் கட்சியின் தலைவர் சீமான் தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில், சம உரிமையுடைய வாழ்வைப் பெறுவதற்காக கடந்த அரை நூற்றாண்டுக் காலத்திற்கும் மேலாக போராடி வரும் ஈழத் தமிழினத்தின் விடுதலை வரலாற்றில் தமிழக சட்டப் பேரவையில் நிறைவேற்றப்பட்டுள்ள தீர்மானம் ஒரு திருப்புமுனையாகும்.

3 ஆவது முறையாக தமிழகத்தின் முதல் அமைச்சராகப் பொறுப்பேற்றுள்ள முதல் அமைச்சர் ஜெயலலிதாவுக்கும் தீர்மானத்திற்கு ஆதரவாக நின்ற சட்டப் பேரவையில் இடம்பெற்றுள்ள அனைத்து கட்சிகளின் உறுப்பினர்களுக்கும் நாம் தமிழர் கட்சி நன்றி தெரிவித்துக் கொள்கிறது.

பயங்கரவாதத்திற்கு எதிரான போர் என்று கூறி ஈழத் தமிழினத்திற்கு எதிரான திட்டமிட்ட இனப்படு கொலைபோரைத் தொடங்கி இந்தியா உள்ளிட்ட பன்னாட்டு ஆதரவுடன் இரண்டரையாண்டு காலம் நடத்தப்பட்ட அந்தப் போரில் மட்டும் ஒரு இலட்சம் தமிழர்கள் கொல்லப்பட்டுள்ளனர்.

பேரழிவு குறித்த தனது சாட்சியத்தை அளித்த மன்னார் மாவட்ட பேராயர் ராயப்பு ஜோசப் போர் முடிந்த பின்னர் வன்னி முள் வேலி முகாம்களுக்கு வந்து சேர்ந்த மக்களின் எண்ணிக்கை 1 இலட்சத்து 46 ஆயிரத்து 679 பேர் குறைவாக உள்ளனர் என்றும் அவர்கள் கொல்லப்பட்டோ அல்லது காணாமல் போய் உள்ளவர்களாகவோ இருக்கலாம் என்று எழுத்து பூர்வமாக வாக்கு மூலம் அளித்தார்.


உலகை அதிர்ச்சியில் ஆழ்த்திய அந்த உண்மையை இன்று இலங்கை அரசு மறுக்கவில்லை. தமிழக சட்டப்பேரவை இலங்கைக்கு எதிராக பொருளாதாரத் தடையை அறிவிக்குமாறு மத்திய அரசை வலியுறுத்தியுள்ளது.

இராஜ தந்திர ரீதியில் மிகச் சாமர்த்தியமான தீர்மானமாகும்.

தமிழகத்தில் ஆட்சி மாற்றம் கொண்டு வந்த தமிழ் மக்கள் எதை மிகவும் ஆவலாக எதிர்பார்த்தார்களோ அந்த விடயத்தை முதல் அமைச்சர் ஜெயலலிதா அனைத்துக் கட்சிகளின் பேராதரவோடு நிறைவேற்றியுள்ளார்.

வரலாற்று சிறப்பு மிக்க தீர்மானம் நிறைவேற்றியது மட்டுமின்றி காணாமல் போன மீனவர்கள் 4 பேரை மீட்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்று தமிழக முதல்வர் தெரிவித்ததற்கும் நாம் தமிழர் கட்சி நன்றி கூறுகிறது. இவ்வாறு அவர் கூறியுள்ளார். (ஸ்ரீ-2)

# இலங்கை தமிழர்களை அழித்த பெருமை தி.மு.க.வையே சாரும்



## விஜயகாந்த் தெரிவிப்பு

(சென்னை) இலங்கைத்தமிழர்களை அழித்த பெருமை முந்தைய தி.மு.க. ஆட்சியாளர்களையே சாரும் என எதிர்க்கட்சித் தலைவர் விஜயகாந்த் குற்றம் சாட்டியுள்ளார்.

நேற்று முன்தினம் சட்டசபையில் , இலங்கைத் தமிழர்கள் தொடர்பான தீர்மானத்தின் மீது நடந்த விவாதத்திலேயே எதிர்க்கட்சித் தலைவர் விஜயகாந்த் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து உரையாற்றுகையில்,

இப்பிரச்சினை தொடர்பாக முந்தைய தி.மு.க.ஆட்சியில் இதே சபையில் விவாதிக்கப்பட்டது. இந்தப் பிரச்சினைக்காக அப்போதைய முதல்வர் கருணாநிதி உண்ணாவிரதம் இருந்தார்.

சிறிது நேரம் உண்ணாவிரதம் இருந்துவிட்டு இலங்கையில் சண்டை நின்று விட்டது என்றார். மறுநாள் மழைவிட்டும் தூவானம் விடவில்லை என்றார்.


இது எப்படி சாத்தியம்? அப்பாவி இலங்கைத் தமிழர்களை அழித்த பெருமை முந்தைய தி.மு.க.ஆட்சியாளர்களையே சாரும். இலங்கை அரசு நடத்திய மக்கள் தொகை கணக்கெடுப்பில் ஒரு பகுதியில் எட்டு இலட்சம் தமிழர்களை காணவில்லை என்றனர். அதன் பின்னர் நான்கு இலட்சம் பேர் இருந்ததாகவும் அவர்களில் 40 ஆயிரம் பேர் முள்வேலியில் அடைத்து கொன்று குவிக்கப்பட்டதாகவும் தகவல் வெளியானது.

மீதி தமிழ் மக்கள் என்ன ஆனார்கள் என்றே தெரியவில்லை. இலங்கைத் தமிழர் விவகாரம் , காவிரி பிரச்சினை உள்ளிட்ட அனைத்து பிரச்சினைகளிலும் தி.மு.க. சரிவர செயற்படவில்லை எனத் தெரிவித்தார்.

இவ்வாறு விஜயகாந்த் பேசியதற்கு, தி.மு.க.உறுப்பினர்கள் கடும் எதிர்ப்பு தெரிவித்து கோஷம் போட்டனர். விஜயகாந்த் பேச்சுக்கு பதிலளிக்க வாய்ப்பு அளிக்குமாறு துரைமுருகன் கேட்டார். அனுமதி தராததால் அக்கட்சி உறுப்பினர்கள் வெளிநடப்பு செய்தனர்.

(ஸ்ரீ-2)

# இலங்கைக்கு எம்.எல்.ஏக்கள் குழுவை அனுப்ப வேண்டும்



## புதிய தமிழகம் கிருஷ்ணசாமி கோரிக்கை

நிலங்களை இழந்து நிராதரவாக விடப்பட்டுள்ள மக்களின் வாழ்க்கை தொடர்பான உண்மைகளை வெளி உலகிற்குக் கொண்டு வர தமிழக எம்.எல்.ஏ குழுவை அனுப்பி வைக்க வேண்டும் என புதிய தமிழக கட்சி உறுப்பினர் டாக்டர் கிருஷ்ணசாமி கோரிக்கை விடுத்துள்ளார்.

தமிழக சட்டசபையில் நேற்று முன்தினம் தமிழர்களைக் கொன்றழித்த இலங்கை மீது பொருளாதார தடை விதிக்க வேண்டும் என்று இந்திய அரசை வலியுறுத்தி தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

அந்தத் தீர்மானத்தின் மீது நடந்த விவாதத்தில் கலந்து கொண்டு அனைத்துக் கட்சி உறுப்பினர்களும் பேசினர்.

புதிய தமிழகம் தலைவர் டாக்டர் கிருஷ்ணசாமி பேசுகையில், ராஜபக்ஷ குற்றவாளி கூண்டில் நிறுத்தப்பட்டால்தான் அங்கு தமிழர்கள் உரிமையைப் பெற முடியும். இலங்கையில் உள்ள நிலைமையை நேரில் கண்டறிய தமிழக எம்.எல். ஏக்கள் குழுவை அனுப்ப வேண்டும். அப்போதுதான் உண்மை நிலை குறித்துப் பிரதமருக்கு தெரிவிக்க முடியும் என்றார். (ஸ்ரீ-2)

# சென்னை தீ விபத்தில் இலங்கைத் தொழிலதிபரின் மனைவியும் இரண்டு மகள்களும் உயிரிழப்பு

சென்னை சேத்துப்பட்டு அடுக்குமாடி குடியிருப்பில் திடீரென ஏற்பட்ட தீவிபத்தில் இலங்கை தொழிலதிபரின் மனைவியும் 2 மகள்களும் உயிரிழந்துள்ளனர்.

இலங்கையைச் சேர்ந்த தொழிலதிபர் ஞானச்சந்திரனும் (வயது 55). அவருடைய இன்னொரு மகளும் பலத்த தீக்காயங்களுடன் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.


இலங்கை தமிழர்களான இவர்கள் அவுஸ்திரேலியாவில் இருந்து இந்தியாவில் குடியேறியுள்ளனர். சம்பவ தினமான கடந்த செவ்வாய்க்கிழமை தொழிலதிபர் ஞானச்சந்திரன் வீட்டில் இருந்து பயங்கர புகை கிளம்பியதாக அந்த அடுக்குமாடி குடியிருப்பில் வசிப்பவர்கள் தெரிவித்துள்ளனர்.

உடனடியாக தீயணைப்புப் படையினருக்கும், பொலிஸாருக்கும் அறிவிக்கப்பட்டது.

தீயணைப்புப் படையினர் தீயை கட்டுப்பாட்டிற்கு கொண்டுவந்தபோதும் தொழிலதிபரின் மனைவியையும், இரு மகள்களையும் தீயில் எரிந்த நிலையில் சடலமாகவே மீட்டுள்ளனர்.

இவர்கள் குடும்பத்தோடு தீக்குளித்திருக்கலாம் என்று ஆரம்பகட்ட விசாரணை மூலம் கருதுவதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர். சேத்துப்பட்டு பொலிஸார் இச்சம்பவம் தொடர்பில் வழக்கு பதிவு செய்துள்ளனர். (ஸ்ரீ-2)

# பாரதச் செய்திகள்



## வரலாற்றுச் சிறப்புமிக்க தீர்மானம்; ஜெயாவிற்கு பழ.நெடுமாறன் பாராட்டு

இலங்கை மீது பொருளாதார தடை விதிக்கப்படவேண்டும் என்று தமிழக சட்டசபையில் ஜெயலலிதாவால் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தை வரவேற்று இலங்கைத் தமிழர் பாதுகாப்பு இயக்க ஒருங்கிணைப்பாளர் பழ.நெடுமாறன் விடுத்துள்ள அறிக்கையில்.

மஹிந்த ராஜபக்ஷ போர்க்குற்றவாளி என ஐ.நா விசாரணைக்குழு அளித்த பரிந்துரையை ஏற்று சர்வதேச நீதிமன்றம் அவர் மீது நடவடிக்கை மேற்கொள்ளவும் இலங்கைக்கு எதிராக பொருளாதார தடை நடவடிக்கைகளை எடுக்கவும் இந்திய அரசு முன்வரவேண்டும் என தமிழக சட்ட மன்றத்தில் முதல்வர் ஜெயலலிதாவினால் முன்மொழியப்பட்டு நிறைவேற்றப்பட்டு உள்ள தீர்மானத்தை வரவேற்பதோடு முதல்வர் ஜெயலலிதாவை மனப்பூர்வமாகப் பாராட்டுகிறேன்.

ஆறரைக்கோடி தமிழ் மக்களின் பிரதிநித்துவ அமைப்பான தமிழக சட்டமன்றத்தில் நிறைவேற்றப்பட்டுள்ள இந்தத் தீர்மானம் வரலாற்றுச்சிறப்பு வாய்ந்ததாகும்.

ராஜபக்ஷவைப் போர்க்குற்றவாளியாக விசாரிக்க வேண்டும் என்ற கோரிக்கைக்கு வலுசேர்க்கும் தீர்மானம் ஆகும்.

இத்துடன் நின்றுவிடாமல் முதல்வர் ஜெயலலிதா இந்தியா முழுமையிலும் உள்ள அகில இந்தியக் கட்சிகள் ,மாநிலக் கட்சிகள் ஆகியவற்றின் தலைவர்களை அழைத்து டில்லியில் கூட்டம் ஒன்று நடத்தி இத் தீர்மானத்திற்கு அவர்களின் ஆதரவையும் பெறுவதன் மூலம் இந்திய அரசுக்கு மேலும் அழுத்தம் கொடுக்கவும் இந்தியா முழுவதும் இந்தப் பிரச்சினைக்கு ஆதரவு திரட்டவும் வழிவகுக்கும். எனவே இந்த நடவடிக்கையையும் மேற்கொள்ளுமாறு அவரை வேண்டிக் கொள்கிறேன் என்று தெரிவித்தார்.

(ஸ்ரீ-2)

# புலிகளின் இரு ஆயுதக் களஞ்சியங்கள் வவுனியாவில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது

(கொழும்பு)

வவுனியாவில் தமிழீழ விடுதலைப்புலிகளினால் மறைத்து வைக்கப்பட்ட பாரிய இரு ஆயுதக்களஞ்சியத் தொகுதிகள் இராணுவத்தினரால் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

வவுனியாவில் கோவில்குளம் மற்றும் சமலங்குளம் ஆகிய இரு இடங்களிலேயே விடுதலைப்புலிகளின் ஆயுதக்களஞ்சிங்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

மைக்ரோ துப்பாக்கிகள் மற்றும் பல ஆயுதத்தளபாடங்கள் நேர்த்தியான முறையில் பொதிசெய்யப்பட்டு கொள்கலன்களில் அடைக்கப்பட்டநிலையில் 5 அடி ஆழமான கொங்கீறிட் குழியில் புதைக்கப்பட்டிருந்ததாக இராணுவத்தினர் தெரிவித்தனர்.

ரி 56 ரக 13 துப்பாக்கிகள், ரி 66 ரக 47 வெடி மருந்து தொகுதிகள், ரி 56 ரக 5336 வெடி குண்டுகள், 9 மில்லிமீற்றர் கைத்துப்பாக்கி, ரி 56 ரக 5 ரிபில் கருவிகள், கணனி போன்ற மற்றும் பல ஆயுதங்கள் மீட்கப்பட்டுள்ளதாக இராணுவத்தினர் தெரிவித்துள்ளனர்.

(ஸ்ரீ-2)

# தமிழக சட்டமன்ற தீர்மானம் தொடர்பில் பீரிஸ் மௌனம்

தமிழக சட்ட மன்றில் நிறைவேற்றப்பட்ட தீர்மானம் தொடர்பில் வெளிவிவகார அமைச்சர் ஜீ.எல்.பீரிஸ் எவ்வித கருத்துக்களையும் வெளியிடவில்லை.

இந்தத் தீர்மானம் தொடர்பில் அரசாங்கத்தின் நிலைப்பாடு என்ன என ஐக்கிய தேசியக் கட்சியின் தேசிய அமைப்பாளர் ரவி கருணாநாயக்க நாடாளுமன்றில் கேள்வி எழுப்பியுள்ளார். எனினும், இந்தக் கேள்விக்கு வெளிவிவகார அமைச்சர் எதுவித பதிலையும் அளிக்கவில்லை.

இலங்கைக்கு எதிராக பொருளாதாரத் தடைகள் விதிக்கப்பட வேண்டுமென மத்திய அரசாங்கத்தை வலிறுத்தி, தமிழக சட்ட மன்றில் ஏகமனதாக தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

இந்தியாவுடன் நட்புறவு காணப்படுவதாக அரசாங்கம் அறிவித்த போதிலும் இவ்வாறான தீர்மானங்கள் பாரதூரமானவை என ரவி கருணாநாயக்க சுட்டிக்காட்டியுள்ளார்.

இதேவேளை இவ்வாறான விடயங்களை அணுகுவது தொடர்பில் அரசாங்கத்திற்கு போதியளவு அனுபவம் காணப்படுவதாக அவைத் தலைவர் நிமால் சிறிபால டி சில்வா தெரிவித்துள்ளார்.

(ஸ்ரீ-2)

# பழைய மாணவர் சங்க பொதுக்கூட்டம்

(யாழ்ப்பாணம்)

யா/ஆழியவளை சீ.சீ.த.க.பாடசாலையின் வருடாந்த பழைய மாணவர் சங்க பொதுக்கூட்டம் நாளை சனிக்கிழமை காலை 10 மணிக்கு பாடசாலை மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இக் கூட்டத்தில் இப்பாடசாலையின் பழைய மாணவர்கள் அனைவரையும் தவறாது கலந்து கொள்ளுமாறு அதிபர் க.பாஸ்கரன் அறிவித்துள்ளார்.

(ஸ்ரீ)

# கணனிகள் அன்பளிப்பு

(யாழ்ப்பாணம்)

லண்டன் ஸ்ரீ கனக துர்க்கை அம்மன் ஆலயத்தினரால் லண்டன் ஸ்ரீ கனக துர்க்கை அம்மன் யாழ். கணனிப்பயிற்சி நிலையத்திற்கு ஆறு கணனிகள் மாணவர்களின் கணனிக் கல்விக்காக கடந்த 8ஆம் திகதி அன்பளிப்பு செய்யப்பட்டுள்ளது.

(ஸ்ரீ-2)


## 31ஆம் நாள் நினைவும் நன்றி நவிலலும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்

### அமரர் திரு.சிதம்பரப்பிள்ளை பூபாலசிங்கம்

(ஓய்வு பெற்ற மு.ஐ.கட்டு ப.நோ.கூட்டுறவுச் சங்க பணியாளர்)

மழலையாக 10.10.1948 — தெய்வமாக 10.05.2011



எமது இல்லற ஒளிவிளக்கு அணைந்த துயரறிந்து ஓடோடி வந்து பல உதவிகள் புரிந்த கொடிகாமம் ஆட்டோ சங்கத்தினருக்கும், ஆறுதல்கள் வழங்கிய உறவினர்கள், நண்பர்களுக்கும், எமது உளமார்ந்த நன்றிகளைத் தெரிவிப்பதோடு 10.06.2011 வெள்ளியன்று நடைபெறும் வீட்டுக்கிரியைகளிலும், மதிய உணவு உபசாரத்திலும் கலந்து கொண்டு அன்னாரின் ஆன்ம ஈடேற்றத்திற்கு பிரார்த்திக்குமாறு அன்புடன் வேண்டுகின்றோம்.

தகவல்: மூத்த மருமகன்
இ.சிவஞானராஜ்,
(ஆட்டோ கண்ணன்)
பருத்தித்துறை வீதி, கொடிகாமம்.
தொ.பே: 077 6025601

நிகழ்வு நடைபெறும் முகவரி:
பூ.சரஸ்வதி (மனைவி)
கற்சிலைமடு, ஒட்டுசுட்டான்.

(சி-343)



## டுபாயில் உடனடி வேலைவாய்ப்பு

| பிரிவு | | எண்ணிக்கை | மாத ஊதியம் (AED) |
|---|---|---|---|
| GENERAL COOK | (ஜெனரல் குக்) | 20 | 1200-1400 |
| Baker | (பேக்கர்) | 06 | 1200 |
| Waiter | (வெயிற்றர்) | 20 | 800 |
| Butcher | (புஜ்சர்) | 10 | 800 |
| Assistant Cook | (அஸிஸ்டெண்ட் குக்) | 20 | 600 |
| General Cleaner | (ஜெனரல் கிளீனர்) | 30 | 400 |

வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகத்தினால் அறிவுறுத்தப்பட்ட தொகையே அறவிடப்படும்.

(AED 01=Rs 31/=)

வயதெல்லை: 21-35 ஆண்

அனுபவம்: குறிப்பிட்ட பிரிவில் ஒருவருட அனுபவம்

**வேலை சலுகைகள்**

உடன்படிக்கை : 2வருடம்
மருத்துவ வசதி: நிறுவனத்தால் வழங்கப்படும்
போக்குவரத்து வசதி: நிறுவனத்தால் வழங்கப்படும்
வதிவிட வசதி: நிறுவனத்தால் வழங்கப்படும்.
உணவு: நிறுவனத்தால் வழங்கப்படும்.
வேலைநாட்கள்/நேரம்: வாரத்திற்கு 6 நாட்கள்/ நாளாந்தம் 8 மணி நேரம்.
விமான டிக்கட்: இரண்டு வருடங்களின் பின் விடுமுறையில் செல்ல/ திரும்ப வர டிக்கட் இலவசம்.

(5142)



**கீழ்க்காணும் விபரங்களுடன் வரவும்**

- பூரண விபரமடங்கிய விண்ணப்பப் படிவம் 2
- வெள்ளை நிற பின்னணியைக் கொண்ட 2 போட்டோக்கள்
- பாஸ்போட்டுடன் அதன் பிரதிகள் 2
- வேலை அனுபவம் சம்பந்தமான சான்றிதழ்கள்

இதற்கான நேர்முகப் பரீட்சை ஜூன் மாதம் 14ஆம் திகதி கீழ் குறிப்பிடப்பட்டுள்ள விலாசத்தில் அமைந்துள்ள வெளிநாட்டு வேலைவாய்ப்பு முகவர் நிலையத்தில் நடைபெறும்.

வெளிநாட்டு வேலைவாய்ப்பு மையத்தின் அனுமதி இலக்கம் AL79/04/11

இவ்வேலைவாய்ப்பைப் பெற அறவிடப்படும் தொகைய்ய நீங்கள் விரும்பினால் வெளிநாடு போய் உங்கள் சம்பளத்தில் தவணைமுறையில் செலுத்தலாம். ஆக இவ்வரிய தொழில்வாய்ப்பை உங்களுக்கு எவ்விதச் செலவுமில்லாமல் பெறலாம்.

தொடர்பு கொள்ளவேண்டிய இலக்கம்:
0317 500 700
Apply Online: www.topjobs.lk/fortuna

**Fortuna Enterprises (Pvt) Ltd**
No:96, Fortuna Arcade, Lewis Place, Poruthota Road Ettukkala, Negombo. (opp Browns Beach Hotel)
Tel : 0317 500 700/701 Fax : 0317 500 720 Web: www.fortunalanka.com
Labour Licence no. 079
E-mail : careers@fortunalanka.com

வெறும் சொல்லுக்கு மகிமை இல்லை. அச் சொல், உள்ளத் துணிவை உணர்த்துமாயின் அதற்கு மகிமை உண்டு.
-பாரதியார்

வலம்புரி
T.P. 021 567 1530
Web: www.valampurii.com
e-mail: editor@valampurii.com

## தமிழகத்தின் சட்டசபை நிறைவேற்றிய தீர்மானம்

இலங்கை மீது பொருளாதாரத் தடையை இந்திய மத்திய அரசு விதிக்கவேண்டும் என தமிழக சட்ட சபையில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

தமிழக சட்டசபையில் எடுக்கப்பட்ட இத் தீர்மானத்தின் பிரகாரம் இந்திய மத்திய அரசு செயற்பட வேண்டும் என்ற தேவை எதுவும் கிடையாது.

அப்படியானால் தமிழக சட்டசபையில் எடுக்கப்பட்ட தீர்மானம் ஈழத் தமிழ் மக்களுக்கு எத்தகைய நன்மையைத் தரும் என்ற கேள்வி எழுவது தவிர்க்க முடியாததே.

இலங்கை மீது பொருளாதாரத் தடை விதிக்க வேண்டும் என்ற தீர்மானத்தை தமிழக சட்டசபை மேற்கொண்டதன் மூலம் இந்திய மத்திய அரசுக்கு ஒரு மறைமுகமான எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

அதாவது, இலங்கை விடயத்தில் இந்திய மத்திய அரசு சார்புநிலைப் போக்கைக் கடைப்பிடிப்பதை தமிழகம் ஏற்றுக்கொள்ளவில்லை என்பதே அதுவாகும்.

இதன் ஊடாக இலங்கையில் நடந்த போர்க் குற்ற விசாரணை தொடர்பில் ஐ.நா. சபை முன்னெடுக்கும் நடவடிக்கைகளை தடுக்கும் முயற்சியில் இந்திய மத்திய அரசு ஈடுபடுவது என்பது தமிழகத்தின் எட்டுக்கோடி மக்களின் எதிர்ப்பைச் சம்பாதிப்பதாக இருக்கும்.

அதேநேரம் இலங்கை இனப்பிரச்சினைக்கான தீர்வை வலியுறுத்தத் தவறினால், தமிழக சட்டசபை தொடர்ந்தும் இலங்கை அரசிற்கு எதிரான தீர்மானங்களை நிறைவேற்றும் என்பது மத்திய அரசிற்கு நன்கு தெரியும்.

இத்தகைய தீர்மானங்களை தமிழக சட்டசபை தொடர்ச்சியாக நிறைவேற்றுவதும் அதற்கு மத்திய அரசு பாராமுகமாக இருப்பதுமான நிலைமை, தமிழகத்தில் குழப்பத்தை உருவாக்க வாய்ப்பாகிவிடும்.

ஆக, இலங்கையில் விடுதலைப்புலிகளை தோற்கடிக்காவிட்டால் அங்கு தனி நாடு தோற்றம்பெற, அது இந்திய தேசத்தின் உடைவுக்கு காரணமாக அமைந்துவிடும் என்ற அச்சமே வன்னிப் போருக்கான இந்திய உதவி எனலாம்.

நிலைமை இதுவாக இருக்கும்போது, மத்திய அரசின் போக்கினால் தமிழகம் குழம்பிப்போகுமாயின் இலங்கையில் தமிழர்கள் நடத்திய விடுதலைப் போராட்டம் தமிழகத்திற்கு இடம் நகர்ந்த கதையாக முடிந்துவிடும்.

எந்த நோக்கத்திற்காக விடுதலைப்புலிகளை தோற்கடிக்க வேண்டும் என இந்திய மத்திய அரசு எண்ணியதோ, அந்த நோக்கம் தனது தவறான போக்கினால் நடந்தேறிவிட்டது என்ற துரதிர்ஷ்டமான நிலைமை ஏற்பட இந்தியா ஒருபோதும் விரும்பாது.

எனவே தமிழக சட்டசபையின் தீர்மானங்களோடு ஒப்புர ஒழுகவே அது விரும்பிக்கொள்ளும்.

ஆகையால் இலங்கை மீது பொருளாதாரத் தடையை விதிக்கவேண்டும் என்ற தமிழக சட்டசபையின் தீர்மானம் மறைமுகமான தாக்கத்தை இலங்கை மீது ஏற்படுத்தவே செய்யும்.

## நாட்டியமயில் - 2011 இற்கான விண்ணப்பங்கள் கோரல்

இயூ லங்கா போரம் மற்றும் இந்து கலாசார பேரவை இணைந்து நடாத்தும் "நாட்டிய மயில் 2011" இற்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

இதற்கு விண்ணப்பிக்கும் விண்ணப்பதாரிகள் 18 வயது தொடக்கம் 25 வயதிற்குட்பட்டவர்களாக இருத்தல் வேண்டும்.

இதற்கான பதவர்ணம் தமிழில் 20 நிமிடங்கள் தொடக்கம் 25 நிமிடங்கள் வரை அமைதல் வேண்டும்.

அத்துடன் நடனதாரிகள் பக்கவாத்தியம் அல்லது ஒலிநாடாவை உபயோகிக்கலாம். விண்ணப்பதாரிகள் விண்ணப்பிக்கும் போது தமது மாவட்டம், ஆசிரியர் பெயர், நடனத்துறை தகைமைகள் என்பவற்றைக் குறிப்பிடல் வேண்டும்.

இது ஒரு போட்டி நிகழ்ச்சி என்பதால் பிறப்பு அத்தாட்சிப்பத்திரம் கட்டாயம் சமர்ப்பிக்க வேண்டும்.

அத்துடன் நடன ஆசிரியர்களால் மாணவர்கள் உறுதிப்படுத்தப்பட வேண்டும். விண்ணப்பதாரிகளிடம் எந்தவித கட்டணங்களும் அறவிடப்படமாட்டாது.

அனைத்து விண்ணப்பங்களும் ஜூலை மாதம் 30 ஆம் திகதிக்கு முன்னர் இல 29, பழம் வீதி, கந்தர்மடம், யாழ்ப்பாணம் அல்லது இல 27/1 ,குளுதாகொட வீதி, மவுண்லவேனியா என்ற முகவரிக்கு சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

அத்துடன் 0217200157,0113088961 ஆகிய தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளலாம். (ஸ்ரீ-2)

## கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டத்திலுள்ள சகல ப.நோ.கூ. சங்கங்களினதும் முகாமையாளர்களுக்கான அவசர கலந்துரையாடல் இன்று வெள்ளிக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு யாழ். வீரசிங்கம்மண்டபத்தில் யாழ். மாவட்ட கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் வி.கே. அருந்தவநாதன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இக்கலந்துரையாடலில் சகல ப.நோ.கூ. சங்க முகாமையாளர்களையும் கலந்து கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (ஸ்ரீ)

## தூத்துக்குடி-கொழும்பு கப்பல் சேவை திங்களன்று ஆரம்பம்

தூத்துக்குடி-கொழும்புகப்பல்சேவையின் முதலாவது கப்பல் எதிர்வரும் 14 ஆம் திகதி கொழும்பை வந்தடையும் என இலங்கை கப்பல் போக்குவரத்து கூட்டுத்தாபனம் நேற்று முன்தினம் அறிவித்தது.

அடுத்த திங்கட்கிழமை தூத்துக்குடியிலிருந்து புறப்படும் இந்தியக் கப்பல் 10 தொடக்கம் 12 மணித்தியால பயணத்தின் பின் கொழும்பை வந்தடையும். இதில் வி.ஐ.பி.களும் மட்டுப்படுத்தப்பட்ட எண்ணிக்கையான சாதாரணபயணிகளும்பயணம் செய்வர்.

இச் சேவையானது ஒவ்வொரு திங்கள் மற்றும் வெள்ளி ஆகிய தினங்களில் தூத்துக்குடியிலிருந்து கொழும்புக்கும் புதன் மற்றும் ஞாயிற்றுக் கிழமைகளில் கொழும்பிலிருந்து தூத்துக்குடிக்கும் இடம்பெறவுள்ளது.

இதற்காக கடந்த இரு வாரங்களுக்கு முன் கொழும்பில் வைத்து கப்பல் பிரயாண முகவர்கள் நியமிக்கப்பட்டனர்.

இக்கப்பல் பிரயாண முகவர் நிறுவனமான வரையறுக்கப்பட்ட அளுகம்பேரவஸ் நிறுவனத்தின் முகாமைத்துவப் பணிப்பாளர் ஏ.எம்.ஜவ்வர் தெரிவித்தார்.

இச்சேவைமூலமாக இரு நாடுகளுக்குமிடையிலான பொருளாதார வளர்ச்சியும் சுற்றுலாத்துறை அபிவிருத்தியும் முன்னேற வாய்ப்பு ஏற்பட்டுள்ளது.

அத்தோடு கொழும்பிலிருந்து தூத்துக்குடி செல்வதற்கு 6500 ரூபாவும் தூத்துக்குடியிலிருந்து கொழும்பு வருவதற்கு 5363 ரூபாவும் ஆகும்.

பிரயாணிகள் தலா 100 கிலோகிராம் அளவான பொருட்களையும் கொண்டு செல்லலாம் என குறிப்பிடப்பட்டுள்ளது. (ஸ்ரீ-2)

## அறிந்து கொள்ள வேண்டிய ஆன்மீகத் தகவல்கள்

### ஆன்மீகப் பாதையில் ஆறுவித குணங்கள்

ஆன்மீகப் பாதையில் செல்ல சாந்தம், புலனடக்கம், பரிபூரண திருப்தி, அதிக அளவிலான சகிப்பு சக்தி, நம்பிக்கை, சமாதானத்தில் ஆர்வம் போன்ற ஆறுவித குணங்கள் இருக்க வேண்டும்.

சாந்தம் ஆசை விலகி அமைதி பெறுவது. இது மன அடக்கத்தைக் குறிக்கும். புலனடக்கம் புலன்நுகர்ச்சி சாதனங்களைக் கட்டுப்படுத்துவதைக் குறிக்கும்.

பரிபூரண திருப்தி- திருப்தி நிலையைக் குறிக்கும். துறவின் மூலம் விருத்தி பெறும். அதிக அளவிலான சகிப்பு சக்தி மனம், உடல் ஆகிய இரண்டிற்கும் உரியது.

நம்பிக்கை- இது பரம்பொருள், சாஸ்திரங்கள், குரு உபதேசங்கள் ஆகியவற்றில் நம்பிக்கை வைத்தல். சமாதானம் சமமான மனோநிலை, மன ஒருமைப்பாடு, புறச் சிதறல் இல்லாமல் இலட்சியம் ஒன்றியிருத்தல் ஆகும்.

## வெள்ளி நற்சிந்தனை

23

## செவ்வியல் தமிழில் சீர்மியம்

வாழ்க்கையில் நாம் எதிர்பாராமல் பெறும் அனுபவம் எம்மை சிந்திக்க வைக்கும். அதிலும் நாம் செய்த ஒரு சிறிய முயற்சிக்கு பெரியதொரு சன்மானத்தை பெறும்போது பெருவியப்பெய்தி நிற்போம். இந்த அனுபவம் மறக்க முடியாதது. இறைவன் பற்றிய அனுபவம் இதுபோன்றதே என மாணிக்கவாசகர் தனது பாடலில் குறிப்பிட்டுள்ளார். அவர் இறைவன் பெருமைகளை அறிந்தவர். மந்திரியாக வாழ்வு நடத்தியமையினால் இறைவனை பற்றிய கருத்துக்களை படித்தறியும் வாய்ப்பும் பெற்றவர்.

இறைவனே திருமாலும் பிரமனுமாய் இருக்கின்றார் என்பதை மாணிக்கவாசகர் கற்றறிந்திருந்தார். படிப்பறிவினால் இறைவனின் உயர்ந்த நிலையை நன்குணர்ந்து கொண்டவர். ஆனால் அவருடைய பட்டறிவினால் இறைவனின் உயர்ந்த நிலையை தெளிவாக அறிய வைத்தது சாதாரண ஒரு மனிதனாக இறைவனுக்கு ஓர் அன்பன் என்ற நிலையில் மட்டும் வாழ்ந்த மாணிக்கவாகசரை இறைவன் குருவடிவாக வந்து குருந்த மரத்தின் நிழலிலேயே ஆட்கொண்ட ஆன்மீக அறிவு மாணிக்கவாசகருக்கு கிடைத்தது. அந்த அறிவு நிலையிலே தனக்கும் இறைவனுக்குமிடையே உள்ள பாரிய வேறுபாட்டை அவர் தெளிந்து கொண்டார். பேயனாகிய என்னை விட உனக்கு ஆட்கொள்வதற்கு வேறு அடியார் கிடைக்க வில்லையா என பாடலில் மாணிக்கவாசகர் வினா எடுப்பதற்கு இதுவே காரணம். மனிதனாகவே தான் வாழவில்லையை என்ற உண்மையை பாடலில் குறிப்பிடுகின்றார். கடையன் என தன்னை சுட்டியுள்ளார்

இறையடியார்கள் பலர் இருக்கவும் இறைவன் தன்னை வலியவந்து ஆட்கொண்ட அற்புதத்தை எல்லோரும் அறிய வேண்டும் என மாணிக்கவாசகர் எண்ணியே பாடுகின்றார். தன்னை தாழ்த்தி நிற்கும் வழிபாட்டு உணர்வு மாணிக்கவாசகர் செயற்பாட்டில் காட்சி வருவதை பாடலில் பயன்படுத்தியுள்ள **'நானுக்கோர் அன்பன் என் பேன்'** என்ற தொடர் நன்கு விளக்கி நிற்கின்றது. அன்பனாக நான் வாழ முற்பட்ட தால் இழிந்த என்னையும் உயர் நிலை அடைய செய்த இறைவன் பெருமையை நான் என்ன சொல்லி நான் புகழ்ந்து பாடுவேன் எனக் கேட்டார். மனம் மொழிகளுக்கு எட்டாத இறைவனது புகழை சுட்டப்படும் தன்மையது அல்ல. இறைவன் பெருமையை பற்றி பேசுவதற்கு முடியாத நிலையை மாணிக்கவாசகர் உணர்த்தியுள்ளார்

உலக மக்களை எல்லாம் படைத்து காத்து அருள் புரிகின்ற இறைவனின் உயர்ந்த நிலையை நாமும் நன்கறிய வேண்டும் என்பதே மாணிக்கவாசகரது எண்ணமாகும். பழைய தொன்மக்கதைகளில் கூறப்பட்டிருக்கும் இறையருளைப் பற்றி இன்று பலர் நம்ப மறுக்கின்றனர். அவர்களுக்கு மனித குணங்களோடு வாழ்ந்து இறையருள் பற்றிய பட்டறிவை முன்னிலைப் படுத்தி பாடும் மாணிக்கவாசகர்பாடல்களால் ஒரு புதிய தெளிவு ஏற்படும். மாறாத மனங்களையும் மாற்ற அவர் சுய அனுபவம் உதவும். மனங்களை பண்படுத்தி இறை நம்பிக்கை என்ற கருத்தை ஆழமாகப் பதிவாக்க மாணிக்க வாசகர் பாடல்கள் நிச்சயம உதவும்.

**கலாநிதி மனோன்மணி சண்முகதாஸ்**

ஆயனான் மறையவனு நீயே யாதல்
அறிந்தியா னியாவரினுங் கடையனாய
நாயினே னாதலையு நோக்கி கண்டு
நாதனே நானுக்கோரன்ப னென்பேன்
ஆயினே னாதலா லாண்டு கொண்டாய்
அடியார்தா மில்லையே யன்றி மற்றோர்
பேயனே னிதுதானின் பெருமை யன்றே
யெம்பெருமானென் சொல்லிப் பேசுகேனே

# ஜோர்தானில் இலங்கை பெண்கள் பாலியல் ரீதியாக சித்திரவதை

## அமெரிக்க அமைப்பு தெரிவிப்பு

ஜோர்தான் ஆடைக் கைத் தொழிற்சாலைகளில் பணியாற்றி வரும் இலங்கைப் பெண்கள் கடுமையான பாலியல் சித்திரவதைகளுக்கு உட்படுத்தப்படுவதாக தெரிவிக்கப்படுகிறது.

அமெரிக்காவின் குளோபல் லேபர் ரைட்ஸ் என்னும் அமைப்பு வெளியிட்டுள்ள அறிக்கையில் இந்த விடயங்கள் சுட்டிக்காட்டப்பட்டுள்ளன.

இலங்கைப் பணிப்பெண்கள் தொடர்ச்சியாக பாலியல் ரீதியாக துன்புறுத்தப்படுவதாக குறிப்பிடப்பட்டுள்ளது. அமெரிக்காவிற்கு ஆடைகளை ஏற்றுமதி செய்யும் கிளஸிக் எனும் ஜோர்தானின் முன்னணி ஆடைக் கைத்தொழில் சாலையில் பணியாற்றும் பெண்கள் கடுமையான பாலியல் சித்திரவதைகளை அனுபவிப்பதாகக் குறிப்பிடப்படுகிறது.

உயர் அதிகாரிகளின் பாலியல் இச்சைகளை நிறைவேற்ற மறுக்கும் பெண்கள் நாட்டுக்கு திருப்பி அனுப்பி வைக்கப்படுவதுடன் சிலர் சித்திரவதைகளுக்கு உட்படுவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

நிறுவனத்தின் பொது முகாமையாளர் அனில் சாந்தா என்ற நபர் பல பெண்களை பாலியல் ரீதியாக துன்புறுத்தியுள்ளார் என குறித்த அமைப்பு பகிரங்க அறிக்கை வெளியிட்டுள்ளது.

பாலியல் ரீதியாக துன்புறுத்தல்களை அனுபவித்து வரும் இலங்கைப் பணிப்பெண்களை மீட்டெடுக்க வேண்டியது அனைவரினதும் கடமையாகும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை இந்த அறிக்கை குறித்து இலங்கை வெளி நாட்டு வேலைவாய்ப்புப் பணியகம் எவ்வித கருத்துக்களையும் வெளியிடவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (ஸ்ரீ-2)

# கட்டுநாயக்க சம்பவம் தொடர்பான இறுதிக் கட்ட விசாரணை அறிக்கை இவ்வாரத்தில் வெளியிடப்படும்

## மனித உரிமைகள் ஆணைக்குழு தெரிவிப்பு

கட்டுநாயக்க சுதந்திர வர்த்தக வலயத்தில் இடம்பெற்ற மோதல் தொடர்பிலான இறுதிக்கட்ட விசாரணை அறிக்கை இந்த வாரத்துக்குள் வெளியிடப்படும் என்று மனித உரிமைகள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

இந்த அறிக்கையின் பிரகாரம் மனித உரிமைகள் மீறப்படும் வகையில் செயற்பட்டுள்ள சகல உத்தியோகத்தர்களுக்கும் எதிராகக் கடுமையான சட்டத்தை அமுல்படுத்துவதாக ஆணைக்குழுவின் செயலாளர் சட்டத்தரணி நிமல் புஞ்சிஹேவா தெரிவித்தார்.

கட்டுநாயக்க சம்பவம் தொடர்பாக விசாரணைகள் ஏற்கனவே ஆரம்பிக்கப்பட்டுள்ளதுடன் அது தொடர்பான அறிக்கையை இந்த வாரத்துக்குள் சமர்ப்பிக்குமாறு ஆணைக்குழுவின் தலைவரான முன்னாள் நீதியரசர் பிரியந்த பெரேரா பணிப்புரை விடுத்துள்ளதாக அவர் குறிப்பிட்டார்.

அத்துடன் சில பொதுவான சிபாரிசுகளையும் அரசாங்கத்திடம் கையளிப்பதற்கு ஆணைக்குழு தீர்மானித்துள்ளதாக சட்டத்தரணி நிமல் புஞ்சிஹேவா மேலும் கூறினார். (ஸ்ரீ-2)

# கலைப்பீடப் பரீட்சைகள் பிற்போடப்பட்டுள்ளன

யாழ். பல்கலைக்கழக கலைப்பீடத்தின் முதலாம் அரையாண்டுக்கான அனைத்துப் பரீட்சைகளும் தவிர்க்க முடியாத காரணத்தினால் பிற்போடப்பட்டுள்ளன.

பரீட்சை நடைபெறும் புதிய திகதி பற்றிய விபரங்கள் பின்னர் அறியத் தரப்படும் என கலைப்பீடாதிபதி பேராசிரியர் நா.ஞானகுமரன் அறிவித்துள்ளார். (ஸ்ரீ-2)

# கத்தி வெட்டுக்கு இலக்கான குடும்பஸ்தர் சிகிச்சைக்காக அனுமதி

இரு தரப்புகளுக்கும் இடையில் ஏற்பட்ட தகராறு கத்தி வெட்டில் முடிவுற்றதில் குடும்பஸ்தர் ஒருவர் படுகாயமடைந்து பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

கரவெட்டி வடக்கு சரஸ்வதி வித்தியாலய வீதியில் கடந்த செவ்வாய்க்கிழமை இரவு 8.30 மணிக்கு இச்சம்பவம் இடம் பெற்றுள்ளது.

இச் சம்பவத்தில் அப்பகுதியைச் சேர்ந்த செந்தில்நாதன் செந்தூரன் (வயது 20) என்ற இளம் குடும்பஸ்தரே கத்தி வெட்டுக்கு இலக்காகி சிகிச்சை பெற்று வருகிறார். இச்சம்பவம் தொடர்பாக நெல்லியடி பொலிஸாரிடம் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. (ஸ்ரீ-24)

# அரசாங்க அறிவித்தல்

# மாவட்ட செயலகம், யாழ்ப்பாணம்

**2011 ஆம் ஆண்டுக்கான அலுவலகத் தளபாடங்கள் மற்றும் அலுவலக உபகரணங்கள் வழங்கலுக்கான கூறுவிலைகள் கோருதல்**

மாவட்ட செயலக, பிரதேச செயலகங்களின் பாவனைக்காக கீழே குறிப்பிடப்பட்டிருக்கும் பொருட்களுக்கான கூறுவிலைகள் பொருத்தமான வழங்குநர்களிடமிருந்து கோரப்படுகின்றன. பெறுகைதாரர்கள் மீளளிக்கப்படாத வைப்புப் பணமாக ரூபா 100.00 உம் மீளளிக்கக்கூடிய வைப்புப் பணமாக ரூபா. 5000.00 உம் செலுத்துதல் வேண்டும். இச் செயலகத்தால் வழங்கப்படும் மாதிரிப்படிவத்தில் கேட்டுக்கொண்ட விபரங்களுக்கேற்ப தயாரிக்கப்பட்ட விண்ணப்பப் படிவங்களை கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் **“2011 ஆம் ஆண்டுக்கான தளபாடங்கள், அலுவலக உபகரணங்கள் வழங்கலுக்கான கூறுவிலைகள்”** எனக் குறிப்பிட்டு 23.06.2011 ஆம் திகதி பி.ப. 2.30 மணிக்கு முன்னர் எமக்கு கிடைக்கக்கூடியவாறு நேரடியாக செயலக பிரதம கணக்காளர் அலுவலகத்திலுள்ள பெறுகைப் பெட்டியில் இடல் வேண்டும். அல்லது **“தலைவர், மாவட்ட செயலக பெறுகைக் குழு, மாவட்ட செயலகம், யாழ்ப்பாணம்”** எனும் முகவரியிட்டு பதிவுத்தபாலில் அனுப்புதல் வேண்டும். பெறுகைகள் அன்றைய தினம் பி.ப 3.00 மணிக்கு திறக்கப்பட்டு ஆராயப்படும். அதன்போது விண்ணப்பதாரரோ அல்லது அவரின் பிரதிநிதியொருவரோ சமுகமளிக்கலாம்.

கீழ்க்குறிப்பிடப்படும் தளபாடம்/ அலுவலக உபகரணங்களுக்கான பெறுகை விண்ணப்பப்படிவங்களையும் மாதிரிப்படங்களையும் செயலக களஞ்சிய நலன்புரிக்கிளையில் 09.06.2011 ஆந் திகதி தொடக்கம் அலுவலக நேரங்களில் பெற்றுக் கொள்ளலாம். மாதிரிக் கொவ்வாத பொருட்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

**1.மரத் தளபாடங்கள்**
எழுதுநர் மேசை
பதவி நிலை உத்தியோகத்தர் மேசை
கைபிடிக்கதிரை
கணனி மேசை

**2.உருக்குத் தளபாடங்கள்**
உருக்கு அலுமாரி
கோவை அலுமாரி
கோவை தட்டு

**3.பிளாஸ்ரிக் சார்ந்த பொருட்கள்**
கணனிக் கதிரை - கைபிடியுடனானது
கணனிக் கதிரை - கைபிடியற்றது
பிளாஸ்ரிக் கைபிடிக் கதிரை
பதவிநிலை உத்தியோகத்தர் கதிரை

**4. அலுவலக உபகரணங்கள்**
மேசைக் கணனி *(Desk Top Computer)*
மடிக்கணனி *(Laptop Computer)*
இரட்டிப்பு இயந்திரம் *(Ronio Machine)*
நிழல்படப்பிரதி இயந்திரம் *(Photocopier)*
திரையிடு கருவி *(Multimedia Projector)*
இடையறா மின்வழங்கி *(UPS)*
புகைப்படக்கருவி *(Digital Still Camera)*
அச்சுப் பதிப்பி *(Printer-Laser/ Dot matrix)*
கணனித்திரை *(Computer Monitor)*
தொலைநகல் இயந்திரம் *(Fax Machine)*
கணனி ஸ்கானர் *(Computer Scanner)*
கணனி வலைப்பின்னல் *(Computer Network)*
மின் சீராக்கி *(Stabilizer)*
கணனிச் சுட்டி *(Computer Mouse)*
கணனி விசைப்பலகை *(Computer Keyboard)*
வெளிச்சேமிப்பு வன்தட்டு *(External Hard Disk)*
நீர் வடிகட்டி *(WaterFilter)*
மின்சார நீர்ப்பம்பி *(Electric Motor)*
நீர் வடிகட்டி *(Water filter)*

**திருமதி இமெல்டா சுகுமார்**
**தலைவர்,**
**திணைக்களப் பெறுகைக்குழு,**
**யாழ்.மாவட்ட செயலகம்.**

(சி-3433)


## நீங்கள் சாதிக்க வேண்டும் என்ற ஆர்வம் உள்ளவரா?

**உடனடியாக விண்ணப்பியுங்கள்**

சர்வதேச காப்புறுதி சேவை சார் கம்பனி ஒன்றில் அங்கத்தவராக இணைந்து கொள்ளுங்கள்.
வன்னி, யாழ்ப்பாணம் உட்பட சகல இடங்களில் உள்ள ஆண், பெண் இருபாலாரும் விண்ணப்பிக்க முடியும்.
அடிப்படை தகைமைகள்:
- வயது எல்லை 20- 65 வரை.
- O/L கணிதம் உட்பட 6 பாடங்கள் சித்தி.
- காப்புறுதி துறையில் முன் அனுபவம் உள்ளவர்களுக்கு விசேட அனுகூலங்கள்.

சுயமாக சிந்தியுங்கள்! சிந்தனைக்கு சிறகமைக்க விரையுங்கள்!!
விண்ணப்ப முடிபுத்திகதி: 15.06.2011 (புதன்கிழமை)

அனுப்பவேண்டிய முகவரி:
விளம்பர இல. 5140, மே/பா வலம்புரி
இல.3, 2 ஆம் ஒழுங்கை, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.

(5140)

## 1 ஆம் ஆண்டு நினைவஞ்சலி அழைப்பு

பிறப்பு 1948.12.30 — இறப்பு 2010.05.22

*அன்புடையீர்!*
*கடந்த 22.05.2010 அன்று சிவபதமடைந்த எங்கள் அன்புத் தெய்வம்*

**அமரர் பாலசிங்கம் இரத்தினசிகாமணி**



*அவர்களின் ஓராண்டு நினைவு அஞ்சலி இன்று 10.06.2011 வெள்ளிக்கிழமை பகல் 11.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெறும். அத்தருணம் தாங்களும் வருகைதந்து அன்னாரின் இல்லத்தில் நடைபெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.*

இங்ஙனம்
குடும்பத்தினர்.
கனகரத்தினம் வீதி,
வட்டுக்கோட்டை.

(5139)

## துளித்துளியாய்...

### றொனால்டோ விடைபெற்றார்

பிரேசில் கால்பந்து அணியின் நட்சத்திர வீரரான றொனால்டோ கடந்த பெப்ரவரி மாதம் ஓய்வு பெற்றார். 34 வயதான றொனால்டோ 04 முறை உலகக்கிண்ண ஆட்டங்களில் ஆடியுள்ளார். இதில் 02 முறை அந்த அணி சம்பியனாகியுள்ளது.


ஏறக்குறைய ஒரு தொடர்களில் றொனால்டோ 15 கோல்கள் விளாசித் தள்ளியுள்ளார். இந்நிலையில் நேற்று முன்தினம் ருமேனியாவுக்கு எதிரான நட்புரீதியான ஆட்டத்தில் றொனால்டோ ஆடினார். இந்த ஆட்டம் றொனால்டோவுக்கு வழியனுப்பும் விதமாக நடத்தப்பட்டது. பரபரப்பான ஆட்டத்தில் பிரேசில் 1:0 என வெற்றிபெற்றது.

### தடையை மீறினார் முகமெட் அமீர்

சூதாட்டத்தில் ஈடுபட்டதால் பாகிஸ்தான் வேகப்பந்து வீச்சாளர் முகமெட் அமீருக்கு 5ஆண்டுகள் கிரிக்கெட் போட்டிகளில் விளையாடத் தடைவிதிக்கப்பட்டுள்ளது. இந்நிலையில் கடந்த சில தினங்களுக்கு முன் இங்கிலாந்திலுள்ள சுரே அணிக்காக கிராமப் போட்டி ஒன்றில் அமீர் கலந்துகொண்டார். அவர் 60 ஓட்டங்களை விளாசியதுடன் 04 விக்கெட்டுக்களையும் வீழ்த்தினார்.

தடை விதிக்கப்பட்ட நிலையில் அமீர் போட்டியில் பங்கேற்றது தற்போது பூதாகரமாக வெடித்துள்ளது. இது தொடர்பாக ஐ.சி.சி. விசாரணை நடத்தவுள்ளது.

# மிஸ்ரா, ஹோலி அபாரம்
# இந்தியாவுக்கு அடுத்த வெற்றி



(போர்ட் ஒப் ஸ்பெயின்)

மேற்கிந்தியத் தீவுகள் அணிக்கு எதிரான இரண்டாவது ஒருநாள் போட்டியில், விராத் ஹோலியின் அபார ஆட்டம் கைகொடுக்க, இந்திய அணி டக்வேத்-லூயிஸ் விதிப்படி 07 விக்கெட் வித்தியாசத்தில் அபார வெற்றி பெற்றது.

மேற்கிந்தியத் தீவுகள் சென்றுள்ள சுரேஷ் ரெய்னா தலைமையிலான இளம் இந்திய அணி 05 போட்டிகள் கொண்ட ஒருநாள் தொடரில் பங்கேற்கிறது.

இதில் முதல் போட்டியில் இந்தியா வென்றது. இந்நிலையில் இரண்டாவது ஒருநாள் போட்டி நேற்று முன்தினம் நடந்தது.

இந்திய அணியில் மாற்றம் எதுவும் செய்யப்படவில்லை. மேற்கிந்தியத் தீவுகள் அணியில் டரன் பிராவோ நீக்கப்பட்டு, போலார்ட் வாய்ப்புப் பெற்றார்.

நாணயச் சுழற்சியில் வென்ற இந்திய அணித்தலைவர் ரெய்னா முதலில் களத்தடுப்பைத் தேர்வு செய்தார்.

### சிம்மன்ஸ் அரைச்சதம்

மேற்கிந்தியத் தீவுகள் அணிக்கு சிம்மன்ஸ், கிர்க் எட்வேட்ஸ் சேர்ந்து நல்ல அடித்தளம் அமைத்தனர். முனாப் ஓவரில் அடுத்தடுத்து இரண்டு பவுண்டரி அடித்தார் எட்வேர்ட்ஸ். பின் ஹர்பஜன் சுழலில் ஒரு இமாலய சிக்ஸர் விளாசினார். முதல் விக்கெட்டுக்கு 57 ஓட்டம் சேர்த்த நிலையில் அமித் மிஸ்ரா பந்தில் 25 ஓட்டங்களுடன் வெளியேறினார்.

அடுத்துவந்த சர்வான் ஒத்துழைப்பு அளிக்க தனது அபார ஆட்டத்தைத் தொடர்ந்தார் சிம்மன்ஸ். மிஸ்ரா, யூசுப்பதான் பந்துகளில் தலா ஒரு சிக்ஸர் அடித்த சிம்மன்ஸ் ஒரு நாள் அரங்கில் தனது 07-வது அரைச்சதம் எட்டினார்.

இவர் 53 ஓட்டங்களுக்கு யூசுப்பதான் வலையில் சிக்கினார். இதன் பின்னர் சர்வானும், சாமுவேலுஜோடி சேர்ந்து ஓட்டங்கள் சேர்ப்பில் ஈடுபட்டனர்.

சர்வான் 56 ஓட்டங்களிலும், சாமுவேல் 36 ஓட்டங்களிலும் ஆட்டமிழந்தனர்.

போலார்ட் ஓட்டம் எதுவும் பெறாமல ஆட்டமிழந்தார். சமி 22 ஓட்டங்களிலும், ரவி ராம்போல் 14 ஓட்டங்களிலும், எஞ்சிய வீரர்கள் சொற்ப ஓட்டங்களிலும் ஆட்டமிழக்க மேற்கிந்தியத் தீவுகள் அணி 50 ஓவர்களில் 09 விக்கெட் இழப்பிற்கு 240 ஓட்டங்களை குவித்தது.

இதில் இந்திய அணித்தரப்பில் அமித் மிஸ்ரா 04 விக்கெட்டையும், முனாப் பட்டேல் 03 விக்கெட்டுக்களையும், யூசுப்பதான் 02 விக்கெட்டுக்களையும் வீழ்த்தினர்.

சவாலான இலக்கை விரட்டிய இந்திய அணிக்கு டவான் 03 ஓட்டங்களை எடுத்து ஏமாற்றமளித்தார்.

பின் பார்த்திப்பட்டேல், விராத் ஹோலி இணைந்து பொறுப்பான ஆடினர். சமி பந்தை சிக்ஸருக்கு பறக்கவிட்டு அசத்தினார் பார்த்திப் பட்டேல். 13-வது ஓவரில் மழை காரணமாக ஆட்டம் தடைப்பட்டது. இதன் போது இந்திய அணி 15 ஓவரில் ஒரு விக்கெட்டுக்கு 71 ஓட்டங்கள் எடுத்திருந்தது.

ஹோலி 34, பார்த்திப் பட்டேல் 30 ஓட்டங்களையும் ஆட்டமிழக்காமல் இருந்தனர்.

ஆட்டம் மீண்டும் தொடர்ந்தது, 22 ஓவரில் ஒரு விக்கெட்டுக்களுக்கு 100 ஓட்டங்கள் எடுத்தபோது மறுபடியும் மழை குறுக்கிட்டது. பின்னர் 37 ஓவரில் 183 ஓட்டங்கள் என இலக்கு மாற்றப்பட்டது. அபாரமாக விளையாடிய பார்த்திப்பட்டேல் 56, விராட் ஹோலி 81 ஓட்டங்களையும் எடுத்தனர்.

பின் வந்த ரெய்னா 26, ரோகித் சர்மா 07 இணைந்து அணியை வெற்றிக்கு அழைத்துச் சென்றனர்.

இந்திய அணி 33.4 ஓவரில் 03 விக்கெட்டுக்கு 183 ஓட்டங்களை எடுக்க, டக்வேர்த்-லூயிஸ் முறைப்படி 07 விக்கெட்டுக்கள் வித்தியாசத்தில் இந்திய அணி வெற்றிபெற்றதாக அறிவிக்கப்பட்டது.

இதன் மூலம் 05 போட்டிகள் கொண்ட ஒருநாள் தொடரில் இந்திய அணி 2:0 என்ற கணக்கில் முன்னிலை பெற்றுள்ளது.

# இலங்கை ஒருநாள் போட்டி அணியில்
# சனத் ஜெயசூர்யவுக்கு மீண்டும் வாய்ப்பு

(கொழும்பு)

இங்கிலாந்துடனான சர்வதேச ஒருநாள் போட்டித்தொடர் மற்றும் இருபது -20 போட்டிக்கான இலங்கை கிரிக்கெட் அணியில் முன்னாள் அணித்தலைவர் சனத் ஜெயசூர்ய சேர்க்கப்பட்டுள்ளார்.

அதிரடித் துடுப்பாட்ட வீரரான சனத் ஜெயசூர்ய எதிர்வரும் 30ஆம் திகதி தனது 42 ஆவது பிறந்ததின்த்தைக் கொண்டாடவுள்ள நிலையில் மீண்டும் இலங்கை அணிக்காக விளையாடவுள்ளார். உலகக் கிண்ணத் தொடருக்கு தான் சேர்க்கப்படாதமை குறித்து ஏமாற்றம் தெரிவித்திருந்த ஜெயசூர்ய மீண்டும் போட்டிகளில் பங்குபற்ற விருப்பம் தெரிவித்திருந்தார்.

சனத் ஜெயசூர்யா இறுதியாக 2009ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் இந்தியாவுடனான சர்வதேச ஒருநாள் போட்டியில் விளையாடியமை குறிப்பிடத்தக்கது.

தான் 18 வயதில் இருந்ததைப் போன்றே உடற்திடநிலையுடன் இன்னும் இருப்பதாகவும் தீவிரமாக பயிற்சி செய்து வருவதாகவும் கடந்த திங்கட்கிழமை டெய்லி மிரருக்கு வழங்கிய பிரத்தியேக செவ்வியில் சனத் ஜெயசூர்ய குறிப்பிட்டிருந்தார்.

இந் நிலையில் இங்கிலாந்து அணியுடனான ஒருநாள் மற்றும் இருபது- 20 போட்டிகளுக்கு அவரை இலங்கைக் கிரிக்கெட் தேர்வுக்குழுவினர் தேர்வுசெய்துள்ளனர்.

### ஒருநாள் போட்டிக்கு ஓய்வு

இங்கிலாந்து அணியுடனான முதலாவது ஒருநாள் போட்டியின் பின்னர் தான் சர்வதேச கிரிக்கெட்டிலிருந்து ஓய்வு பெறவுள்ளதாக இலங்கை அணியின் முன்னாள் தலைவர் சனத் ஜெயசூர்ய தெரிவித்துள்ளார்.

444 ஒருநாள் சர்வதேச போட்டிகளிலும் 30 இருபது - 20 போட்டிகளிலும் அவர் விளையாடியுள்ளார். இலங்கை -இங்கிலாந்து அணிகளுக்கிடையிலான முதலாவது ஒருநாள் போட்டி எதிர்வரும் 28ஆம் திகதி நடைபெறவுள்ளது.

இலங்கை -இங்கிலாந்து அணிகளுக்கிடையிலான இருபது - 20 போட்டி ஜூன் மாதம் 25 ஆம் திகதி நடைபெறவுள்ளது. 05 போட்டிகள் கொண்ட ஒருநாள் தொடர் ஜூன் 28 ஆம் திகதி முதல் நடைபெறவுள்ளது.

ஒருநாள் போட்டிக்கான 16 பேர் கொண்ட இலங்கை அணிக்கு திலின கண்டாம்பி உப தலைவராக நியமிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. 23 வயதாக் திமுத் கருணாரட்கவும் இவ் அணியில் சேர்க்கப்பட்டுள்ளார். ஜீவன்



மெண்டிஸ், லஷித் மலிங்க ஆகியோரும் அணியில் இடம்பெற்றுள்ளனர். ஆனால் திலான் சமரவீர சேர்க்கப்படவில்லை. தற்போது இங்கிலாந்துடனான டெஸ்ட் போட்டியில் விளையாடும் பர்வேஸ் மகரூப், சுரங்க லக்மால், அஜந்த மென்டிஸ், சானக வெலகெதர, தரங்க பரணவிதான ஆகியோர் டெஸ்ட் போட்டியின் பின்னர் இலங்கை திரும்பவுள்ளனர்.



கரித்தாஸ்– கியூடெக் நிறுவனத்தின் ஏற்பாட்டில் ஊர்காவற்துறையில் இடம்பெற்ற சட்ட ஆவணங்களைப் பெற்றுக் கொள்வதற்கான நடமாடும் சேவையில், ஆவணப் பதிவுகள் இடம்பெறுவதையும், ஆவணங்களைப் பெற்றுக்கொண்டோரில் ஒருபகுதியினரையும் படங்களில் காணலாம்.

மாபெரும் மலிவு விற்பனை
அவுஸ்ரேலியாவிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட
Optima கணினிகள் மலிவு விலையில் உத்தரவாதத்துடன்
INTEL PENTIUM 4- 2.6 GHZ, 512 RAM, 40GB HDD,
DVD ROM, KEYBOARD, MOUSE
RS. 8250/= ONLY
PC MATE SYSTEMS
Computer Sales & Repair
174/16 Temple Road, Nallur
Phone : 077 832 0896, 077 135 0476, 077 968 9043

## 'கச்சதீவை...

இந் நிலையில் கச்சதீவு குறித்த அனைத்து ஆதாரங்களையும் தன் வசம்வைத்திருக்கும் மாநில வருவாய்த்துறை சார்பில் தங்களையும் சேர்த்துக்கொள்ள வலியுறுத்தி உயர் நீதிமன்றில் மனுத்தாக்கல் செய்யவேண்டும் என தமிழக சட்டசபை தீர்மானம் நிறைவேற்றியது.

தீர்மானத்தின் மீது அனைத்துக்கட்சி சார்பிலும் விவாதங்கள் நடைபெற்றது. அதற்கு தமிழக முதல்வர் பதில் அளித்த பின்னர் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. (ச-5)

NIRU TUITION CENTRE
KONDAVIL
A/L அரசியல் விஞ்ஞானம்
2013 - அரசியல் அறிமுகம்
2012 - இலங்கை அரசியல்
2010/2011 - மீட்டல் (வினாவிடை)
ஆசிரியர் :K.S. இளங்கோ
T.P.:0718474678, 0775086846
(3898)

# தமிழ்நாடு பற்றிக் கவலையில்...

அவர்மேலும் கூறியதாவது,

இலங்கை ஒரு இறையாண்மை கொண்ட நாடு. அத்தகைய நாடொன்றின் செயற்பாடுகள் பிறிதொரு அங்கீகரிக்கப்பட்ட நாடொன்றின் அரசுடன் சார்ந்தே இருக்குமே தவிர, எந்தவொரு தனிப்பட்ட மாநிலங்களோடும் சார்ந்திருக்காது.

ஒரு நாட்டின் பிரச்சினையில் ஏனைய நாடுகளின் மத்திய அரசே தீர்மானம் மேற்கொள்ள முடியுமே தவிர மாநிலங்கள் தீர்மானங்களை நிறைவேற்றி பயனில்லை.

எனவே தமிழ் நாட்டின் தீர்மானம் குறித்து நாம் அலட்டிக் கொள்ளப் போவதில்லை. ஒரு சில மாநில அரசுகள் அரசியல் நோக்குடன் இது போன்ற தீர்மானங்களை முன்னெடுக்கின்றன.

இதுபற்றி இந்திய மத்திய அரசுதான் கவனம் செலுத்த வேண்டுமே தவிர அதற்கு நாம் பதிலளிக்க வேண்டியதில்லை.

இன்று கொழும்பு வரவுள்ள இந்தியாவின் உயர்மட்டக்குழுவுடன் ஜெயலலிதா வெளியிடுகின்ற எதிர்மறையான கருத்துக்கள் மற்றும் தமிழ்நாடு சட்டப்பேரவையில் நிறைவேற்றப்பட்டுள்ள இலங்கைக்கு எதிரான தீர்மானம் என்பன குறித்து கலந்துரையாடப்படவுள்ளது. அத்துடன் 13ஆவது அரசியலமைப்பு திருத்தம் குறித்தும் அவர்களுடன் பேசப்படும்.

அவசரகால சட்டம் கட்டங்கட்டமாக நீக்கப்படும். தமிழீழ விடுதலைப் புலிகளின் எச்சங்கள் இன்னும் காணப்படுகின்றன. நாம் 30 வருடங்களுக்கு மேல் பயங்கரவாதத்தால் வருந் தினோம். இதனால் அவசரகாலச் சட்டத்தை அவசரப்பட்டு நீக்க முடியாது.

இச் சட்டத்தின் தேவை அற்றுப்போகும் போது ஒருநாள் கூட நாம் வைத்திருக்க மாட்டோம்.

அமைச்சரவைத் தீர்மானங்களை அறிவிக்கும் வாராந்த செய்தியாளர் மாநாட்டிலேயே அமைச்சர் இதனை கூறினார்.

அங்கு தொடர்ந்தும் உரையாற்றிய அவர் மேலும் தெரிவிக்கையில், 7 மில்லியன் தொழிலாளர்கள்.

பாதிக்கும் விடயங்களில் தனியார் துறைக்குள் ஓவ்வூதியதிட்டம் பற்றி அகன்ற வீச்சிலான கலந்துரையாடல் தேவையாகின்றது தீவிரவாதிகளின் எண்ணப்படி நாம் செயற் பட முடியாது.

அவர்கள் தனியார் துறையின ருக்கான ஓவ்வூதியத் திட்டத்திற்கு அரசாங்கம் முழு நிதியையும் வழங்க வேண்டுமென கூறுகின்றனர். அப்படியான ஓர் ஓய்வூதியத்திட்டத்தை உலகத்தில் எங்கும் காணமுடியாது.

அரசாங்க கட்டுப்பாட்டில் உள்ள ஒரு ஓய்வூதியத் திட்டத்திற்கு ஊழியர்களும் வேலைக் கொள்வோரும் பங்களிக்க வேண்டும்.

அர சாங்கம் இந்த ஓய்வூதியத் திட்டத்திற்கு 310 மில்லியன் ரூபாவை வழங்கவுள்ளது என அமைச்சர் ரம்புக்வெல கூறினார்.

இதேவேளை இலங்கை தொடர்பாக தமிழக முதலமைச்சர் ஜெயலலிதா தெரிவித்த எதிர்மறையான கருத்துக்கள் மற்றும் இலங்கைக்கு எதிராக தமிழக சட்டசபை நிறைவேற்றிய தீர்மானம் ஆகியன இலங்கை அரசாங்கத்துக்கும் இந்திய உயர்மட்ட தூதுகுழுவினருக்கும் இடையிலான பேச்சுவார்த்தையில் முக்கிய இடம்பெறும் என அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல தெரிவித்துள்ளார்.

இந்திய வெளிவிவகார செயலாளர் நிருபமா ராவ், பாதுகாப்புச் செயலர் பிரதீப் குமார், தேசிய பாதுகாப்பு ஆலோசகர் சிவ்சங்கர் மேனன் ஆகியோர் நாளை இலங்கைக்கு வரவுள்ளனர்.

இவர்கள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ, வெளிவிவகார அமைச்சர் ஜீ.எல். பீரிஸ், பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ ஆகியோருடன் பேச்சுவார்த்தை களை நடத்தவுள்ளனர். (ச-5)

# தமிழக சட்டசபை தீர்...

குழு சமர்ப்பித்த அறிக்கையில் போர்க்குற்றங்கள் மற்றும் மனித உரிமை மீறல்கள் குறித்த பொறுப்புக்கூறும் கடப்பாடுகள் தொடர்பாக பல விடயங்களை இலங்கை அரசாங்கம் மேற்கொள்ளவேண்டும் என பரிந்துரைக்கப்பட்டிருந்தது.

இந்தியாவுக்கும் இலங்கைக்கும் இடையில் நடைபெற்ற பல பேச்சுவார்த்தைகளின் போதும் பல்வேறு விடயங்களை இலங்கை அரசாங்கம் நிறைவேற்றவேண்டும் என இந்திய அரசாங்கம் வலியுறுத்தியிருந்தது.

அரசாங்கத்துடன் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நடத்திய பேச்சுவார்த்தைகளின் போதும் நாம் இவற்றை வலியுறுத்தியிருந்தோம். ஆனால் அரசு கர்த்திரமான எத்தகைய நடவடிக்கைகளையும் மேற்கொள்ளவில்லை.

இந்தப் பின்னணியில் தான் இலங்கைக்கு பொருளாதார தடைவிதிக்க மத்திய அரசு நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என தமிழக சட்டசபையில் முதலமைச்சர் ஜெயலலிதா முன்வைத்த பிரேரணை நிறைவேற்றப்பட்டுள்ளது.

ஆகவே இனியாவது இலங்கை அரசாங்கம் தனது தவறுகளை திருத்திக் கொள்ள வேண்டும். மனித உரிமை மீறல் குற்றச்சாட்டுக்கள் மற்றும் காணாமல்போனவர்கள் தொடர்பாக விசாரணை மேற்கொள்ள வேண்டும்.

எவரும் இல்லாது போயிருந்தால் எப்படியான சந்தர்ப்பத்தில் அது நடந்தது என அறிவிக்க வேண்டும்.

இதைச் செய்ய தவறுவதால்தான் வெளிநாடுகளிலிருந்து இலங்கை மீது அழுத்தங்கள் பிரயோகிக்கப்படுகின்றன. ஆகவே இலங்கை அரசாங்கம்தான் இவற்றுக்குப் பொறுப்பேற்க வேண்டும்.

எதிர்காலத்திலாவது இத்தகைய அழுத்தங்கள் அதிகரிக்காமல் இருப்பதற்கு ஏற்ற வகையில் உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ளவேண்டியது அரசாங்கத்தின் கடமை என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு சுட்டிக்காட்ட விரும்புகிறது என சுரேஷ் பிரேமச்சந்திரன் கொழும்பு ஊடகம் ஒன்றுக்கு கூறியுள்ளார். (ச-5)

# சூடுபிடிக்கும் ஈழத்தமிழர்...

போர்க்குற்றங்களை நிகழ்த்தியவர்களை போர்க் குற்றவாளிகள் என்று பிரகடனப்படுத்த ஐக்கிய நாடுகள் சபையை இந்திய அரசு வலியுறுத்த வேண்டும் எனவும், தமிழர்கள் அனைவரும், சிங்களவர்களுக்கு இணையாக கண்ணியமாக வாழ வகை செய்யும் வரையில், அனைத்து குடியுரிமைகளையும் தமிழர்கள் பெறும் வரையில், மற்ற நாடுகளுடன் இணைந்து இலங்கை அரசின் மீது பொருளாதாரத் தடையை விதிக்க மத்திய அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் தமிழக சட்ப்பேர வை நேற்றுமுன்தினம் தீர்மானம்நிறைவேற்றிருந்தது.

இந் நிலையில், இலங்கைக்கு இன்று உத்தியோகபூர்வ விஜயத்தை மேற்கொள்ளவுள்ள இந்திய உயர்மட்டக் குழுவின் முக்கிய உறுப்பினரான இந்திய பாதுகாப்பு ஆலோசகர் சிவ்சங்கர் மேனன் தமிழக முதலமைச்சர் ஜெயலலிதாவை நேற்று மாலை 5 மணியளவில் சந்தித்து பேசியுள்ளார்.

தமிழக முதலமைச்சராக மூன்றாவது முறையும் அண்மையில் தெரிவு செய்யப்பட்ட ஜெயலலிதா ஈழத்தமிழர்கள் விடயத்தில் தற்போது தீவிர கவனம் செலுத்தியுள்ளார்.

இலங்கை மீது பொருளாதார தடை விதிக்க வேண்டும் என நேற்று முன்தினம் தமிழக சட்டசபையில் தீர்மானம் நிறைவேற்றிய அவர், கச்சத்தீவை இலங்கையிடம் இருந்து மீட்க வேண்டும் என நேற்று தமிழக சட்டசபையில் தீர்மானம் நிறைவேற்றியுள்ளார்.

இந்நிலையில், இலங்கைக்குவிஜயம் செய்து அரசியல் தலைவர்களுடன் பேச்சு வார்த்தை நடத்தவுள்ள இந்திய பாதுகாப்பு ஆலோசகர் சிவ்சங்கர் மேனன் நேற்று தமிழக முதலமைச்சரை சந்தித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

இச்சந்திப்பு இலங்கை அரசாங்கத்திற்கு மேலும் அழுத்தங்களை ஏற்படுத்தக் கூடிய ஒன்றாக அமையுமென எதிர்பார்க்கப்படுகின்றது. (ச-5)

# இலங்கை வங்கி கிளை...

திறந்த நிலையிலுள்ளதை அவதானித்து முகாமையாளருக்கும் அருகிலுள்ள ஈ.பி.டி.பி அலுவலகத்தில் உள்ள பொலிஸாரிடமும் தகவலைத் தெரிவித்துள்ளார்.

இந்நிலையில் முகாமையாளர் உடனடியாக அங்கு சென்று பார்த்த போது, முன் கதவின் மூன்று பூட்டுகளும் உடைக்கப்பட்டு பின் அலுவலகக் கதவு உடைக்கப்பட்டு வங்கிக் கிளையின் பாதுகாப்பு பெட்டக அறைக்கதவு உடைத்து கொள்ளையர்கள் உள் நுழைந்தமை கண்டறியப்பட்டது.

பாதுகாப்பு பெட்டக அறையினுள் இருந்த இரண்டு இரும்பு பெட்டகங்களும் எரிவாயு (GAS) மூலம் உடைப்பதற்கு முயற்சி செய்யப்பட்டுள்ளது.

எனினும் இரும்புப் பெட்டகம் உடைக்க முடியாத நிலையில் கொள்ளையர்கள் வங்கிக்கிளையின் துவிச்சக்கர வண்டியை எடுத்துச் சென்றுள்ளனர்.

இச்சம்பவம் தொடர்பில் வங்கிக்கிளையின் முகாமையாளரிடம் கேட்டபோது,

கொள்ளையர்கள் பாதுகாப்புப் பெட்டகத்தினுள் இருந்த வங்கியின் பணத்தையும் அடகு நகைகளையும் கொள்ளையிடுவதனையே இலக்கு வைத்து முயற்சித்துள்ளனர்.

இதனாலேயே வங்கி அலுவலகத்தினுள் இருந்த பல இலட்சம் பெறுமதியான அலுவலக உபகரணங்களை விட்டுச் சென்றுள்ளனர் என்றார்.

இதேவேளை இச்சம்பவம் தொடர்பில் ஊர்காவற்றுறை பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ச-5)

## மரண அறிவித்தல்

### திருமதி நவரத்தினம் அன்னபூரணி

அளவெட்டி வடக்கை பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட திருமதி நவரத்தினம் அன்னபூரணி (08.06.2011) புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற தம்பிப்பிள்ளை மற்றும் உருக்குமணியம்மாவின் அன்பு மகளும், காலஞ்சென்ற கந்தையா நவரத்தினம் (ஓய்வூதியர்) இன் அன்பு மனைவியும், மாலதி (அமரர்), வசந்தி (கனடா), சுகந்தி (பிரான்ஸ்), மனோரதி (அருணோதயாக்கல்லூரி ஆசிரியர்) ஆகியோரின் அன்புத் தாயாரும், ஸ்ரீபிரகாசன் (கனடா), குகதாசசிங்கம் (பிரான்ஸ்), கணேசலிங்கம் (உதவிக்கல்விப் பணிப்பாளர், கிளிநொச்சி) ஆகியோரின் பாசமிகு மாமியாரும் அமிலினி (கிளி/இராமநாதபுரம் ம.வி), லகிந்தன் (யா/மகாஜனக் கல்லூரி), புகழினி (யா/மகாஜனக் கல்லூரி), சகானா, திவேந், சஜிந் (கனடா) ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும், நாகராசாவின் அன்புச் சகோதரியும், காலம்சென்ற அன்னம்மா, கண்மணி மற்றும் இராசநாயகம், சின்னராசா, கனகரத்தினம் லலிதாம்பிகை, சந்திரேஸ்வரி ஆகியோரின் மைத்துனியும் ஆவார். அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விபரம் பின்னர் அறிவிக்கப்படும்.

அம்மாள் கோவிலடி,
அளவெட்டி வடக்கு,
அளவெட்டி.

தகவல் :
சி.கணேசலிங்கம் (மருமகன்)
உதவிக்கல்விப்பணிப்பாளர், கிளிநொச்சி.

(5143)

டயானா பிளாஸ்ரிக் தொழிலகம்
சகல விதமான மோட்டார் சைக்கிள், வாகன உடைந்த பிளாஸ்ரிக் மீள் திருத்தம் செய்து தரப்படும்.
06, கனகசபை லேன்
சிவலிங்கப்புளியடி, K.K.S.Road
0212228680, 0775925088
(5148)

'கல்லார் நெஞ்சில் நில்லான் இறைவன்'
யா/வட்டு மத்திய கல்லூரி
பாடசாலை பழைய மாணவர் சங்கப் புனரமைப்புக் கூட்டம்
இடம் : கல்லூரி மண்டபம்
காலம் : 12.06.2011 ஞாயிற்றுக்கிழமை பி.ப. 3.00 மணி
மேற்படி கூட்டத்திற்கு பழைய மாணவர்களையும் கல்லூரியின் ஆர்வலர்களையும் அன்புடன் அழைக்கின்றோம்.
(5147) -கல்லூரிச் சமூகம்

A/L ? Pass / Fail
CIMA-UK Engineering-USA BIT University of Colombo Multimedia Adobe
SMS your name & course to 772395895 & Get Schol.
Government Scholarship.
USA, UK பல்கலைக்கழகங்களில் Master Degree
Closing Date 11.06.2011

MCS Supported By UNDP/JRRP
புலமைப் பரிசிலுக்கும் மேலதிக விபரங்களுக்கும் நேரில்,
324, Palaly Road, Campus Junction, Jaffna.
Free : BCS-UK, IELTS / TOEFL, CISCO-CCNA, Hardware, ICDL

இப்பத்திரிகை வலம்புரி அன்.கோஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 10.06.2011 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.